# இன்பத்திற்கு வழிகாட்டும் இந்துமதம்

கே. வி. குணசேகரம்.

## அணிந்துரை

இந்து சமயம் என்பது மாந்தர் தமை வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி சொல்லும் சமயம். சமயப் பண்பு யாதெனில் புராண இதிகாசப் பண்பாட்டு விழுமியங்களேயாகும். இந்து சமயத்தவர் தம் வாழ்வில் சமயத்தை ஒரு பகுதியாகக் கைக் கொண்டொழுகவில்லை. இந்துக்களின் வாழ்வே சமய வாழ்வு எனும்படி அமைக்கப்பட்டுள்ளது. சமயவாழ்வு வாழ்தலே வாழ்க்கையென்று சொல்லக்கூடிய வகையில் இந்துக்கள் சமயத்துடன் ஒன்றிப் பிணைந்துள்ளனர். சமயம் காட்டும் நெறிகளே அவர்களின் வாழ்க்கைப் பற்றுக்கோடாக அமைந்திருக்கிறது.

மற்றும் சமயங்களைப் போன்று, துறவும் சந்நியாசமும் தான் சமய வாழ்வு என்ற வரையறை இந்து சமயத்தில் இல்லை. வாழ்வின் ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை வாழ்க்கைக் காலத்தில் ஒவ்வொரு நிலைகளிலும் கைகொடுத்து வாழ வழி சொல்லும் சமயமாக இந்துமதம் இருக்கிறது. துறவையும் சந்நியாசத்தையும் வலியுறுத்தும் சமயங்கள் கால வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு விட்டன. ஆனால் சனாதன தர்மம் என்று போற்றப்படும் இந்துசமயம் ஆதியில் இருந்து இன்று வரை, இனிவரும் காலங்களில் கூட நிலை பெற்று நிற்கும் தன்மைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. வாழவழி சொல்லும் சமயமாக இந்துசமயம் இருப்பதனாற்றான் அதிலே பிரமச்சாரியம், இல்லறம், வானப்பிரஸ்த்தம், துறவறம் எனும் நான்கு நிலைகட்கும் ஒரே தன்மையான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அனுபவித்துத் துறப்பதனையே இந்துமதம் பூரணத் துறவாக ஏற்றுக் கொள்கிறது. இவ்வாறு வாழ்க்கையை வளம் பெற வைக்கும் கோட்பாடுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளமையால் தான், இந்துசமயம் பரந்து பட்டதாக ஒளி வீசுகிறது.

புராண இதிகாசங்கள் மூலம் மக்களின் வாழ்க்கைக்கு சகல நிலைகளிலும் வழிகாட்டலைச் செய்கிறது இந்துமதம். இன்றைய போர்க்காலச் சூழலும் அயல்நாட்டின் பணவருவாயிலும் ஆடம்பர வாழ்விலும் உள்ள மோகம், சமய நெறிகளைப் புறந்தள்ளி வெற்று வாழ்வுக்கு இளம் சமூகத்தினரை எடுத்துச் செல்கிறது. இவ்வாறான பண்பாட்டுச் சீரழிவை நோக்கிச் செல்லும் எமது சமுதாயத்திற்கு, முன்னை நாட்களில் இடம் பெற்றவை போன்று புராணபடனங்களைக் கேட்பதற்கோ, தேவாரதிருமுறைகளை ஓதியுணர்ந்து பக்தி செய்வதற்கோ நேரமில்லை என்ற மனப்பாங்கு நிலை உண்டு. புராணங்களும், இந்துசமயப் பண்பாட்டுப் பழக்கவழக்கங்களும் தேவையற்ற நடைமுறையென ஒதுக்கித் தள்ளும் மனோபாவம் வளர்ந்து வரும் இக்கால கட்டத்தில் இந்துசமயம் கூறும் வாழ்க்கை முறைகள் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழி கூறுகிறது என்பதனை இலகு தமழில் சுருக்கமாக எடுத்துக் கூறப்படல் வேண்டும்.

திசைமாறிச் செல்லும் இன்றைய சமூகம் சமயவாழ்வுக்குத் திரும்பவல்ல செயல்ப்பாடுகள் இன்று அதிகஅளவில் முன்னெடுக்கப்பட வேண்டி உள்ளது. சமய நிறுவனங்கள் பல நல்லாற்றுப்படுத்தும் வழி முறைகளைக் கைக் கொண்ட போதும் அவை போதுமானதாக இல்லை. எனவே சமயத்தின் உண்மைகளை எடுத்துக் கூறக் கூடிய இன்பத்திற்கு வழிவகுக்கும் இந்துமதம் எனும் நூலானது மக்கள் சமூகத்தின் சமய விழிப்புணர்வுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். சமயம் காட்டும் நெறி முறைகளை மிகவும் எளிமையாக இலகு தமிழில் எல்லோருக்கும் புரியும் வகையில் இந்நூலை ஆக்கியுள்ளார் ஆசிரியர். இந்நூலாசிரியர் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாசாலையின் அதிபராக இருப்பதனால் மாணவர்களின் சிந்தனை ஓட்டத்தை நன்கு புரிந்துள்ளார். நாளைய சமூகமாக மாறும் இன்றைய இளஞ்சிறார்களின் மனக்கருத்துக்களும் அவர்களின் நோக்கமும், எதிர்காலச் சிந்தனையும் எவ்வாறு அமையும் என்பதனை உணரும் சந்தர்ப்பம் இந்நூலாசிரியராகிய அதிபர் அவர்கட்கு கிடைத்திருக்கிறது. இளம் சமூகத்தினரை மையப்படுத்தி அவர்களின் வாசிக்கும் பக்குவத்திற்கேற்ப சிறுசிறு கதைகளை உதாரணமாகக் காட்டி வாழ்க்கை நெறிகளை விளக்கி இருப்பது போற்றத்தக்கது.

சமுதாய மேம்பாடொன்றையே குறிகோளாகக் கொண்ட நூலசிரியர் அவர்கள் சமயம் காட்டி நிற்கும் வாழ்க்கை முறைகளை சிறுசிறு தலைப்புக்களில் விளக்கியுள்ளார். “சந்தர்ப்பங்கள் சூழ்நிலைகள்” என்பது ஒவ்வொருவருக்கும் கிடைக்கிறது. இது தான் எமது சந்தர்ப்பம் என்று நாம் புரிந்து செயல்பட வேண்டும் என்பதனைத் தெளிவுபட வைப்பது மிகவும் நயக்கத்தக்கது. சந்தர்ப்ப சூழ்நிலைகளை உருவாக்குபவர்கள் உயர்வடைவார்கள். தாம் ஏற்ப்படுத்தாத சந்தர்ப்ப சூழ்நிலைகளின் கைகளுக்குள் அகப்படுபவர்கள் துன்பமடைவார்கள். ஏனெனில் நாம் உருவாக்கும் சந்தர்ப்ப சூழ்நிலைகளை எமக்குச் சாதகமாகவே உருவாக்குவோம் என்பதே உண்மையாகும். பகுத்தறிவு என்பது இறைவனால் மனிதனுக்கு வழங்கப்பட்ட அற்புமதான உள்ளாற்றல். இதன்மூலம் நாம் நல்லவற்றை தெரிவு செய்வது எமது கைகளிலே தான் உண்டு.

சமய வரன்முறைகளாக எடுத்துக் கூறப்படும் நிலைகள் அனைத்தையும் ஆசிரியா் நன்கு தெளிவுபட விளக்கியுள்ளாா். ஆசிரியரின் அனுபவமானது இங்கே நன்றாக வெளித்தெரிகிறது. உணவு வகை, துன்பங்கள் துயரங்கள், பொறுமை, கோவில், புராணங்கள், அன்பு, விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும், கல்வி, சேவை என்பன போன்ற விடயங்களை ஆசிரியா் மையக் கருத்தாகக் கொண்டு அவா் தம் கருத்தாக்கங்களை வெளியிட்டுள்ளாா். முதலாவதாக வரும் உணவு வகையை நோக்குவோமாயின் உணவு உணா்வை தரவல்லது. சாத்வீக உணவுகளை உண்பவா் சாத்வீக குணமுடையவா்களாக விளங்குவாா்கள் என்று கீதையில் கண்ணன் உரைத்த மொழியை நினைவு கூரத்தக்க வகையில் உணவின் தேவைகளை வரையறை செய்து காட்டுகிறாா் ஆசிரியா்.

"பிறா் நமக்குச் செய்யும் துன்பங்களைப் பொறுமையுடன் சகித்துக் கொள்வது தவம் செய்வதை விட மேலானது" என்று இந்துமதம் கூறும் கருத்தை ஆசிரியா் தெளிவுபட எடுத்துரைக்கிறாா். குடும்பப் பொறுப்புக்களைப் பொறுமையுடன் கைக் கொண்ட பெண்ணை மாமுனிவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்பது கதைவடிவில் அமைந்து எமக்கு வழிகாட்டுகிறது. புராணங்களும் இதிகாசங்களும் கதை வடிவில் எடுத்துக் கூறும் வாழ்க்கை நெறிமுறைகளை நாம் ஏற்றுக் கொள்வதில்லை. புராணங்கள் கூறுபவை உண்மையா? என்று கேள்வி எழுப்பி இவற்றை ஒதுக்கி விட முயல்கிறோம். அவற்றின் உள்ளாா்ந்த கருத்துக்களை எடுத்துக் கொள்ள முயலுவதில்லை. இதனாற்றான் இன்றைய சமுதாயச் சீரழிவுகளை நாம் சந்திக்கிறோம்.

"நீ எதை நினைக்கிறாயோ அதுவாய்" என்கிறது உபநிடதம். அதன் பொருள் எவ்வளவு யதாா்த்தமானது. நல்லவற்றைச் சிந்திப்பவன் நன்மையடைவதும், தீயவற்றைச் சிந்திப்பவன் துன்பமடைவதும் சாதாரணமான விடயம். இதனைக் கூட நாம் சிந்திப்பதில்லை. எமக்கு ஏன் கஷ்டம்? எமக்கு ஏன் துன்பம் என்று அங்கலாய்க்கிறோம். இவற்றிற்கெல்லாம் பரிகாரம் நாம்தான் என்று உணரவேண்டும். நாம் செய்து நாமே அனுபவிக்கிறோம். இதனையே சுருக்கமாக "நீ எதை நினைக்கிறாயோ அதுவாகிறாய்" என்று உபநிடதம் கூறுவதனை ஆசிரியா் வலியுறுத்தி உள்ளது மேன்மையானது.

"பட்டம் பதவி யாவும் சேவையால் மேன்மையடைகிறது" என்று ஆசிரியா் குறிப்பிட்ட வரிகள் நாம் சிந்திக்கத் தக்கது. சேவை என்பது என்ன என்றே தெரியாத காலம் இது. தன்னலம் கருதி, தமது இலாபம் கருதித் தொழிற்படும் காலகட்டத்தில் ஆசிரியா் விளக்கியுள்ள சம்பவம் மிகவும் அற்புதமானது. இன்றைய கால கட்டத்தில் சேவை மனப்பாங்கு அருகி வரும் நேரத்தில் ஆசிரியா் சுட்டும் சம்பவத்தை வாசிக்கும் ஒருவராவது சேவையுள்ளம் அமையப் பெறுவாராயின் ஆசிரியா் எழுதியதை பயன்தரும் சேவையைப் புரிந்து கொண்டு செயல்பட்டு வருவோம் என நாம் உறுதி கொள்ள வேண்டும்.

ஆசிரியரின் "இன்பத்துக்கு வழிகாட்டும் இந்துமதம்" எனும் இந்நூலின் ஒவ்வொரு வாக்கியமும் அா்த்தமுள்ளது. ஒவ்வொரு சொல்லும் பொருள் பொதிந்தது. ஒவ்வொரு விடயமும் எம்மால் கைக்கொண்டு ஒழுகப்பட வேண்டியது. இது போன்ற நூல்கள் சமுதாயத்துக்கு மிகவும் பயன்படக்கூடியவை. எனவே இந்நூலில் உள்ள ஒவ்வொரு தொகுதியையும் நாம் உளம் கொண்டு ஒழுகி வருவோமானால் எம் வாழ்வு உயரும் என்பதனை எல்லோரும் உணர வேண்டும். மக்களின் உயா்வையே உள்ளத்தில் பதித்து ஆசிரியா் அவா்கள் வெளியிட்டுள்ள இந்நூல் ஒவ்வொரு இந்து இளையோரிடமும் இருக்க வேண்டிய நூலாக அமைந்துள்ளது.

"சிவானந்தவாரிதி, வாரியாா் வாரிசு"
சிவத்திரு.வ.குமாரசாமி ஐயா.

***என்னுரை***

“கற்றது கைம்மண் அளவு” என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். நான் கைமண்ணளவு கூடக் கற்றேனோ தெரியாது ஆனால் நம் முன்னோர் அருளிய பல நூல்களை எனது எழுத்திற்குப் பயன்படுத்துவதற்காக் கற்றேன். ஔவையாரின் ஆத்தி சூடிச் சூத்திரங்கள், திருக்குறள் போன்றவற்றைச் சற்று ஊன்றிக் கவனித்தேன். அவற்றை இன்னும் பலர் சமய நூல்களாகவே கருதுகின்றனர். இன்று இலங்கையில் உள்ள பிரபலமான ஒரு நாவலாசிரியரை அணுகி எனது திருக்குறள் கதைகளுக்கு ஓர் அணிந்துரை தருமாறு கேட்டேன். அவர் தனக்குச் சமயத்தைப் பற்றி எதுவும் தெரியாது என்று கூறினார். இந்நிலையில் தான் நமது மக்கள் வாழ்கிறார்கள். சமயம் என்பது “வாழ்க்கை” என்றே நான் கருதுகிறேன். வாழ்க்கையை நல்ல முறையில் வாழும் படி எமது சமய நூல்கள் கூறுகின்றன. புராணங்கள், இதிகாசங்கள் யாவும் வேத உபநிடதங்கள் கூறும் வாழ்க்கைநெறிகளாகும்.

இந்த வகையில் இந்து சமயத்தில் கூறப்பட்ட கருத்துக்களை மக்களின் வாழ்க்கையோடு சம்மந்தப்படுத்தி இக்கட்டுரைகளை எழுதியுள்ளேன். தமிழ்நாட்டில் உள்ளவர்கள் எழுதினால் தான் அது கதை; கட்டுரை; சமயத்தத்துவம் என்று இங்குள்ள பலர் நினைக்கிறார்கள். அந்தக் கருத்தை மாற்றி இங்குள்ளவர்களாலும் எதையும் எழுத முடியும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளேன். அறநீதிக் கருத்துக்கள் விளங்காத வாக்கியங்களாக இருக்கக் கூடா தென்பதற்காகவே பழந்தமிழ் நூல்கள் சிலவற்றிற்குக் கதைகள் எழுதி வருகிறேன். எமது நாட்டின் கலை, கலாச்சாரம், பண்பாட்டிற்கேற்ற வகையில் திருக்குறள் பாக்கள் 1330 இற்கும் கதை எழுதிய நான், அவற்றைத் தத்துவ மூலமாக இங்கு கட்டுரைகளாகத் தந்திருக்கிறேன். இப்பணி வெற்றியளிக்கும் பட்சத்தில் தொடர்ந்து பகுதி பகுதிகளாகக் கட்டுரைகள் வெளி வரும்.

இந்நூலுக்கு நல்லதொரு அணிந்துரையைப் பெற்றுத் தந்தவரும், எனக்குப் பல சமய ஆலோசனைகளை வழங்கி வருபவரும், சிறந்த சைவச் சிந்தனையாளரும், துர்க்காபுரம் கிராமசேவகருமான திரு.நா.சிவநாதன் அவர்களுக்கும், இக்கட்டுரைகளை மிகவும் சிறந்த முறையில் கணனியில் பதித்து, பிழைகள் திருத்தித் தந்தவருமான செல்வி க.சுகந்தினிக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன்.

“மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்”

***கே.வி.குணசேகரம்,***
***அதிபர்,***
***யா/நாவலர் தமிழ் வித்தியாலயம், கோப்பாய்.***

***கோயில்***

“கோ” என்பது ‘கோன்’ என்றும் கொள்ளத்தக்கது கோ, கோன் என்பன அரசனைக் குறிக்கும். கோ மாதா என்ற பதம். பசுவைக் குறிக்கும். கோயில் என்பது அரண்மனையையும் குறிக்கும். அரசன் வாழும் இல்லம் கோயில். அரசர்களுக்கெல்லாம் அரசன் இறைவன். அவன் உறையும் இடத்தையும் கோயில் என்பார்கள். உலகத்தைப் படைத்து காத்து அருளி மறைந்து அழிக்கும் இறைவன் குடி கொண்டுள்ள இடம் கோயிலாகும்.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா மென்று ஔவையார் கூறியிருக்கிறார். நாம் கோயில் உள்ள இடங்களைத் தேடிக் குடியமர முடியாது. நாம் இருக்கும் இடங்களிலேயே கோயிலை அமைத்துக் கொள்ளல் வேண்டும்.

கோயில் என்ற பதம் சிதம்பரத்தையும் குறிக்கும். கோயில்கள் எப்படி அமைய வேண்டு மென்று ஆகமங்கள் கூறுகின்றன. ஆகம முறைப்படி தான் கோயில்கள் அமைக்க வேண்டு மென்று கட்டாயமில்லை. குலதெய்வங்கள், கிராமியத் தெய்வங்கள், சிறு தெய்வங்களென ஏராளமான தெய்வங்கள் இருக்கின்றன. இத்தகைய தெய்வங்களுக்கு எங்கும் கோயில் அமைத்து வழிபடலாம் அதைவிட சாணியை எடுத்து அறுகம் புல்லை நாட்டி விநாயகரை உருவாக்கி வணங்கலாம்.

இறைவன் எங்குமுள்ளவன்; எந்த வடிவை எடுப்பவன்; எல்லா உயிர்களுக்கும் அருளுபவன்; இரக்கம்மிக்கவன்; கேட்டவரம் கொடுப்பவன், இப்படியெல்லாம் பழைய நூல்கள் கூறுகின்றன.

உலகத்தைப் படைக்கும் கடவுள், தனக்கு ஒரு கோயிலை அமைக்க முடியாதா அப்படியிருக்க ஏன் மனிதர்கள் கடவுளுக்கு கோயில் கட்ட வேண்டும்?” என்று கேட்பவர்களும் உள்ளனர்.

இறைவன் அடியவர்க்கு அடியவன், பக்தர்களுக்காக எதையும் செய்பவன், பக்தர்கள் இறைவனுக்குக் கைமாறாக எதைச் செய்கிறார்கள்? கோயில்களைக் கட்டுகிறார்கள், பொங்கிப் படைக்கிறார்கள்.

ஆழ்வார்களும், நாயன்மார்களும் இறைவனை வேண்டிப் பாடினார்கள். இசையில் மயங்கிய இறைவன் அவர்களைத் தம்மருகில் வைத்துக் கொண்டான்.

இராஜஇராஜசோழன் பெருங் கோயில் கட்டிய போதும் இறைவன் பூசலார் கட்டிய மனக் கோயிலில் தான் குடிபுகுந்தார். இதை அறிந்து தான் திருமூலர்; “உள்ளம் பெருங்கோயில்” என்றார். மனதால் உருகி வழிபட முடியாத சாதாரண மக்களுக்குத் தான் கோயில்கள் தேவை. பக்தர்கள் தாம் இருக்குமிடத்திற்கு இறைவனை அழைத்து விடுவார்கள்.

இன்பதுன்பங்களை மறந்து ஆத்ம ஈடேற்றத்திற்காகச் சில மணி நேரங்களைக் கழிக்கும் இடமாகக் கோயில்கள் விளங்குகின்றன. கோயில் வாசலை அடைந்தவுடனேயே உலகை நாம் மறந்து விடுகிறோம். பற்று, பாசம், வீட்டு நிலைமை எதுவும் மனதில் தோன்றாது. மேலோர், கீழோர், பணக்காரன், ஏழை என்ற பேதம் ஏற்படாது. கடவுளின் நினைவு ஒன்றே இருக்கும்.

மனிதன் உணர்ச்சிகளின் உருவம். உணர்ச்சிகள் மனிதனை மாற்றியமைக்கின்றன. இவ் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தியவனே வாழ்க்கையில் வெற்றி பெற்றவனாகிறான். இந்த உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் முக்கிய இடமாக விளங்குவது கோயில். துன்பங்கள், துயரங்கள் ஒரு மனிதனைத் தானாக வந்தடைவதில்லை. அவை ஏதோ ஒரு காரணத்தினால் தான் அவனை வந்தடைகின்றன. அப்படியானால் அந்தக் காரணம் என்ன? எல்லோரும் விதி என்கிறார்கள். விதியை யார் படைத்தது? அது ஏன்எம்மைத் தொடர்கிறது? எமக்குத் தொடர்பில்லாத ஒன்று எம்மை ஏன் பின் தொடர வேண்டும். இப்படியான கேள்விகள் எம்முள் எழலாம். இந்த விதி யாரால் எழுதப்பட்டது. இறைவனால் என்றால், ஏன் இறைவன் எழுதினார். உயிர்கள் மீது அளவு கடந்த அன்பு வைத்திருக்கும் இறைவன் எமக்கு துன்பத்தைச் செய்வாரா? அப்படியானால் யார் இதை எழுதியது?

ஒவ்வொன்றிற்கும் மூலம் ஒன்று உள்ளது. தொடர்புகள் இல்லாமல் நிகழ்வுகள் நிகழாது.

இந்துசமயத் தத்துவத்தின் படி உயிர்களை இறைவன் படைக்கிறான். படைப்பு என்றோ நிகழ்ந்து விட்டது. படைக்கப்பட்ட உயிர்கள் ஒரு போதும் கூடிக் குறைவதில்லை. புதிதாகப் படைக்கப்படுவதும் இல்லை அழிவதும் இல்லை என்று இந்துசமயம் கூறுகிறது.

மாணிக்கவாசகர் திருவாசகத்தில் சொல்கிறார்

“புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்

பல்ருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்
சொல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்''

இப்படியாகப் பல பிறப்புக்களை எடுக்கும் உயிரானது ஒவ்வொரு படைப்பிலும் ஏராளமான தீமைகளைச் செய்கிறது. புண்ணியம் செய்த ஆன்மாக்கள் நற்பிறப்பை அடைகின்றன. பாவம் செய்த ஆன்மாக்கள் துன்பத்தில் உழலுகின்றன. எடுத்த மனிதப்பிறவியில் முத்தியடைந்தவர்கள் ஏராளமுண்டு. விதியை மதியால் வெல்ல முடியும் என்கிறார்கள். புராணங்களில் விதியை மதியால் வென்றவர்களின் வரலாறுகள் கூறப்படுகின்றன.

உதாரணத்திற்கு மார்க்கண்டேயரின் வரலாற்றைக் கூறலாம்.

கோயில்களில் பிரார்த்தனைகள் செய்வதன் மூலம் விதியை மாற்றலாமென்று இந்துசமயம் கூறுகிறது.

பிறப்புக்களில் செய்த தீமைகள் தான் விதி என்று எம்மைப் பின் தொடர்கின்றன. பாவம் செய்யாதிருந்தால் பிறப்பில்லை. பிறப்பில்லா விட்டால் துன்பமில்லை.

ஒவ்வொரு மனிதனுக்கும் குறைகள் உள்ளன. துன்பங்கள் உள்ளன என்பதை நாம் புரிந்து கொள்ளல் வேண்டும். குறைகள் நீங்கினால் துன்பம் குறையும். துன்பம் குறைந்தால் வாழ்க்கை சிறக்கும். ஆனால் சராசரி மனிதனுக்குக் குறைகள் ஒரு போதும் நீங்குவதில்லை. கோயிலில் சென்று துன்பங்களை நீக்குவதற்குப் பதிலாக கூட்டிக் கொண்டு செல்வோர் தொகை தான் கூடுதலாக உள்ளது.

கோயில்களில் செய்யும் பிரார்த்தனைக்குச் சக்தி அதிகம். கூட்டாகச் சேர்ந்து பஜனை செய்வதன் மூலம் மனம் லேசாகிறது. துன்பங்கள் குறைகின்றன. கோயிலில் ஆயிரமாயிரம் அடியார்கள் வருவார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளும் போது அவர்களை விட எனக்குத் துன்பங்கள் குறைவு என்ற நினைவு எமக்கு வருகிறது. அவர்களுக்கு உதவி செய்ய வேண்டு மென்ற எண்ணம் எமக்கு வருகிறது. சமூகசேவை செய்ய வேண்டு மென்ற நினைவு வருகிறது.

''என்கடன்பணி செய்து கிடப்பதே'' என்று நாவுக்கரசர் கூறியிருக்கிறார். இதையே தாரக மந்திரமாக எடுத்துக் கொண்டால் நிம்மதி தானாக வரும்.

பிறப்பறுக்கும் எம்பெருமான் கோயிலிலே எழுந்தருளியிருப்பதால் அங்கு சென்றால் மனதிற்கு நிம்மதி தோன்றும். நம்பிக்கை வளரும்; ''நாம் யார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்'' என்று நாவுக்கரசர் பாடியது இறைவன் மீதுள்ள நம்பிக்கை மிகுதியால் தான். எனவே கோயில்களுக்குச் சென்று வழிபடுவதை வழக்கமாக்கிக் கொண்டால் துன்பம் வராது.

### *சந்தர்ப்பங்கள் சூழ்நிலைகள்*

சந்தர்ப்பங்கள் சூழ்நிலைகள் எல்லா உயிரினங்களுக்கும் வந்து போகின்றன. சந்தர்ப்ப சூழ்நிலைகள் இறைவனால் உயிரினங்களுக்குக் கொடுக்கப்படும் வரம். அவற்றை நல்ல முறையில் பயன்படுத்தி உயர்ந்தவர்கள் பலர் இருக்கின்றனர். அவற்றை தவறான வழியில் பயன்படுத்தி கெட்டழிந்து போனவர்களும் உண்டு. அவற்றைப் பயன்படுத்தத் தெரியாமல் அப்பாவிகளாக இருப்பவர்களும் உண்டு.

வாழ்க்கையில் சந்தர்ப்ப சூழ்நிலைகள் எப்போதாவது ஒரு முறை தான் வரும். அதை நல்ல முறையில் பயன்படுத்தி தம் வாழ்க்கையை மேன்மையடையச் செய்தல் வேண்டும்.

சந்தர்ப்ப சூழ்நிலைகளை உருவாக்குபவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் மகா புத்திசாலிகள். தம்முடைய நன்மைகாக, நாட்டின் நன்மைக்காக, மக்களின் நன்மைக்காக, சமூகத்தின் நன்மைக்காக, கடவுளிடம் வேண்டி எது எது செய்ய வேண்டுமோ அதை அதைச் செய்வதற்கான சந்தர்ப்ப சூழ்நிலைகளை உருவாக்குகிறார்கள்.

இந்து சமயத்தை எடுத்துக் கொண்டால் நாயன்மார்கள், ஆழ்வார்கள், முனிவர்கள், அரசர்கள், அசுரர்கள் போன்றோர் தமது காரியத்தைச் சாதிப்பதற்கான சந்தர்ப்ப சூழ்நிலைகள் உருவாக்கியுள்ளார்கள். அத்துடன் சமய வளர்ச்சிக்காகக் கடவுளே பக்தர்களுக்குச் சந்தர்ப்ப

சூழ்நிலைகளை உருவாக்கிக் கொடுத்துள்ளார். அக்கிராமங்களை அழிப்பதற்கு இந்துமதக் கடவுள்கள் பலர் சந்தர்ப்பம் சூழ்நிலைகளை உருவாக்கியுள்ளமையை புராண இதிகாசங்களில் காண்கிறோம்.

நியாயமான, நீதியான ஒரு செயலுக்கு சந்தர்ப்ப சூழ்நிலைகளை உருவாக்கினால் வெற்றியடையலாம் என்பதற்கு நாயன்மார்களும், ஆழ்வார்களும் சாட்சியாக உள்ளனர். அநியாயங்கள் செய்வதற்காகச் சந்தர்ப்ப சூழ்நிலைகளை உருவாக்கியோர் அச்சந்தர்ப்ப சூழ்நிலைகளாலேயே அழிந்தொழிந்து போனதைப் பாரதமும் இராமாயணமும் கந்தபுராணமும் மிக அழகாகக் கூறுகின்றன.

சந்தர்ப்ப சூழ்நிலைகளை உருவாக்கி மனிதனைச் சோதிப்பதை இறைவன் தன் பணியாகக் கொண்டிருக்கிறான். அப்பரை, சுந்தரரை, மாணிக்கவாசகரை, சம்பந்தரை எப்படியெல்லாம் சோதனை செய்தார்.

அரிச்சந்திரன் ஒரு பொய்யைக் கூறியிருந்தால் தனக்கேற்பட்ட துன்பங்களைத் தவிர்த்திருக்கலாம். எப்படியான சந்தர்ப்பம் சூழ்நிலைகள் வந்த போதும் அவன் தன்னை இழக்கவில்லை. தர்மத்தை மறக்கவில்லை. அதனால் தான் அவன் இறந்தும் இன்று வரை மனித மனங்களில் வாழ்கிறான். கடைசி மனிதன் இருக்கும் வரை அரிச்சந்திரன் அவனது மனதில் வாழ்வான்.

சந்தர்ப்ப சூழ்நிலைகளால் இறைவன் எம்மைச் சோதிக்கிறான். எந்த நிலையிலும் தர்மமான முறையில் நடந்தால், நாம் முன்னேறச் சந்தர்ப்பங்களை அடிக்கடி இறைவன் எமக்கு உருவாக்கிக் கொடுப்பான். அனுபவங்கள் தான் மனிதனை வழிநடத்துகின்றன. ஞானிகள், மேதைகள் கூறியவற்றையெல்லாம் ரசித்து வாசிக்கிறோம். ருசித்து விவாதிக்கிறோம் ஆனால் நடை முறைப்படுத்துகிறோமா...?

கேடுகளைப் பற்றியெல்லாம் ஞானிகள் கூறியிருக்கிறார்கள். பலர் கேடு வந்த பின் தான் கோயிலுக்குச் செல்கிறார்கள். நாம் கற்ற கல்வி, பெற்ற அனுபவங்கள் எம்மில் பலரைத் திருத்தவில்லை. பாமரர்களை விடப் படித்தவர்கள் கூட படித்த படி நடப்பதில்லை.

நீதி, நியாயம், தர்மங்களை விட்டு ஓடி அலைந்து களைத்துச் சோர்ந்து விரக்தியடைந்த பின்பு தான் கடவுளை நம்புகிறோம். எம்மால் இயலாது என்று தெரிந்த பின்பு தான் கடவுளிடம் பாரத்தை ஒப்படைக்கிறோம். மனிதர்கள் எப்பொழுதும் வீட்டு ஈயைப் போலவே இருக்கிறார்கள். தேனீயைப் போல் இருக்க பழகிக் கொள்ள வேண்டும் என்கிறார் இராமகிருஷ்ண பரமகம்சர்.

வீட்டுஈயும் கல்வி கற்கவில்லை. தேனீயும் கல்வி கற்கவில்லை. ஆனால் பிறப்பின் மகத்துவத்தால் தேனீ தேனுள்ள மலர்களைத் தவிர வேறு எதிலும் இருப்பதில்லை. ஆனால் வீட்டு ஈ மலத்திலும் இருக்கும். மலரிலும் இருக்கும். மனிதனானவன் தன் பிறப்பை உணர வேண்டும், குலத்தை உணர வேண்டும், மனிதத் தன்மையை உணரல் வேண்டும்.

பொதுவாக விதி என்பார்கள், இறைவனின் செயல் என்பார்கள், கிரகதோசம் என்பார்கள்.

விதி என்பது மேலே உள்ள யாரோ ஒருவர் எழுதி வைப்பதல்ல. நமக்கு நாமே எழுதிக் கொள்வது. மனித மேம்பாட்டிற்கான பொது விதி ஒன்றுள்ளது. இறைவன் மூளையைப் படைத்துள்ளான். சிந்திக்கும் ஆற்றலைத் தந்துள்ளான். அவற்றின் மூலம் நல்லவற்றைச் சிந்திக்காது தீயவழியில் நடந்து விட்டு எமது விதிப்பயன் என்றால் எப்படி ஏற்றுக் கொள்வது.

மனிதனைச் சோதிப்பதற்காக இறைவன் துன்பங்களையும் இன்பங்களையும் தருகிறான். துன்பத்திலும் கலங்காத மனிதனின் வாழ்வு சிறப்படையும். இன்பத்திலும் பெருமை கொள்ளாத மனிதனின் வாழ்வு சிறப்படைகிறது.

''நன்றும் தீதும் பிறர்தரவாரா..'' என்று இரண்டாயிரமாண்டுகளுக்கு முன்பே எமது முன்னோர் கூறி விட்டனர்.

அனுபவங்களின் மூலம் தான் நாம் கற்க வேண்டுமென்றால், நீண்டகாலம் செல்லும். எல்லா அனுபவங்களும் எம்மைத் தேடி வராது. அதை விட எல்லா அனுபவங்களையும் உருவாக்கவும் முடியாது. எமது உறவினனுக்கு, அயலவனுக்கு, நண்பனுக்கு ஏற்படுகின்ற நிகழ்வுகள் மூலமும் நாம் அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். நூல்கள் மூலமும் புராண இதிகாசக் கதைகள் மூலம் நாம் அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

பயனற்ற செயல்களால் காலம் வீணாகிறது. பணம் விரயமாகிறது. மனம் சோர்வடைகிறது.

தீய நண்பர்களால் ஒழுக்கம் சீரழியும், சமூகம் வெறுக்கும், வாழ்க்கை நாசமாகும்.

ஆணவத்தால் அறிவு செயலிழக்கும். ஆரவாரங்களால் தற்பெருமை அதிகரித்து கேட்டை உண்டு பண்ணும்.

அமைதியான போக்கும் தலைக்கனமில்லாத நிலையும் மனிதனை மேம்பாடடையச் செய்யும்.

வாசிப்பென்பது நல்வாழ்வுக்கான அத்திவாரம். நல்ல நூல்களைத் தேடிக் கற்பது பெரும் மாடமாளிகைகளில் வாழ்வதற்கொப்பானது. நல்ல நூல்களைத் தேடிக்கற்றால் நல்ல அனுபவங்கள் ஏற்படும். அனுபவங்கள் நல்வாழ்வை மட்டுமல்ல நல்ல புத்திரர்களை, ஏராளமான சொத்து, சுகத்தை, நிம்மதியான வாழ்வை, உயர்ந்த நிலையைக் கொடுக்கும். அனுபவமே சிறந்த ஆசான். எனவே நாம் சந்தர்ப்ப சூழ்நிலைகளை உருவாக்கி நற்செயல்களைச் செய்தல் வேண்டும்.

***துன்பங்கள் துயரங்கள்***

பிரச்சினைகள், துன்பங்கள், கஷ்டங்கள், கவலைகள், இல்லாத இன்பமான ஓர் இடம் எங்காவது இருக்கா? அப்படி இருந்தால் அந்த உலகம் முழுமையான உலகமாக இருக்க முடியாது.

இந்துமதம் துன்பங்களைப் பற்றிக் கூறுகிறது; நிலையாமையைப் பற்றிக் கூறுகிறது. இவ்விரண்டின் மூலம் தான் இந்து தத்துவமே உருவானது.

பிரச்சினைகள் இல்லாத குடும்பங்கள் இல்லை. தகராறு இல்லாத சமூகம் இல்லை. சண்டை இல்லாத நாடுகள் இல்லை. துன்பங்களில் இருந்து விடுதலை பெறும் மனிதன் நிலையான இன்பத்தை எந்நாளும் கொடுக்கும் இறைவனின் அடியை அடைகிறான்.

துன்பத்தை வெல்ல முடியாதவன் மாணிக்கவாசகர் கூறுவது போல புல்லாகிப்பூடாய் புழுவாய் மரமாகி பல்வேறு பிறப்புக்களை எடுத்துத் துன்பப்படுகின்றான்.

உலகத்தில் வாழ்வதே துன்பம். ஒருவனுக்கு வேலை இல்லை இன்னொருவனுக்கு வேலை செய்ய நேரம் இல்லை. ஏழைக்கு சாப்பாட்டுப் பிரச்சினை பணக்காரனுக்கு சாப்பிடுவதில் பிரச்சினை, ஏழை வயிறு நிறைய சாப்பிட ஏதாவது கிடைக்காதா என்று நினைக்கிறான். ஆனால் பணக்காரன் வீட்டில் நிறைந்து இருக்கும் சாப்பாட்டை சாப்பிட முடியவில்லையே என்று கவலைப்படுகிறான்.

பொருளாதாரம் உள்ளவனுக்கு பிள்ளைகள் இல்லை. சாப்பிட வழியில்லாத பரதேசிக்கு பத்துப் பிள்ளைகள். பணக்காரனின் பிள்ளை பாடசாலைக்குச் செல்ல மறுக்கிறது. ஏழைப்பிள்ளைகளுக்கு பல்கலைக்கழகம் செல்லப் பணவசதி இல்லை.

இந்துமதம் துன்பங்களை சொல்லி அச்சுறுத்துகிறது என்று பலர் சொல்கிறார்கள். அதில் எந்தவிதமான உண்மையும் இல்லை. இந்துமதம் துன்பத்தைப் பற்றிச் சொல்லி மனிதனைப் பண்படுத்துகிறது. தீமைகள் செய்வதால் வரும் பலன்களைச் சொல்லி தீமைகளைச் செய்யாமல் இருக்கச் சொல்கிறது. துனபங்கள் தான் இன்பத்திற்கு காரணமாகிறது என்கிறது. இறைவனை நம்பினால் எந்தத் துன்பமும் வராது என்று அடித்துக் கூறுகிறது. பதினாறு வயது வரை ஆயுளைப் பெற்ற மார்கண்டேயன் பதினாறு வயது முடிந்ததும் இறைவனின் மீது கொண்ட நம்பிக்கையால் அவனது உயிரைக் கவர வந்த காலனைச் சிவன் காலால் எட்டி உதைத்து மார்க்கண்டேயரைக் காப்பாற்றினார். இவ்வேளையில் சிவன் செய்தது மகா தவறு. தனது சேவகர்களைக் கொண்டு உயிர்களைக் கவரும் தொழிலை யமனுக்குக் கொடுத்ததே சிவன் தான். இருந்த போதும் இறை நம்பிக்கையை உணர்த்த வேண்டும் என்பதற்காக திருவிளையாடல் புரிந்தார்.

கண்ணன் பகவத்கீதையிலே இப்படிக் கூறுகிறான்; ''எல்லாவற்றையும் என்னிடம் ஒப்படைத்து விட்டு என்னைப் பரம் எனக் கொள். வேறோன்றில் பற்றையழித்து என்னைத் தியானித்து வழிபடு. இறப்பும் பிறப்புமாகிய கடலிலிருந்து உன்னை நான் கைதூக்கி விடுவேன்''.

கிராமங்களில் அடிக்கடி பலர் இப்படிக் கூறுவதுண்டு; ''எந்த நேரமும் கோயில் வாசலிலேயே இருக்கிறேன். எல்லா விரதங்களும் பிடிக்கிறேன். நான் ஈ எறும்புக்குக் கூடத் துன்பஞ் செய்யவில்லை. எனக்குத் தான் தினமும் கஷ்ரம், கரைச்சல். கோயில் வாசலையே அறியாத பலர் ஓஹோ வென்று நன்றாக இருக்கிறார்கள்''.

பக்தர்களைத் தான் இறைவன் அதிகமாகச் சோதிப்பதுண்டு. அரிச்சந்திரனை, திருநாவுக்கரசரை, மாணிக்கவாசகரை, கண்ணப்பரை.. இப்படியாக ஒவ்வொருவரையும் எப்படி எப்படியெல்லாம் சோதித்தார். ஆனால் இறுதியில் அவர்கள் தான் நித்திய இன்பத்தைப் பெற்றனர். சோதனைகள், துன்பங்கள், துயரங்கள் பலவும் இறைவன் மனிதனைச் சோதிக்கும் கருவிகள். படிக்கும் மாணவனுக்குப் பரீட்சை வருவது போல மனிதனின் முன்னேற்றத்திற்குத் துன்பங்கள் சோதனையாக வருகின்றன. பரீட்சையில் நல்ல முறையில் சித்தியடையும் மாணவன் வாழ்வில் பெரும் பேற்றைப் பெறுவது போலத் துன்பங்களை வெல்லும் மனிதனும் பெரும் பேற்றைப் பெறுவானென இந்துமதம்

கூறுகிறது. எனவே துன்பங்களைக் கண்டு கலங்காதீர்கள். அதைச் துச்சமாக மதியுங்கள். அது தூசாகப் பறந்து விடும்.

### *பெண்ணின் நிலை*

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்று கண்ணதாசன் பாடியுள்ளார். இது எவ்வளவு உண்மை. குடும்பத்தை நல்ல நிலைக்கு கொண்டு வருவதும், கெட்டழிய வைப்பதிலும் முக்கிய பங்கு வகிப்பவள் பெண். பிள்ளைகள் நல்லவராவதும் கெட்டவராவதும் அன்னை வளர்ப்பினிலே என்றும் கண்ணதாசன் கூறியுள்ளார். தாரமாகித் தாயாகும் பெண்ணின் குணவியல்புகளைப் பற்றியும் பண்பாடுகள் பற்றியும் இந்துமதம் அக்கறையுடன் கூறுகிறது.

இந்துமதம் பெண்ணை அடிமைப்படுத்தியுள்ளது என்று கண்டிப்பவர்கள் பலர் இருக்கிறார்கள். சிவன் தன்னுடலில் சரிபாதியை உமைக்குக் கொடுத்து அர்த்தநாரீஸ்வரராக இருக்கிறார்.

பூமியை, நதியை, நிலவை இப்படி இயற்கையின் முக்கியமான அம்சங்களை யெல்லாம் இந்துமதம் பெண்ணாக உருவகித்துத் தாயாகப் போற்றுகிறது.

இந்துமதத்தில் சக்தி வழிபாடு மிகவும் முக்கியமானது. சிவனுக்கே சக்தியைக் கொடுப்பவள் உமை. அந்தளவில் பெண்ணைத் தெய்வமாக்கிப் பூசை செய்து வழிபடுவது இந்துமதமரபு.

ஒழுக்கம் என்று கருதும் போது பெண்ணில் தான் ஒழுக்கம் பிறந்தது. பெண் தான் ஒழுக்கத்தைப் பேண வேண்டியவள். அவள் விளை நிலத்தைப் போன்றவள். நல்ல பண்பண்ட நிலத்தில் தான் பயிர்கள் செழித்து வளர்ந்து நல்ல பயனைத் தரும். எனவே பெண் ஒழுக்கத்தில் பண்பட்டவளாக இருத்தல் வேண்டும். ஏனெனில் ஒரு குடும்பத்தின் வித்தாக இருப்பவள் பெண்.

ஒரு பெண் அன்னிய ஆடவர்களோடு பழகக் கூடாது; கலகலப்பாக சிரித்துப் பேசக்கூடாது; பொதுவாக வீட்டை விட்டு வெளியே வரக் கூடாதென்று இந்துமதம் கூறுவதாக சொல்லப்படுவதில் எந்த விதமான உண்மையும் இல்லை. ஆண்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு விதமானவர்களுடன் பழக வேண்டிய தேவை இருக்கிறது. தேவைக்கேற்ப ஆண்கள் கதைப்பதைப் போல் பெண்களும் கதைக்கத்தானே வேண்டும். முன்புள்ள சமுதாய அமைப்பில் பெண்கள் வெளியே செல்ல வேண்டிய தேவை இருக்கவில்லை. ஆண்கள் பலருடன் உறவாடும் சந்தர்ப்பங்கள் இருக்கவில்லை. அதனால் நூல்கள் அப்படிக் கூறியிருந்தன. ஆனால் இந்துமத சாஸ்திரங்கள் இதைப்பற்றிக் கூறவில்லை.

பெண் ஆணுக்கு துணை. ஆண் பெண்ணுக்குத் துணை இதனால் பெண்ணைத் துணைவி என்றும் ஆணை துணைவன் என்றும் பெரியவர்கள் கூறுகிறார்கள். மனைவி என்பது மனைக்குத் தலைவி. அதாவது குடும்பத் தலைவர் கணவன் என்றால் அவன் குடும்பத்திற்கு கண் போன்றவன். அதாவது வழிநடத்துபவன். பெண்கள் இயல்பாகவே கூச்ச சுபாவம் உடையவர்கள். மென்மையானவர்கள், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் குணங்களை உடையவர்கள். இதனால் பலசாலியான ஓர் ஆணின் துணை அவர்களுக்குத் தேவையென்று இந்துமதம் கூறுகிறது.

கல்வியறிவு படைத்தோர் அரசசபைகளிலும் கோயில்களிலும் தமிழ்ச் சங்கங்களிலும் ஆண்கள் போற்றப்பட்ட காலங்களில் பெண் புலவர்கள் பலர் போற்றப்பட்டதோடு மட்டுமல்லாமல் அவைகளில் அவர்கள் வரும் போது அரசனில் இருந்து அனைவரும் எழுந்து வரவேற்றனர்.

ஒளவையார், காரைக்கால் அம்மையார், திலகவதியார் போன்ற பெண்திலகங்களை இன்றும் மக்கள் மறக்கவில்லை. காரைக்கால் அம்மையாரை அவரது கணவனே காலில் விழுந்து வணங்கினான். இதிலிருந்து இந்துமதம் பெண்களை அடிமைப்படுத்தி வைத்திருந்த தென்று கூற முடியாதுள்ளது.

அன்புள்ளம் கொண்டவர்கள் எவரானாலும் அடிமையாவதுண்டு. பக்தர்கள் இறைவனின் அடிமைகள் என்று நினைக்கிறார்கள். ஆனால் இறைவன் பக்தர்களுக்கு அடிமையாகிறான். இதிகாச புராணங்களில் இறைவன் அடிமைத் தொழில் செய்த வரலாற்றை நாம் காண்கிறோம். அன்பின் உச்சநிலை அடிமைப்படலே. வரலாற்று நாயகிகள் அன்பால் முதிர்ச்சியடைந்த நிலையைப் பார்த்த தற்காலத்தவர் அதை அடிமை நிலை என்கிறார்கள். இது ஏற்றுக் கொள்ள முடியாதது. எந்த ஒரு குடும்பத்திலும் அன்பு அரசாட்சி செய்யாவிட்டால் துன்பநிலை தான் தென்படும். எனவே குடும்பத்தை நேசியுங்கள்.

### *பொறுமை*

பொறுமையைப் பற்றி இந்துமதம் மிகவும் விரிவாகவும் பக்குவமாகவும் கூறுகிறது. ‘‘பொறுத்தார் அரசாள்வார்’’ என்பது எமது முது மொழி. பொறுமையின் தன்மையைப் பற்றி இதற்கு மேல் கூறத் தேவையில்லை.

இதிகாசபுராணங்களில் பொறுமை இழந்தமையால் நடந்த விபரீதங்கள் ஏராளம். பொறுமையாக இருப்பது நல்லது. அது தவம் செய்வதை விட மேலானது. பெருந் தவஞ் செய்த முனிவர்கள் பலர் பொறுமை இழந்தமையால் தாம் செய்த தவப்பயன் முழுவதையும் இழந்த வரலாற்றை இந்துமதம் கூறுகிறது.

பொறுமைக்கும் ஓர் அளவு உண்டென்பதை இராமனதும் தருமனினதும் வாழ்க்கை எமக்கு புரிய வைக்கிறது. தவவலிமை பொருந்திய கௌசிக முனிவன் தன் தவபலத்தால் கொக்கை எரித்தார். ஆனால் பொறுமையுடன் தனது குடும்பப் பொறுப்புக்களைச் சுமந்த பெண்ணை எரிக்க முடியவில்லை. இதிலிருந்து தவத்திலும் பெரியது. உயர்ந்தது பொறுமை, என இந்துமதம் வலியுறுத்துகிறது.

பிறர் நமக்குச் செய்யும் துன்பங்களைப் பொறுமையுடன் தாங்கிக் கொள்வது தவம் செய்வதை விட மேலானது என்கிறது இந்துமதம். திருநாவுக்கரசரைச் சுண்ணாம்பு அறையுள் அடைத்த போதும், கல்லோடு கட்டிக் கடலில் விட்ட போதும், மத யானையை ஏவி விட்ட போதும் அவர் சினங் கொள்ளவில்லை. தன்தவ வலிமையைப் பயன்படுத்தி அவற்றை அழிக்கவில்லை. பொறுமையாக இருந்தார். சுண்ணாம்பறை குளிரூட்டப்பட்ட அறையானது. கல் தெப்பமாக மிதந்தது. மதயானை மண்டியிட்டு வணங்கியது. மாணிக்கவாசகரை மன்னன் தண்டித்த போது அவர் பொறுமையாக இருந்தார். தண்டித்தவனுக்கே தண்டணை கிடைத்தது.

ஆரம்பத்தில் சிறிய துன்பங்கள் கூட பெரிதான தாக்கத்தை உண்டுபண்ணும். பொறுமையுடன் வரும் துன்பங்களைத் தாங்கிக் கொள்ளப் பழகி விட்டால் மனம் பக்குவப்பட்டு விடும். மனம் பக்குவமடையும் வழிகளைப் பற்றி இந்துமதம் விரிவாகக் கூறுகிறது. எல்லாம் சிவன் செயல் என நினைத்தால் துன்பம் வராது. கடவுள் மீது கொள்ளும் அன்பானது வளர்ந்து பக்தியாகிறது. இந்தப் பக்தியின் உச்ச நிலை நம்பிக்கை. கடவுளின் மீது முழுமையான நம்பிக்கை வந்துவிட்டால் உலகில் உள்ள செல்வங்களெல்லாம் எம் காலடிக்கு வந்து விடும். எந்தத் தீய சக்தியும் எம்மை அணுக முடியாது.

கடவுள் நம்பிக்கை மூலம் கடவுளின் அனுக்கிரகம் முழுவதும் கிடைத்த பின் பொறுமையாக நாம் செயற்பட்டால் தான் நாம் பெற்றுக் கொண்ட பயன் நீடிக்கும். பொறுமைக்கு எதிரிகள் பல. பொறாமை, அழுக்காறு, காமம், ஆசை, சினம் முதலியன. இதில் ஒன்று வந்தாலும் பொறுமை இழப்பதன் மூலம் சகலவற்றையும் இழந்து விடுகிறோம்.

சராசரி மனித வாழ்விலும் யாவற்றையும் பொறுமையாக ஏற்றுக் கொள்பவன் தான் வாழ்க்கையில் வெற்றி பெறுகிறான். காதலில் வெற்றி பெற வேண்டுமா? பொறுமையைக் கடைப்பிடி. உத்தியோகத்தில் உயர்வு பெற விரும்புகிறாயா? அப்படியானால் பொறுமையைக் கடைப்பிடி. இப்படி எந்த விசயத்திலும் வெற்றி பெற நினைப்பவன் பொறுமையைக் கடைப்பிடித்தல் வேண்டும். இறைவனே பல அடியவர்களின் பொறுமையைச் சோதித்ததாக வரலாறு கூறுகிறது.

பொறுமையாக இருந்தால் பெருந்துன்பமும் சிறிதாகத் தோன்றும். சிறிதளவு இன்பமும் பெரிதாகத் தோன்றும். ஆசை, அவா, பேராசை யாவும் அற்றுப் போகும். பல வருடங்கள் தவஞ் செய்து பெற்ற பயன்கள் யாவும் ஒரு கணம் பொறுமை இழப்பதன் மூலம் பஞ்சாகப் பறந்து விடும். பொறுமை ஞானத்தை விட அழுத்தமானது; ஆழமானது; உறுதியானது; உண்மையானது.

காட்டில் சென்று தவம் செய்வதற்குக் கூட தகுதிகளை வரையறை செய்து வைத்துள்ள மதம் இந்துமதம். பிரமச்சாரியம், கிருகஷ்திரம், வானப்பிரஷ்தம், சன்னியாசம் என்ற ஆச்சாரிய தர்மங்கள் லௌகீக வாழ்க்கை நெறிக்கான நெறிகளையும் ஆன்மீக ஈடேற்றத்திற்கான வழிவகைகளையும் எடுத்துக்கூறுகின்றன. இந்து ஒருவன் கல்வி கற்கும் காலம், இல்வாழ்க்கை நடத்தும் காலம், ஆன்மீக ஈடேற்றம் பெறும் காலங்களில் அனுஷ்டிக்க வேண்டிய தர்மநெறிகளை ஆச்சிரமதர்மம் மூலம் கூறும் இந்துமதம், இக்காலங்களில் ஒருவன் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று வற்புறுத்திக்கூறுகிறது. குருவினிடத்தில் கல்வியைப் பொறுமையாகக் கற்றல் வேண்டும். இல்வாழ்க்கையின் போது குடும்பத்தினருடனும், இனத்தவர்களுடனும், அயலவர்கள், நண்பர்களுடனும் பொறுமையுடன் வாழப் பழகிக் கொள்ளல் வேண்டும். பின் சன்னியாசம் மேற் கொள்ளும் போது என்பது ஆசைகள், பற்றுகள் இன்றி பொறுமையாகத் தவம் செய்தல் வேண்டும் என்று கூறுகிறது இந்து மதம்.

இந்துமதம் சரிகை, கிரிகை, யோகம், ஞானம் என்னும் நான்கு யோகங்களின் மூலம் ஆன்மா முத்தியடையுமென்று கூறுகிறது. இந்த நான்கையும் பொறுமையுடன் செய்தால் தான் உரிய பயனை அடையலாம்.

துன்பங்கள் வாழ்வில் வந்தால் தான் நிறைவு பெறலாம். துன்பங்கள் தொடர்வதால் படிப்படியாக மனம் வலுவடைகிறது.

உலகம் நாம் வாழ்ந்தாலும் ஏசும், தாழ்ந்தாலும் ஏசும், இதற்கு கோபம் கொள்ளலாமா?

வருந்தி அழைத்தாலும் வாராத வாரா பொருந்துவன போமினென்றால் போகா.

நடப்பது நடந்தே தீரும். நடக்காதது நடக்காது. குதிரைக்கு கொம்பு முளைக்காது. எருமைக்கு கொம்பு முளைக்காமல் போகாது. இது படைப்பின் தத்துவம். இதை நினைத்து அமைதியாக இரு. அமைதி பொறுமையைத் தரும். துன்பங்களை மறந்து விடு. சிறிதளவு இன்பம் கிடைத்தாலும் அதைப் பெரிதாக எண்ணு. விதிப்படி தான் எல்லாம் நடைபெறும். என்று எண்ணிப் பொறுமையாக உனது காரியங்களைச் செய். கட்டாயம் உனக்கு வெற்றி கிடைக்கும். ஒரு பொழுதும் வெப்பமாக விடிவதில்லை. பொறுமையாக இருப்பவனுக்கு எல்லாம் கிடைக்கும். பொறுமை கடலை விடப் பெரியது. ஆழமானது. பொறுத்திரு; முயற்சி செய்; முன்னேறு.

**அதிஷ்டம்**

அதிஷ்டம் என்பது என்ன? சுவீப்பில் பரிசு கிடைத்தல் சொத்துகள், வாகனங்கள்சேரல், பெரிய உத்தியோகம் கிடைத்தல், பதவி உயர்வுகள் கிடைத்தல் இவை தான் அதிஷ்டங்கள் என்று கற்றறிந்தவர்களும், சாதாரண மக்களும் கருதுகின்றனர். இவையெல்லாம் உண்மையில் அதிஷ்டம் தானா? உயிர்களை இறைவன் படைத்துள்ளான். கிராமங்களில் மக்கள் சொல்வார்கள்; ''படித்தவன் படியளப்பான்'' என்று. மனிதர்களைத் தவிர மற்றய உயிர்கள் சேமிப்பதில்லை. எறும்பு, எலி, தேனீ போன்ற சில உயிர்கள் இதற்கு விதி விலக்காக இருக்கின்றன. மற்றய உயிர்களெல்லாவற்றிற்கும் இறைவன் தினமும் வயிறார உணவு கொடுத்துக் கொண்டு தான் இருக்கிறான். தெருவில் வாழும் நாய்களெல்லாம் பல காலமாக உயிர் வாழ்கின்றன வென்றால் யாரோ உணவு கொடுத்துத் தானே இருக்கிறார்கள்.

அதிஷ்டம் என்பது மேலே கூறப்பட்டவை அல்ல. கடலூரில் அரசசேவையில் பெரிய அதிகாரி ஒருவர் இருந்தார். அவர் மதிய உணவாகக் கொண்டு வருவது பாண் அல்லது காலையில் செய்யப்பட்ட பிட்டு. அவரது மனைவியும் உயர்ந்த அரச அதிகாரி, பிள்ளைகள் இரண்டு வெளிநாட்டில் உள்ளனர். இரண்டு பிள்ளைகள் ஊரில் டொக்ரராகவும் எஞ்ஜினியராகவும் இருக்கிறார்கள். சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கூட அவருக்கும் அவரது மனைவிக்கும் கருத்தரங்குகள், கூட்டங்கள் இருக்கும். அவரது வீட்டுக்கு அருகில் வேலாயுதம் என்றொரு தொழிலாளி இருக்கிறான். அவனது மனைவி வீட்டிலிருந்து அவனை அன்பாகக் கவனித்து வந்தாள். இரண்டு பிள்ளைகள் கூலி வேலை செய்யிறார்கள். ஒருவன் பாடசாலை ஒன்றில் காவலாளியாக வேலை செய்கிறான். கோயில்கள், திருவிழாக்கள், படம் என்று வேலாயுதமும் அவனது மனைவி கௌரியும் இன்பமாகச் சென்று வந்தனர்.

பெரிய அதிகாரிக்கு ஒரு நாள் திடீரென்று நோய் வந்து விட்டது. படுத்த படுக்கையாகி விட்டார். மனைவிக்கு பல இடங்களிலும் கருத்தரங்குகள் இருந்தன. மகன்மார் இருவரும் கொழும்புக்குச் சென்று விட்டனர். அதிகாரியின் மனைவி கௌரியின் உதவியை நாடினாள். ஐந்து நாட்கள் கௌரி தான் அவரை அன்பாகப் பராமரித்தாள். வாழ்க்கையில் அந்த ஐந்து நாட்களும் தான் உண்மையான அன்பை, பாசத்தை அவர் அனுபவித்தார் அந்த உயர் அதிகாரி. வாழ்க்கையைக் கடமையாக அனுபவித்த அவருக்கு வாழ்க்கையை இன்பமாக அனுபவிக்க ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. தன்னை விட அக் கூலித்தொழிலாளியின் குடும்பம் அதிஷ்டம் செய்தது என்று நினைத்தார்.

அன்பான மனைவி, கடமை உணர்வுடைய பிள்ளைகள் உள்ள குடும்பம் அதிஷ்டமானது. விதி முறைகளுக்கிணங்க பூசை செய்யும் ஒழுக்கமான பண்பான பூசகர் உள்ள கோயிலும், கிராமமும் அதிஷ்டமானது. நல்ல அதிபரையும், நல்ல ஆசிரியர்களையும் கொண்ட பாடசாலை அதிஷ்டமானது. இவைகள் தான் அதிஷ்டமே தவிர பொன் ,பொருள், காணி பூமி, பதவி உள்ளவர்கள் அதிஷ்டமானவர்கள் அல்ல. ஆயிரம் ஏக்கரில் கரும்புத் தோட்டம் வைத்திருப்பவன் நீரிழிவு நோயாளியாக இருப்பதால் அவனால் ஒரு தேக்கரண்டி சீனியை உண்ண முடியவில்லை. அன்றாடம் கூலி வேலை செய்பவன் வயிறு நிறைய சீனியைச் சாப்பிடுகிறான். ஆயிரம் ஏக்கரில் தென்னந் தோப்புள்ள ஒருவனால் ஒரு தேங்காய்ச் சொட்டைச் சுவைக்க முடிவதில்லை. ஆயிரம் ஏக்கர் தென்னையாலும், கரும்பாலும் இவர்களுக்கு என்ன பயன்? இவர்கள் அதிஷ்டமானவர்களா?

தன்நலம் கருதாத நண்பன் கிடைத்தவன் அதிஷ்டசாலி.

நோயில்லாத வாழ்வு பெற்றவன் அதிஷ்டசாலி.

அமைதியான வாழ்வு வாழ்பவன் அதிஷ்டம் செய்தவன். ‘‘று உலகில் இன்பம் கிடைக்க வேண்டும் என்பதற்காக இந்த உலக வாழ்க்கையில் துன்பத்தை அனுபவிப்பது அறிவுடைய செயலாகாது. ஒருவன் இங்கேயே இப்பொழுதே, இன்பத்தைப் பெற வேண்டும்’’ இப்படி விவேகானந்தர் கூறுகிறார். இவ்வுலகில் இன்பமாக வாழ்பவனால் தான் மறுஉலகிலும் இன்பமாக வாழ முடியும் என்று இந்துமதம் கூறுகிறது. நிம்மதியைக் கெடுப்பது ஆசைகள். ஆசைகள் இல்லாமல் வாழ்ந்தால் ஏழையும் இன்பமாக வாழலாம். இன்பமாக வாழ்பவன் நெடுங்காலம் வாழ்வான். சில நோய்கள் பரம்பரை நோய்கள் என்பார்கள். அதே போல இன்பமாக வாழும் வாழ்க்கையும் பரம்பரையின் வழி வந்தது. பெற்றோர் இன்பமாக வாழ்ந்தால் பிள்ளைகளும் இன்பமாக வாழப் பழகிக் கொள்வார்கள். விவசாயி தனது பயிர்களை நல்ல முறையில் வளர்த்தால் நல்ல பயனை அடைகிறான். அதற்கு அவனின் நடைமுறைகள் தான் காரணமாகின்றன. அதே போல் பெற்றோரும் தமது பிள்ளைகளுக்கு நல்லவற்றை எடுத்துக் கூறி வளர்த்தல் வேண்டும். அறநெறிகளைப் போதித்தல் வேண்டும். இதனால் பிள்ளைகள் ஒழுங்காக வளர்வார்கள். இப்படி வாழும் குடும்பம் அதிட்டம் செய்தது.

துன்பங்கள் அறியாமையால் வரும். அளவுக்கதிகமான ஆசையால் வரும். மற்றவன் மீது கொண்ட பொறாமையால் வரும். சான்றோர் என மக்களால் போற்றப்பட்ட அறிஞர்கள் அறியாமையில் இருந்து விடுபட்டு இன்பமாக வாழக் காரணம் ஆசையைத் துந்தமையே. ஆசையைத் துறந்தால் எம்மை அச்சுறுத்தும் துன்பங்கள் எவையும் நெருங்காது.

ஆசையில்லாதவனுக்கு அரசனும் ஆண்டியாகவே தெரிவான். இதனால் தான் சொல்வார்களஇ; ‘‘துறவிக்கு வேந்தன் துரும்பு’’ என்று. உள்ளவை போதும் என்று நினைத்து வாழ்பவன் இன்பமாக வாழ்வான். மகிழ்ச்சி அவனது குடும்பத்தில் நிலைத்திருக்கும். ஆசை உள்ளவன் அவாப்பட்டு ஓடி ஓடி உழைக்கிறான். ஆனால் அந்த உழைப்பிலும் அவனுக்கு நிம்மதியில்லை. தன்னை விட அடுத்தவன் மேன்மையுடன் வாழக் கூடாது என்ற நினைப்பு அவனது மனதை விட்டு அகலும் வரை அவனுக்கு திருப்தி ஏற்படாது.

ஒரு சுவாமியார் மரநிழலில் படுத்திருந்தார். அவர் கூறுவதெல்லாம் நடைபெறும் என்று மக்கள் நம்பினர். அதனால் அவர் இருக்கும் மரத்தடியில் பலர் இரவு பகலாக வெயிலையும் குளிரையும் பொருட்படுத்தாது இருந்து வந்தனர். ஞானிக்கு ஒவ்வொருவரும் வரும் போது ஏராளமான பழங்களையும் உணவுப் பொருட்களையும் கொண்டு வந்தனர்.

அன்று அவ்வூரில் வாழும் பெரும் பணக்காரன் ஒருவன் சுவாமியாரைக் காண வந்திருந்தான். சுவாமியார் அவனைப் பார்க்கவில்லை. மூன்று நாட்கள் அவன் சுவாமியாரைத் தரிசிக்க வந்தான்.

ஏழை எளியவர்கள் சுவாமியாருடன் சகசமாகப் பழகினர். அவரும் அவர்களுடன் மகிழ்வோடு கதைத்தார்.

பணக்காரன் சுவாமிகளின் பாதங்களைப் பணிந்தான். சுவாமிகள் சிரித்தார்; ‘‘யார் நீ’’.

‘‘நான் தான் இவ்வூரின் தலைவன். பெரும் பணக்காரன். உங்களுக்கு என்ன வேண்டு மென்று சொன்னால் செய்து தருவேன்’’.

சுவாமிகள் மீண்டும் சிரித்தார். சுவாமியாரின் சீடன் சுவையான இனிப்பு வகைகளையும் எண்ணெயில் பொரித்த பலகார வகைகளையும் கொண்டு வந்து வைத்தான்.

‘‘சாப்பிடு...’’என்றார் சுவாமியார்.

பணக்காரன் தயங்கினான். அருகில் இருந்த கூலித் தொழிலாழி ஒருவனை சுவாமியார் அழைத்து ‘‘முழுவதையும் சாப்பிடு’’ என்றார்.

தட்டில் இருந்த அனைத்தையும் உண்டான் அந்தக் கூலித் தொழிலாழி.

சுவாமியார் மீண்டும் சிரித்தார்; ‘‘இனிப்பையும் எண்ணெயில் செய்த பலகாரத்தையும் உண்ண உன்னால் முடியவில்லை. அதை உண்டால் உனது நோய் அதிகரித்து இறந்து விடுவேன் என்று பயப்படுகிறாய். இந்தப் பயம் அந்தக் கூலிக்காரனுக்கு இல்லை. உனக்கு வாழ்வில் என்ன இன்பம் உள்ளது. சுவையான உணவு வகைகளை குடும்பஸ்தன் ஒதுக்கினால் அவனின் வாழ்வில் இன்பம் இராது’’

மனதர்களுக்கு பணம் வரும் போது திமிர்வரும். திமிர் என்ற ஆணவம் அடுத்தவனை மதிக்காது. அதே போல் வெற்றி வரும் போதும் திமிர் வரும்.

பணம் தான் வாழ்க்கை என்றால் சலரோகம், இரத்த அழுத்தம் என்பவற்றை குணமாக்கச் சொல்லுங்கள். நோயுள்ளவனுக்கு பொருளால் எந்தவிதமான இன்பமும் இல்லை. பொருள் இல்லாதவனுக்கு ஆசை இல்லாவிட்டால் துன்பமில்லை.

பதவியும் ஒருவனுக்குத் திமிரைத் தரும். பதவியை நீயாகத் தேடிக் கொள்ள முடியாது அது தானாக வரும். பதவியைத் தேடி பலர் ஓடுகிறார்கள்.

அது ஒருவனைத் தேடி வருகிறது. உயர்பதவியில் உள்ளவன் தனது அதிகாரங்களை நீதி என்ற வரம்புக்குள் வைத்திருத்தல் வேண்டும். ஆணவத்தால் இன்று பலர் தமக்குக் கீழ் பணிபுரிபவர்களைப் பழி வாங்குகிறார்கள். பணம் தேடும் ஆசையால் தகுதியில்லாதவர்களுக்கு பதவிகளைத் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி வழங்குகிறார்கள். இது அவர்களை மட்டுமல்ல அவர்களது பரம்பரையையே அழிக்கும் என்கிறார் வள்ளுவர்.

***பிறவி***

உயிர்கள் என்றோ படைக்கப்பட்டு விட்டதாக வேதங்களும் உபநிடதங்களும் கூறுகின்றன. உயிர்கள் புதிதாகப் படைக்கப்படுவதில்லை. படைப்பு நிகழ்ந்த பின் உயிர்கள் ஏதும் படைக்கப்படவில்லை. இன்று உலகில் உள்ள உயிர்கள் எல்லாம் என்றோ படைக்கப்பட்டவை. உயிர்களுக்கு பிறப்பு மாறும் போது உருவமும் மாறும் என்கிறது இந்துமதம். பிறப்பின் மகத்துவத்தைப் பற்றி அளவுக்கதிகமாக இந்துமத நூல்கள் கூறுகின்றன. ஓர் உயிர் மனிதப் பிறப்பெடுக்கும் போது தான் அந்த உயிரின் விருப்பு வெறுப்புக்கள் நிறைவேறுகின்றன. பூரண நிறைவு பெற்ற மனிதப் பிறப்பில் உயிரானது தனது அறிவால் பேரின்ப நிலையாகிய முத்தி நிலையை அடைதல் வேண்டும். தானாக அறியா விட்டாலும் அறிவித்தால் அறிந்து கொள்ளும் மனிதப் பிறவியில் பலவற்றை இறைவன் அறிவித்தும் அறிவில்லாமல் உயிர்கள் வாழ்வதால் பிறவிகள் பல எடுக்க நேர்கிறது. விதியென்று சொல்வதும் மனிதப்பிறவியில் தான் உயிர்களால் எழுதப்படுகிறது. இறைவன் விருப்பு வெறுப்பு இல்லாதவன். சகல உயிர்களையும் சரிசமமாக மதிப்பவன். அதனால் தான் சிவனுக்குச் சங்கரன் என்று சைவம் பெயர் சூட்டியுள்ளது.

மனிதப் பிறவி எடுத்த உயிரானது இச்சைகளைப் பூர்த்தி செய்யவே முனைகிறது. அதற்காகப் பாவச் செயல்களில் துணிந்து இறங்குகிறது. சமய சாஸ்திர நூல்கள் பலவும் நீதி நியாயங்களைப் போதிக்கும் நூல்களாகவே இருக்கின்றன. மன ஆறுதலுக்காக என்று சொல்லிக் கொண்டு நீதி நூல்களைப் படிக்கும் பலர் அவை கூறுவது போல் நடப்பதில்லை. பகவத்கீதையைப் படிப்போர் அதன் படி நடந்தால் உலகில் குற்றச் செயல்களே நடைபெற மாட்டாது.

இந்துசமயத்தைப் பின்பற்றுபவர்களுக் கென சில ஒழுக்க நடை முறைகள் உண்டு. உயிர்க் கொலை செய்தலாகாது. தீட்சை கேட்டல் வேண்டும். இன்று எமது நாட்டில் தீட்சை கேட்டோரை விரல் விட்டு எண்ணலாம். சமய வாழ்வு இன்று படிப்படியாக அற்றுப் போவதால் தான் நாட்டில் ஒழுக்கம் சீர் குலைந்துள்ளது. சமயம் என்பது ஒழுக்கம். மனிதனை தீமைகள் செய்ய விடாது தடுப்பது சமயம். மனிதனை மதித்து வாழப் பழக்குவது சமயம். மனிதனில் ஏற்றத் தாழ்வை நீக்குவது சமயம். நம் முன்னோர் சமய நெறியில் வாழ்ந்தமையால் ஒழுக்கமாகவும் ஒற்றுமையாகவும் ஒழுங்காகவும் வாழ்ந்தனர். சமயத்திற்கு மார்க்கம் என்றொரு பதமுண்டு. மார்க்கம் என்பது வழி, பாதை என்றும் பொருள்படும். மனிதனுக்கு இன்பத்தைக் காட்டும் வழி அல்லது பாதை. ஒழுங்காக வாழ, மனித விழுமியங்களைப் பேண, வழி சொல்வது சமயம்.

இந்தவழியில் செல்லத் தவறுவோர் திரும்பத் திரும்ப பிறப்பெடுப்பர். மனித பிறப்பின் போது வாழும் முறைகளில் இருந்தே அடுத்த பிறவிகள் பற்றித் தீர்மானிக்கப்படுகின்றது. கர்மத்திற்கும் அதாவது செயலுக்கும் மறுபிறப்பிற்கும் தொடர்பிருப்பதாக சமய நூல்கள் கூறுகின்றன. அதனால் தான் கர்மத்திற்கு அடுத்ததாகப் பிறப்பைப் பற்றி இந்துசமயம் கூறுகிறது. இந்துசமயம் உயிர்களையும் கடவுளையும் தான் நிலையானதாகக் கூறுகிறது. பிறவி என்பது நாம் அணியும் சட்டை. சட்டை பழுதடைந்ததும் புதிய சட்டையைப் போடுவதைப் போல் உயிர் பிறப்பெடுக்கிறது.

ஓடுகின்ற, பறக்கின்ற வாகனங்களைச் சாரதி இயக்குவது போல், வாழ்கின்ற உயிர்களை இறைவன் இயக்குகிறான். அவனின்றி ஓர் அணுவும் அசையாது. மனிதனை அறிவு இயக்குகிறது. அறிவை பெற்றுக் கொள்ள நாம் சமய நூல்களைப் படித்தல் வேண்டும். படிப்பதில் பலருக்கு கஷ்டமிருக்கிறது. சமய நூல்களைத் தேடிக் கொள்வது கஷ்ரம். தேடிக் கொண்டாலும் படித்துப் புரிந்து கொள்வது கஷ்ரம். இதற்காகத் தான் கோயில்களில் உற்சவ காலங்களில் சமய பிரசங்கங்கள், உபன்நியாசங்கள், பஜனைகள், புராணப் படிப்புகள் போன்றனவற்றை ஏற்பாடு செய்கிறார்கள்.

இசை மனிதனை மட்டுமல்ல சகல உயிர்களையும் ஏன் கல்லையும் உருகச் செய்யும் மென்கிறார்கள். இந்த இசையை அனுபவிக்கவும் கோயில்களே எமக்கு உதவி செய்கின்றன. பண்டைய காலத்தில் சமய பணிபுரியும் இடங்களாக மட்டுமன்றி கல்விக்கூடங்களாகவும் பிணிதீர்க்கும்

நிலையங்களாகவும் கோயில்கள் விளங்கின. உடலுக்கும் உயிருக்கும் ஏற்படுகின்ற பிணிகளை கோயில்களே தீர்த்து வைத்தன. இப்பிணிகள் தீர்ப்பதன் மூலம் உயிர்கள் பேரின்பமடைந்தன.

உயிர் அறிவுள்ளது. அறிவிருந்தும் ஆராயாது பாவச் செயல்களைச் செய்கிறது. பாவச் செயல்கள் எனும் பொழுது மனத்தால் நினைப்பது கூடப் பாவம். உயிருக்கு மனம் தான் காவலாளி. காவலாளியே திருடனை உள்ளே விட்டால் எப்படி இருக்குமோ அதே நிலை தான் மனதால் மனிதனுக்கு ஏற்படுகிறது. மனதை அடக்கியவன் மகான். அவனுக்கு பிறவிகள் இல்லை. எந்நேரமும் அவன் இன்பத்திலேயே இருப்பான். மனதை அடக்கியவனுக்கு ஆசைகள் இல்லை.

துன்பங்கள் நிரந்தரமானவை அல்ல. அதேபோல் இன்பமும் நீடித்ததல்ல இரண்டும் மாறி மாறி மனித வாழ்வில் வந்து மனிதனை அலைக்கழிக்கின்றன. ஒரு சிலரது வாழ்க்கையில் அடிக்கடி இன்பம் வந்து போகின்றது. சிலரது வாழ்வில் துன்பம் தொடர் கதையாகவே உள்ளது. இது ஏன் என்று நினைத்துப் பார்த்தால் துன்பத்தைத் தூர விலக்கலாம். இல்லாவிட்டால் குறைத்துக் கொள்ளலாம்.

இப்பொழுதெல்லாம் தேங்காயின் விலை ஏறிவிட்டது. ஒரு காலத்தில் பத்துச் சதம் விற்ற தேங்காய் பத்துருபாவாகி நூறுரூபா வரை ஏறியது. தேங்காய் விலை ஏறி விட்டது. என்று சந்திக்குச் சந்தி மூலைக்கு மூலை இருந்து கதைத்தார்களே தவிர யாராவது தென்னை நடுவது பற்றிச் சிந்திக்கவில்லை. நம் முன்னோர் முக்காலமும் உணர்ந்தவர்கள். தாம் வாழுமிடங்களில் பிறரை நம்பியராது தமக்குத் தேவையானவற்றை உற்பத்தி செய்தனர்.

என்னுடன் கற்பிக்கும் ஓர் ஆசிரியர் இருக்கிறார். மிகவும் அமைதியானவர். கண்டபடி கதைத்துச் சிரிக்க மாட்டார். நேரத்தை பொன்னாக மதிப்பார். வகுப்புக்குச் சென்றால் தனது நேரசூசிப்படி பாடங்களைக் கற்பிப்பார். மாணவர்களுடன் அன்பாகப் பழகுவார். அதிபர் சொன்ன வேலைகளைச் சரிவரச் செய்வார். பாடசாலை விட்டதும் வீட்டுக்குச் சென்று விடுவார்கள். வீட்டுக்குச் சென்று முகம் கைகால்களைக் கழுவி விட்டு கடவுளை வணங்கி திருநீறு பூசிவிட்டு மதிய உணவை அருந்துவார். பின் சிறிது நேரம் ஓய்வு எடுத்து விட்டு தனது வீட்டுத் தோட்டத்துக்குச் சென்று விடுவார். வீட்டுத் தோட்டத்தில் குறிஞ்சா, தூதுவளை, சண்டி, தவசிமுருங்கை, முசுட்டை, இலைக்கோவா போன்ற இலை வகைகளும் பப்பா, எலுமிச்சை, கொய்யா, தோடை போன்ற பழமரங்களும் பத்து கத்தரிச் செடிகளும் பத்து வெண்டிச் செடிகளும் இரண்டு மூன்று பயிற்றங் கொடிகளும் பாகல் கொடிகளும் உண்டு. அதை விட ஒரு பசுமாடு, நாலைந்து கோழிகளும் உண்டு. வீட்டில் பலா, மாதுளை, தென்னை, பசன்புருட், மா, வாழை போன்ற மரங்களும் உண்டு. அவர் ஒரு போதும் காய்கறிகளோ பழவகைகளோ விலைக்கு வாங்குவதில்லை. எனக்கு அடிக்கடி காய்கறிகளும் பழவகைகளும் தருவார். காசு வாங்க மாட்டார். எத்தனை நாட்களுக்கு அன்பளிப்பாக நான் அவற்றை வாங்குவது. சொன்னாலும் கேட்க மாட்டார். எனவே அவரிடம் இருந்து இவற்றை வாங்காமல் விடுவதற்காக நானும் வீட்டுத் தோட்டத்தை ஆரம்பித்தேன். இப்பொழுது நானும் அவற்றை வாங்குவதில்லை. அவரைப் பார்த்து நானும் ஐந்து தென்னை மரங்கள் வைத்து தண்ணீர் ஊற்றி வந்தேன். தேங்காய் ஐம்பது ரூபாய் விற்ற போது மரத்தில் குலை குலையாய் தேங்காய்கள் இருந்தன. தினமும் ஒரு தேங்காய் பாவித்த போதும் மாதத்தில் ஐம்பது தேங்காய் விற்கக் கூடியதாக இருந்தது. மாதம் முடிந்தபின் சம்பளத்தை எடுத்து காய்கறிகள் வாங்கச் செல்லும் நேரமும் மிஞ்சியது. காசும் மிஞ்சியது. சத்தான உணவுகளையும் உண்ண முடிகிறது. காய்கறிகளுக்குத் தட்டுப்பாடேற்பட்டுள்ளது. விலை உயர்வால் கறி வகைகளை மக்கள் குறைத்தே சமைக்கின்றனர். இந்நிலை துன்பமானது. இதை எனது அறிவால் நீக்கியது போல வாழ்வில் உண்டாகும் துன்பங்களையும் அறிவினால் நீக்கலாம்.

மதுபாணம் அருந்துவது, சூதாடுவது, களவெடுப்பது, கற்காமல் விடுவது இப்படிப் பல துன்பங்கள் வாழ்வில் வருகின்றன. இவை எதுவும் மிருகங்களின் வாழ்க்கையில் உண்டாவதில்லை. அறிவுள்ளவர்கள் என்று சொல்லும் மனிதர்கள் தான் தமக்குத் தாமே துன்பங்களை உண்டாக்கிக் கொள்கிறார்கள். துன்பங்களை நாம் தான் உண்டாக்கிக் கொள்கிறோம். பிறரால் எமக்குத் துன்பங்களை உண்டாக்க முடியாது என்பதை உறுதியாக நம்பினால் எம்மைத் துன்பங்கள் வந்தடையா.

அன்று வாழ்ந்தால் போதும் என்று நினைப்பவனின் வாழ்வில் துன்பங்கள் ஏற்பட மாட்டாது.

இயற்கையின் விதிகளை மீறாது வாழ்பவனுக்கு துன்பங்கள் வரமாட்டாது.

அடுத்தவனுடைய குற்றங்கள் குறைகளைப் பற்றிப் பேசாதிரு. பேசினால் உனக்குத் துன்பம் வரும். உனது வாழ்க்கை சிறந்ததாகவும் தூய்மையுடையதாகவும் இருந்தால் உனக்குத் துன்பங்கள் வரமாட்டாது. அடுத்தவனின் குறை குற்றங்களும் தெரிய மாட்டாது.

“நீ எதை நினைக்கிறாயோ அதுவாவாய்” என்கிறது உபநிடதம்.

நாம் நல்லவற்றை படிக்க வேண்டும், நல்லவற்றையே சிந்திக்க வேண்டும், நல்லவற்றையே செய்ய வேண்டும் என்று இந்துசமய நூல்கள் கூறுகின்றன.

வயலில் நல்ல விதையை விதைப்பவன் நல்ல விளைச்சலைப் பெறுகிறான்.

நல்ல பிள்ளைகளாக வளர்த்தவன் தன் கடைசிக் காலத்திலும் நல்லபடி வாழ்கிறான்.

நல்ல பொருட்களை விற்கும் வணிகனை நாடி மக்கள் செல்கின்றனர்.

இது பகுத்தறிவுள்ள மனிதனிடம் மட்டும் காணப்படும் பண்பல்ல.

நல்ல பழமரங்கள் உள்ள இடங்களை நோக்கிப் பறவைகள் நெடுந்தூரம் பறந்து செல்கின்றன.

நல்ல பொருட்கள் உள்ள இடங்களை நோக்கி எறும்புகள் படை எடுக்கின்றன.

தேனுள்ள மலர்களை நாடி வண்டுகள் செல்கின்றன.

இப்படி இருக்க மனிதன் மட்டும் ஏன் நல்லவற்றை நாடாது கெட்டவற்றையே நாடுகிறான்.

ஊண் உண்ணும் விலங்குகள் தாவரங்களைப் போசிப்பதில்லை. தாவரங்களை உண்டு வாழும் மிருகங்கள் ஊண் உண்பதில்லை.

வீட்டு ஈக்கு மலர்களில் உள்ள சுவையான தேனை உண்ண விருப்பமில்லை. அது மலரின் மீதும் இருக்கும் மலத்தின் மீதும் இருக்கும். ஆனால் தேனை விரும்பி உண்டு மிகுதியை சேமித்து வைக்கும் தேனீக்கள் மலர்கள் தவிர்ந்த எவற்றிலும் இருப்பதில்லை.

மனிதன் நினைப்பவை பல நடப்பதில்லை. அதற்குக் காரணம் அவன் பல விடயங்களில் நல்லவற்றை நினைப்பதில்லை.

மகான்கள், ஞானிகள், சான்றோர்கள் எப்பொழுதும் நல்லவற்றையே நினைத்தார்கள். எல்லோரும் இன்புற்று வாழ வேண்டும் என்று விரும்பினார்கள். அவை நடைபெற்றன. ஒவ்வொருவரினது எண்ணத்தில் தூய்மை வேண்டும். தூய மனத்தோடு நினைப்பவை யாவும் நடைபெறும். அடியவர்களுக்கு இறைவன் துணை புரிந்த வரலாறு மட்டுமல்ல ஏவல் செய்த வரலாறும் இந்து மதத்தில் உண்டு.

முருகப் பெருமான் தந்தைக்கு பிரணவ மந்திரத்தின் பொருளைக் கூறினார். அதனால் அவருக்கு சுவாமிநாதன், பரமகுரு, குருநாதன், குருசுவாமி போன்ற பெயர்கள் உண்டு.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்கின்ற இந்துமதக் கடவுளுக்கு மகன் கற்பிப்பதா என்று கேட்பாரும் உண்டு.

எண்குணமுடைய சிவனுக்கு பிரணவ மந்திரத்தின் பொருள் தெரியாமல் போகலாமா எனக் கேட்பாரும் உண்டு. இதற்கு வள்ளுவன் விடை தருகிறான்.

குழல் இனிது யாழ் இனிது என்பதம் மக்கள்
மழலைச் சொல் கேளா தவர்.

அடியவர்களுக்காக அறுபத்து மூன்று திருவிளையாடல்களைப் புரிந்த சிவனின் இன்னுமொரு திருவிளையாடல் இது. இதன் மூலம் பல தத்துவங்கள் உலகிற்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

உலக நடைமுறைக்கேற்றவாறு இந்துத் தெய்வங்கள் பல்வேறு உருவந் தாங்கி தம்மடியார்களை மகிழ்வித்து, அவர் தம் குறைகள் தீத்த கதைகள் மிகவும் சுவையானவை.

முருகன் சிறுவனாக வந்து ஔவையுடன் விளையாடினான்.

சிவன் பிட்டுக்கு மண் சுமந்தான்.

கிருஷ்ணன் ஆயர் குலச் சிறுவனாக வந்து மாடு மேய்த்தான். இப்படியாக பல கதைகளைக் கூறலாம்.

எனது நண்பர் ஒருவர் பயிற்றப்பட்ட ஆசிரியர். ஐம்பது வயதில் அவருக்கு ஓர் ஆசை வந்தது. தான் ஒரு பட்டதாரி ஆக வேண்டுமென்று விரும்பினார். பல்கலைக்கழகத்தில் பதிவு செய்தார். பல்கலைக்கழகத்தில் பீடாதிபதியாக இருந்தவர் அவரது மாணவர். அவரைச் சந்திக்கச் சென்ற எனது நண்பர் தனது மாணவன் தனக்கருகில் அமரும்படி கூறியும் அமரவில்லை.

“அன்று உனக்கு நான் ஆசிரியன். இன்று எனக்கு நீ ஆசிரியன். ஆசிரியருக்குச் சமமாக மாணவன் அமரக் கூடாது” என்றார்.

தந்தை விவசாயி, மகன் மருத்துவன், மதிப்பு மரியாதை யாவும் மனதிலும் செயலிலுமே இருத்தல் வேண்டும்.

ஒருவனைக் கெடுக்க நினைப்பவன் கெட்டுப் போகிறான். ஒருவனை அடிக்க நினைப்பவன் அடி வாங்குகிறான்.

அன்பாகப் பேசி பண்பாக நடப்பவன் நன்மதிப்பைப் பெறுகிறான்.

அடுத்தவனைக் கெடுக்க நினைப்பவன் கோயிலுக்குச் சென்றாலும் அதே நினைவில் தான் இருக்கிறான். கடவுளிடமும் அவனைக் கெடுக்கும் படி கேட்கிறான். குளக்கரையில் தவம் செய்த இருவர் முன் கடவுள் தோன்றி உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்கிறார்.

அவன் அடுத்தவனைக் கெடுக்க நினைத்து தனது ஒருகண் குருடாக வேண்டும் என்று கேட்கிறான்.

அடுத்தவன் முன்னவன் பெற்றதை விட இருமடங்கு தேவை எனக் கேட்கிறான்.

முதலாமவனின் ஒரு கண்ணும் மற்றவனின் இரு கண்களும் குருடாகின.

இவற்றால் என்ன பயன்?

இருவரும் நல்லவற்றைக் கேட்டிருந்தால் உயர்வடைந்திருப்பர். மகிழ்ச்சியாக வாழ்ந்திருப்பர்.

இதனால் தான் இந்து மதம் நல்லவற்றைச் சிந்தி என்று சொல்கிறது. எண்ணப்படி வாழ்வு என்று சொல்கிறது.

மது அருந்துபவனுக்கு மதுவைப் பற்றிய சிந்தனை தான் இருக்கும்.

களவெடுப்பவனுக்கு களவைப் பற்றிய சிந்தனை தான் இருக்கும்.

அடுத்தவர்களுக்கு உதவி செய்பவனுக்கு யார் யாருக்கு என்னென்ன உதவிகள் செய்யலாம் என்ற சிந்தனை தான் இருக்கும்.

சிந்தனை தான் முயற்சி. முயற்சித்தவை நடப்பதையே அனைவரும் விரும்புவார்கள். அதன்படி நீ எதை நினைக்கிறாயோ அதுவாய் என்பது உண்மையாகிறது.

***உன்னிடம் உள்ளது எது?***

“எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு” கீதை இப்படிச் சொல்கிறது. கீதை வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் தத்துவரூபமாகச் சொல்கிறது. அதையே வள்ளுவரும் சொல்கிறார். கீதையில் உள்ளது குறளிலும் உண்டு. குறள் சொல்வதை கீதையும் சொல்கிறது. அறிஞர்கள் சொல்வது ஒன்றாகவும் இருக்கலாம் வேறாகவும் இருக்கலாம். ஆனால் அவர்கள் சொன்ன கருத்துக்களை நாம் ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

மனிதர்களை ஞானிகள் ஆக்குவது அல்ல அவற்றின் நோக்கம். மனிதர்களுள் மனிதத்தை உண்டாக்குவதே அதன் நோக்கமாகும்.

வாழ்க்கையில் சகல பகுதிகளையும் உள்ளடக்கியவை இதிகாசங்கள். அவற்றுள் மனித வாழ்வின் அத்தனை விழுமியங்களும் அடங்கியுள்ளன. இதிகாசங்களில் உலா வரும் பாத்திரங்களுக்குள் சகல விதமான குணாம்சங்களும் அடங்கியுள்ளன. இவற்றுள் அடங்காத குணாம்சமுள்ள ஒரு பாத்திரத்தை யாரும் உருவாக்கவில்லை என்று துணிந்து கூறலாம்.

பெருங்கதைகளும் அவற்றுக்குள் பல கிளைக் கதைகளுமாக எழுதப்பட்ட இதிகாசங்களுக்குள் ஆயிரக்கணக்கான பாத்திரங்களைக் காண முடிகிறது. அப்பாத்திரங்களுக் கூடாக உலகின் அத்தனை குணாம்சங்களும் தெளிவாக உருவாக்கப்பட்டுள்ளன. அதை விட பற்று, பாசம் ,அவா, பேராசை, பொறாமை, கபடம், தந்திரம் போன்றவை எப்படி உருவாக்கப்படுகின்றனவென்றும் அவை தீமையானவையாக இருப்பதால் அவற்றுக்கெல்லாம் எப்படி தண்டனைகள் கிடைக்கின்றனவென்றும் அற்புதமாக கூறுகின்றன.

காதல் அன்பு, பாசம், பிரிவு, நட்பு, சகோதரத்துவத்தோடு, யுத்தம் நீதி, சமாதானம் யாவும் அற்புதமாகக் கூறப்படுகின்றன.

ஒவ்வொரு பாத்திரங்களுக்குள்ளும் ஓராயிரம் தத்துவங்கள் புதைக்கப்பட்டுள்ளன. துரியோதனன் கொடுமையானவன். அவனது கொடுமைகள் மூலம் உலகம் எவ்வளவோ கற்றுக் கொள்ள முடிகிறது. கர்னன் கொடை வள்ளல். அந்தப் பாத்திரத்தின் மூலம் எவ்வளவு தத்துவங்கள், புத்திமதிகள், படிப்பனைகள் கூறப்பட்டுள்ளன.

ஒருவனுக்கு உள்ள குணம் இயல்பானது. என்பதை பாரதம் மிகவும் தெளிவுபடக் கூறுகிறது. அதற்கு உதாரணம் தருமன், வீமன், அருச்சுணன், கர்னன் போன்றோர்.

தருமனை எந்த சக்தியாலும் மாற்ற முடியவில்லை. அதே போல் கர்னனையும் மாற்ற முடியவில்லை. அரிச்சுனனும் இயல்பின் படியே நடந்தான். அதைப் பாரதம் விரிவாகக் கூறுகிறது.

அரிச்சுனனுக்கு எப்போதும் தன்னை விடக் குருபக்தியில் மிக்கவன் இல்லை என்ற மமதை உண்டு. அதைத் துரோனர் ஏகலைவன் மூலம் போக்கினார். கண்ணன் பலமுறை அரிச்சுனனது அறியாமையை அகற்றியுள்ளான்.

அரிச்சுனனுடன் கண்ணன் கதைக்கும் போதெல்லாம் கர்னனை உயர்வாகப் பேசுவது வழக்கம். அரிச்சுனன் தன்னைப் பலவானாகவும் எதிரியைக் கோழையாகவும் நினைக்கிறான். அதை விடத் தான் தான் கண்ணனில் பக்தி உள்ளவ னென்றும் கர்னனை விடக் கொடையாளி என்றும் நினைக்கிறான். இது தோல்வியில் முடியும் என்பதை அருச்சுனனுக்கு எடுத்துக் காட்ட ஒரு திருவிளையாடலை நடத்தினான் மாயக்கண்ணன்.

அரிச்சுனன் ஒரு நாள் கண்ணனுடன் உரையாடிக் கொண்டிருக்கிறான். அரிச்சுனனது பேச்சில் கர்வம் தொனிப்பதை உணர்ந்த கண்ணன்; அரிச்சுனனைப் பார்த்து சிரித்து விட்டுச் சொன்னான்; ‘‘அரிச்சுனா அரசனாக இருந்தாலும் இயல்பான குணங்கள் மாறாது. கர்னனைப் பார், அவன் மிகப் பெரிய கொடையாளி’’ என்று கூறி விட்டு அர்ச்சுனனைப் பார்த்தார்.

அர்ச்சுனனின் முகம் சோர்ந்திருந்தது; ‘‘அப்படி ஏன் சொல்கிறீர்கள் பிரபு என்னாலும் கொடை செய்ய முடியும்’’

‘‘அப்படியா?’’ என்ற கண்ணன் எதிர்ப்பக்கம் திரும்பி கையை உயர்த்தினார். அவரெதிரே பொன், வெள்ளி, மரகதமலைகள் மூன்று தோன்றின.

‘‘அரிச்சுனா நீ கொடையாளி என்பதை ஒத்துக் கொள்கிறேன். இந்த மூன்று மலைகளையும் இன்று பொழுது சாயு முன் தானஞ் செய்து விடு’’ என்றார்.

அரிச்சுனன் முரசறைபவர்களை அழைத்து நகரெங்கும் முரசறையும் படி சொன்னான்.

மக்கள் கூடினர். அர்ச்சுனனும் அரன்மனைத் தொழிலாளர்களும் பொன்னையும் வெள்ளியையும் வைரூடியங்களையும் அள்ளிக் கொடுத்துக் கொண்டிருந்தனர்.

மாலையாகியது, அவர்கள் களைத்தது தான் மிச்சம். மலை குறையவில்லை.

அர்ச்சுணன் வாடிய முகத்துடன் வந்தான். இன்னும் ஒரு நாள் அவகாசம் தரும்படி கேட்டான். கண்ணன் சிரித்தான். பின் ‘‘பார் கர்னனை அழைக்கிறேன்’’ என்று கூறி விட்டு ஏவலாளர்கள் மூலம் கர்னனை அழைப்பித்தான்.

கர்னன் அவசரமாக வந்து கண்ணனின் பாதங்களைத் தொட்டு வணங்கினான்.

‘‘பிரபு இந்த ஏழையை அழைத்த காரணம் யாது?’’ என்று பணிந்தான்.

“கர்னா அதோ பார் மூன்று மலைகள் தெரிகின்றன. அவற்றை இன்று விடிவதற்குள் தானம் பண்ணிவிடு” என்றார்.

கர்னன் நிமிர்ந்து பார்த்தான். பொன்னும், வெள்ளியும்,மரகதமும் மலையாகக் குவிந்து இருந்தன.

“இதைத்தானம் பண்ண இவ்வளவு நேரம் ஏன் பிரபு. ஒரு நொடியே போதும்” என்ற கர்னன் வெளியே வந்தான். மூன்று பிராமணர்கள் அவ்வழியால் சென்று கொண்டிருந்தனர். அவர்களை அழைத்த கர்னன்; “அதோ பாருங்கள் பொன், வெள்ளி, மரகத குவியல்கள் மூன்று உள்ளன. ஆளுக் கொன்றாக எடுத்துக் கொள்ளுங்கள்” என்று கூறி விட்டு கண்ணனிடம் வந்தான்.

“என்ன கர்னா திரும்பிவருகிறாய் நேரம் போதாதா?”

“இல்லைப் பிரபு கொடுத்து விட்டேன்” என்றான் கர்னன்.

கண்ணன் முறுவலுடன் அர்ச்சுனனைப் பார்த்தான். அவனுக்கு வெட்கமாக இருந்தது.

பெரியவர்களிடம் அன்பாக இருப்போர் தாமே பெரியவர்கள் என்று நினைக்கிறார்கள். ஆனால் பெரியவர்கள் அவர்களைக் குறைத்து, மற்றையோரை சிறந்தவர்களெனக் கூறுவது இவர் வளர வேண்டும், அறியாமையாகிய இருள் நீங்க வேண்டும் என்பதற்காகவே தவிர குறைத்து மதிப்பிடுவதற்காகவல்ல. உன்னிடம் உள்ளது எதுவோ அதுதான் வெளிப்படும்.

***பற்றை விடு***

பற்றுத்தான் வாழ்க்கை
பொன்னில் பற்று
பெண்ணில் பற்று
மண்ணில் பற்று
இப்பற்றுக்கள் நீதியான பற்றுக்களானால் வாழ்வு சிறக்கும்
இல்லா விட்டால் வாழ்வே நரகமாகும்

ஞானிகள் கல்லையும் பொன்னையும் ஒன்றாக மதித்தார்கள். அது பற்றற்ற நிலை. அப்படி மனிதனால் வாழ முடியாது. வாழவும் கூடாது.

அடுத்தவனின் பொருளில் பற்றில்லாமல் வாழ். பொன்னைத் தேடி நீ அலையாதே. அது உன்னைத் தேடி வரும். இலட்சத்தில் ஓரிருவருக்குத் தான் பற்றற்று வாழ முடிகிறது.

எமக்கு உபதேசம் செய்த பெரியவர்களில் பலர் ஆசைகளால் அவதிப்பட்டவர்கள். பட்டினத்தார், சுந்தரர், அருணகிரிநாதர் ஆகியோரின் வாழ்கை வரலாற்றைப் பாருங்கள்.

வாலி தன்தம்பியின் மனைவி மீது ஆசைப்பட்டு ஒழிந்தான்.

இராவணன் சீதை மீது ஆசைப்பட்டு அழிந்தான்.

இந்திரன் அகலிகை மீது ஆசைப்பட்டு அவஷ்தைக்குள்ளானான்.

துரியோதனன் மண் மீது ஆசைப்பட்டு அழிந்தான்.

பற்றில்லாமல் வாழமுடியாது. உலகப் பற்றுக்களை அறுத்த ஞானிகள் கூட தெய்வங்களின் மீது அதீத பற்றுக் கொண்டிருந்தனர். அந்த அதீத பற்றின் மூலம் தான் அவர்கள் செயற்கரிய செயல்களைச் செய்தனர்; அதனால் இறைவனின் நிழலில் வாழ்கின்றனர். பற்று என்பது வளர்ந்து நம்பிக்கையாகிறது. நம்பிக்கை துணிவைக் கொடுக்கிறது. துணிவு எதற்கும் அஞ்சாத திடமான மனதைக் கொடுக்கிறது. இதனால் செயல்கள் நடைபெறுகின்றன.

அருச்சுனன் யுத்தகளத்தில் உறவினர் மீது கொண்ட பற்றால் கலங்கினான். அதைத் தீது எனக் கண்ணன் உணர்த்திய பின் தர்மத்தின் மீது பற்று வைத்து யுத்தம் செய்தான். அதனால் அவனும் நன்மையடைந்தான். உலகமும் நன்மையடைந்தது. தீமைகள் ஒழிந்தன. மக்கள் நிம்மதியாக வாழ முடிந்தது.

கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என ஆன்றோர் கூறுகிறார்கள். கடமையைச் செய்யும் போது பயன் தாமகவே வந்து சேரும்.

ஒரு முறை ஒரு குடியானவன் ஒரு முனிவரிடம் சென்று தனது குடும்பத்தைப் பற்றி முறையிட்டான்; ''சுவாமி எனது மனைவி கொடியவள். பிள்ளைகள் ஒழுக்கமில்லாதவர்கள். இதனால் எந்நாளும் வீட்டில் சண்டை. என்னால் நிம்மதியாக ஒரு நிமிடம் கூட இருக்க முடியாதுள்ளது. தயவு செய்து நான் நிம்மதியாக வாழ வழி சொல்லுங்கள்'' என வணங்கினான்.

முனிவர் அவனைச் சில கணங்கள் பார்த்தார். பின்பு; ''பற்றில்லாமல் வாழ் எந்தப் பிரச்சினையும் வராது'' என்றார்.

''சுவாமி நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை'' என்றான் குடியானவன்.

''நீ தினமும் செய்யும் தொழிலைச் செய். மனைவி பிள்ளைகளைப் பற்றிக் கவலைப்படாதே. அவர்கள் எதைச் செய்தாலும் கண்டிக்காதே. ஒரு செவிடனைப் போலவும் குருடனைப் போலவும் நடந்து கொள். ஒரு மாதம் கழிந்த பின் என்னிடம் வா'' என்றார்.

குடியானவன் சென்று விட்டான். முனிவர் குடியானவனை மறந்து விட்டார். ஒரு நாள் குடியானவன் குடும்பத்துடன் முனிவரிடம் வந்தான்.

''சுவாமி நீங்கள் கூறியது போல் நடந்தேன்'' எனது வாழ்க்கை இன்பமாக இருக்கிறது என்றான்.

முனிவர் அவனை ஆச்சரியத்துடன் பார்த்தார். குடியானவன் சொன்னான்; ''சுவாமி நான் தாங்கள் கூறியது போல் வாழ்ந்து வருகிறேன். மனைவியை ஏசுவதில்லை. பிள்ளைகளைக் கண்டிப்பதில்லை. எனது வருமானம் முழுவதையும் மனைவியிடம் கொடுத்து விட்டு அவள் தரும் உணவை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்கிறேன்'' என்றான்.

முனிவர் அவனது மனைவியைப் பார்த்தார். அவள் சொன்னாள்; ''எனது கணவர் மிகவும் நல்லவர். ஆனால் முன்கோபக்காரர். எதற்கெடுத்தாலும் கோபிப்பார். எமக்கு அடிப்பார். ஆனால் உங்களிடம் வந்த பின் முற்றாக மாறிவிட்டார். எதைக் கொடுத்தாலும் சாப்பிடுவார். நீங்கள் கொடுத்த வீபூதியின் மகிமை தான்'' என்றாள்.

முனிவர் அவளைப் பார்த்து முறுவலித்தார்; ''மனிதன் ஒவ்வொருவனும் பிறர் தான் தனக்குத் தீங்கு செய்வதாக நினைக்கிறார்கள். அப்படியல்ல ஒவ்வொருவரும் தாம் தாம் தனக்கு தீங்கு செய்து கொள்கிறார்கள். தன்னைப் போல் பிறரையும் நேசித்தால் பிரச்சினைகள் வரமாட்டாது. தனக்கு யாராவது செய்யக்கூடாது என்று நினைப்பவற்றை நாம் மற்றவர்களுக்கு செய்யாது விட்டோமானால் தீமைகள் வரவாய்ப்பில்லை. உங்கள் கணவர் என்னிடம் வந்து தனது பிரச்சினைகளைக் கூறிய போது நான் சிறிது யோசித்துப் பார்த்தேன். பிரச்சினைகளைக் கூறுபவர்கள் எப்போதும் தமக்குச் சார்பானவற்றையே கூறுவார்கள். அதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்த்து விட முடியாது. எனவே தான் அப்படி கூறினேன். இப்பொழுது பிரச்சினை தீர்ந்து விட்டதல்லவா சென்று வாருங்கள்'' என்றார் முனிவர்.

### *ஒழுக்கம்*

கண்ணனின் அவதாரங்களில் மிகவும் சிறந்தது இராம அவதாரம் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். இராம அவதாரம் அநீதியை அழிக்க வந்த அவதாரம் என்று சொல்லப்பட்ட போதும் அவ் அவதாரத்தின் மூலம் எத்தனையோ நீதிகள் போதிக்கப்படுகின்றன.

இராமனது பாத்திரத்தை ஏற்று நடித்த பல நடிகர்கள் தமது தீய குணங்களை விலக்கி நல்லவர்களாக மாறியதாகத் தகவல்கள் கூறுகின்றன. இராவணன் ஓர் முறை இராமவேசம் கொண்டதாக இராமாயணம் கூறுகிறது.

அசோக வனத்தில் சிறை வைக்கப்பட்ட சீதையை தன் பக்கம் கவர இராவணன் எத்தனையோ தந்திரோபாயங்களைக் கையாண்டான். ஒன்றும் பலிக்கவில்லை. அதனால் மிகவும் வேதனையடைந்த இராவணன் அரண்மனையில் வேதனையோடு இருக்கிறான். சீதையை அசோக வனத்தில் சிறை வைத்த பின்பு இராவணனால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. எவ்வளவு சீக்கிரம் சீதையை அடைய முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அடைந்து விட வேண்டுமெனத் துடிக்கிறான். இதனால் அவன் வருவோர் போவோர் யாரோரிடமும் ஆலோசனைகளைக் கேட்கிறான். ஒரு நாள் ஒரு முனிவர் அவனிடத்தில் சொன்னார்; ''மன்னா நீ அரிய பல வரங்களை யெல்லாம் பெற்றுள்ளாய். உன்னால் நினைத்த

உருவத்தை நினைத்தவுடன் பெற முடியும். நீ இராமனாக உரு மாறிச் சீதையிடம் சென்று பார்'' என்றார்.

இராவணன் வேதனையோடு சிரித்தான்; ''நான் இராமனாக உருமாறி சீதையிடம் செல்லும் போது எனக்கு இராமனின் குணம் வந்து விடுகிறது. பிற பெண்களை மனதால் கூட நினைக்க முடியவில்லை'' என்றான்.

ஒருவரின் குணங்களுக்கேற்பத் தான் குடும்பம் அமைகிறது என்கிறார்கள். ஆனால் ஆராய்ந்து பார்த்தால் குடும்பத் தலைவரின் குணத்திற்கேற்பக் குடும்பம் மாறி விடுவதை நான் பல இடங்களில் கண்டுள்ளேன்.

ஒழுக்கம் மிக்க குடும்பத்தில் பிறந்த பலர் ஒழுக்கமில்லாத குடும்பத்தில் புகுந்தால் அக்குடும்பத்திற் கேற்ப மாறி விடுகிறார்கள். ஒழுக்கமில்லாத குடும்பத்தில் பிறந்த பலர் ஒழுக்கமான குடும்பத்தில் புகுந்தால் நல்லவர்களாக மாறியும் இருக்கிறார்கள். ஒழுக்க மென்பது குடும்பத்தலைவரின் கையிலேயே உள்ளதென ஆன்றோர்கள் கூறியுள்ளனர்.

''கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்''.

''சந்தண மரத்திற்கு அருகில் நிற்கும் மரங்களுக்கும் சந்தண வாசனை உண்டு.

பன்றியோடு கூடிய பசுவும் மலம் உண்ணும். என்ற ஆன்றோர் வாக்குக்கள் நமக்கு சான்று பகர்கின்றன.

இதிகாச நாயகர்கள் பல இடங்களில் பற்று ,அறியாமை, தற்பெருமை போன்றவற்றால் தவறுகளைச் செய்த போதும். அவதார புரிசர்களின் உபதேசங்களால் உண்மையை உணர்ந்துள்ளனர். ஆனால் இராமாயணக் கதாநாயகனான இராமன் எந்த இடத்தில் எந்தத் தவறுகளும் செய்யவில்லை. இதற்குக் காரணம் மக்களை நன்னெறிப் படுத்த வேண்டும், உலகிற்கு தர்மத்தைப் போதிக்க வேண்டும் என்ற நோக்கில் மகா விஷ்ணுமூர்த்தி இராம அவதாரம் எடுத்து மக்களுக்கு வாழ்ந்து காட்டியமையே ஆகும்.

***உயர்ந்தவர்கள் யார்***

பூமியில் நடமாடும் தெய்வங்கள் என்று எல்லோராலும் சொல்லப்படுபவர்கள் மாதா, பிதா என்று அழைக்கப்படும் பெற்றோர் இவர்களுக்கடுத்தவர் கற்பிக்கும் குரு. இவர்களை விட மாதா பிதாக்களாலும் குருவாலும் தெய்வங்களெனப் போற்றப்படுபவர்கள் வைத்தியர்கள். நோயைத் தீர்த்து மகிழ்வுடன் மக்களை வாழ வைப்பவர்கள் அவர்கள்.

ஆனால் இந்த வைத்தியர்களால் மரணத்தைத் தள்ளி வைக்க முடியுமா? அல்லது நோயை மாற்ற முடியுமா?

வைத்தியர்களுக்கெல்லாம் வைத்திய நாதனாக சிவன் இருக்கிறான். சிவனால் தான் எல்லா நோய்களையும் குணப்படுத்த முடியும் என்கிறார்கள் அத்மீக வாதிகள். எத்தனையோ நோய்களுக்கு இன்னும் மருந்துகள் கண்டு பிடிக்கப்படவில்லை. மருந்துகளும் நோயை முற்றாகக் குணப்படுத்துவதில்லை. அம்மருந்துகள் வேறு நோய்களை உண்டாக்குவதுமுண்டு.

எத்தனையோ வருடங்கள் மருத்துவக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்ற மருத்துவர்கள் இறுதியாகக் கூறுவது; ''நான் என்னாலானவற்றைச் செய்து விட்டேன். இனிக் கடவுள் தான்''.

பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி செய்யும் விஞ்ஞானிகள் புதிதாக எதையும் சொல்லவில்லை. இரண்டாயிரம் மூவாயிரம் வருடங்களுக்கு முன்பு நமது சித்தர்களால் சொல்லப்பட்டவற்றையே சொல்கிறார்கள்.

ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு; ''ஒரு மனிதன் தனது பற்களாலேயே தனது புதை குழியை வெட்டுகிறான்'' என்று.

இலை குழைகள் கனிவகைகளைப் புசித்த நம் முன்னோருக்கு நோய்கள் அதிகம் இருக்கவில்லை. தேவையற்ற உணவுகளை உண்பதாலும், அளவுக்கதிகமாக உண்பதாலும் உண்ட உணவு சாமிபாடடைய முன்பு உண்பதாலும் தான் நோய்கள் எம்மை அனுகுகின்றன. அதற்காகத் தான் இந்துமதம் எந்தெந்த உணவுகள் உண்ண வேண்டும் எந்தெந்த உணவுகளைத் தவிர்க்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது. இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு இரசாயனப் பசளை இடுவதில்லை. கிருமிநாசினிகள் தெளிப்பதில்லை. காற்று சுத்தமாக இருந்தது. சுத்தமான காற்றும்

சுத்தமான நீரும் நோயைத் தடுக்கும் சக்தி உள்ளவை. இன்று சுத்தமான காற்றிருக்கா? இல்லை சுத்தமான நீர் தன்னும் இருக்கா?

விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து முன்னேற்ற மடைந்ததாகக் கூறிக் கொண்டு சூழலை மாசுபடுத்தியது தான் மிச்சம். இந்த விஞ்ஞானிகளால் நாளை நடப்பதை ஆரூடம் கூற முடியுமா?

எப்பொழுது ஒருவனுக்கு மரணம் வரும் என்று கூற முடியுமா?

இல்லை உயிர் எங்குள்ளது என்பதைக் காட்ட முடியுமா?

பிறப்பில் தற்பொழுது விஞ்ஞானிகள் புதுமை செய்வதாகக் கூறிக் கொள்கிறார்கள். முருகன் எப்படித் தோன்றினான். வீரபத்திரர் எப்படித் தோன்றினார். இவர்களை விட ஐயப்பன் எப்படித் தோன்றினார்.

பிள்ளையாரின் தலை துண்டிக்கப்பட்டதும் யானையினது தலை பிள்ளையாருக்குப் பொருத்தப்பட்டுள்ளது இது புராணம் கூறும் கதை.

இராவணன் கைலாய மலையைத் தூக்கியிருக்கிறான். அத்துடன் விமானத்தில் பறந்து திரிந்திருக்கிறான். அனுமான் வானவெளியூடாக பறந்து சென்றிருக்கிறான். சூரனின் தலை வெட்ட வெட்ட உடலோடு பொருந்தியுள்ளது. இவையெல்லாம் நாம் கற்றவை. இவை பொய்யென்றால் தற்பொழுது பத்திரிகைகளில் வருபவை எப்படி மெய்யாகும்.

வாழ்க்கையை நல்ல முறையில் பண்படுத்த உதவுவது இந்துசமயம். அதற்காக வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களைப் பற்றியே கூறுகிறது. இந்தத் துன்பங்களுக் கெல்லாம் காரணம் பிறப்பு. பிறவாதிருந்தால் துன்பமில்லை. கிடைத்த மனிதப் பிறவியில் நன்மைகளைச் செய்து சமய நெறியில் வாழ்ந்து இறைவனை அடை என்று கூறுகிறது இந்துசமயம்.

ஒருமனிதனின் பிறப்பையோ அல்லது இறப்பையோ யாரும் கூற முடியாது. இறக்கும் வரையும் இன்பமாக வாழ வேண்டும். இருக்கும் போது நடந்து கொண்ட முறைகள் மூலம் இறந்த பின்பும் இன்பமாய் வாழச் சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

புண்ணியம், பாவம், மறுபிறப்பு என்பன உண்டு என்பதற்கு அத்தாட்சியாக மிருகங்களைக் கூட கூறலாம்.

எனது அயல் வீட்டு நாய் நான்கு குட்டிகள் ஈன்றது. நான்கையும் நான்குபேர் பிடித்துக் கொண்டு சென்றனர்.

ஒருவரின் வீட்டில் கதிரையில் படுத்திருக்கிறது. நேரத்திற்கு நேரம் சத்தான உணவு கிடைக்கிறது. குளிப்பாட்டி செல்லமாக வைத்திருக்கிறார்கள்.

மற்ற நாய் குப்பை மேட்டில் படுத்திருக்கறது. இன்னொன்று இறந்து விட்டது. மற்றது அரைவயிற்று உணவுடன் காலந்தள்ளுகிறது. நான்குக்கும் ஏன் இந்த நிலை? அவரவர்கள் செய்த பாவபுண்ணியப் பலன்கள் தான் இவற்றிற்குக் காரணம்.

### ***காலம்***

காலம் என்பது மக்களுக்கு முக்கியமானது. எல்லாம் காலத்தின் படி தான் நடக்கும் என்பார்கள்.

நாம் நினைத்தவை நடை பெற்றால் நல்ல காலம் என்கிறோம். அவை நடக்கா விட்டால் கெட்டகாலம் என்கிறோம்.

நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் அதிஷ்டம் என்கிறோம். நடக்கா விட்டால் துரதிஷ்டம் என்கிறோம்.

நல்ல காலமும் கெட்ட காலமும் அதிஷ்டமும் துரதிஷ்டமும் ஒருவனுக்கு மாறி மாறி வரும்.

காலம் முயற்சியில் தங்கியுள்ளது என்கிறார் திருவள்ளுவர்.

‘‘தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்’’

தெய்வத்தின் அருள் கிடைக்கா விட்டாலும் ஒருவன் எடுக்கும் முயற்சிக்கேற்பக் கூலி கிடைக்கும் என்கிறது குறள். எத்தனை துன்பங்கள் வந்த போதும் காலங்காத்திருப்பவன் துன்பங்களில் இருந்து விடுதலை பெறுகிறான்.

காலம் என்பது கடவுளுக்குக் கூட உள்ளதாக இந்துமதம் கூறுகிறது. சிவன், முருகன், பிள்ளையார் மும்மூர்த்திகள் காலம் பகைத்த போது துன்பப்பட்டதாகப் புராணங்கள் கூறுகின்றன.

கோயில்களுக்குக் கூட நல்ல காலம் கெட்டகாலம் அதிஷ்டம் துரதிஷ்டம் உள்ளது. மூலமூர்த்தி வைக்கப்பட்ட நேரத்தைப் பொறுத்தே அக்கோயிலின் பலன்கள் உள்ளன.

இலங்கையின் பிரசித்தி பெற்ற தலங்களை எடுத்து நோக்கினால் ஒரு காலத்தில் மிகவும் சிறப்பாக இருந்த ஆலயங்கள் பல இன்று பாழடைந்த நிலையில் உள்ளன.

கடவுள்க்கும் காலம் உண்டென்று கூறுவது இந்துமதம்.

பூமித்தாய்க்கும் பருவ காலங்கள் உள்ளன. ஒவ்வொரு காலங்களிலும் வெவ்வேறு விதமான மாற்றங்களுக்குட்படுகிறாள் பூமாதேவி. இருந்த போதும் மனிதர்களை அவள் ஏமாற்றியதில்லை.

மோசமான பருவகாலங்களில் வெள்ளப் பெருக்கு, கடும் உஷ்ணவம் என்பன இருப்பது போலச் சிலரது வாழ்விலும் மோசமான காலம் தோன்றுவதுண்டு. அப்பொழுது அவர்களது சொத்து சுகம் யாவும் இழக்கப்படுவதும் உண்டு. அப்படியான பலர் துன்பங்களைத் தாங்கிய பின்பு நல்வாழ்வை அடைந்திருக்கிறார்கள்.

ஏழூரில் இரண்டு வருடங்கள் மழை பெய்யவில்லை. அதனால் பண்ணையாரது வயல்கள் வெடித்துப் பிளந்திருந்தன. கால்நடைகள் நீரின்றி இறந்து கொண்டிருந்தன.பண்ணையில் வேலை இல்லாததால் தொழிலாளர்கள் வேறுகிராமங்களை நோக்கிச் செல்லத் தொடங்கினர்.

பண்ணையாரிடம் பொருள் எதுவும் இல்லை. அன்றன்றைய உணவுக்கே மிகுந்த சிரமப்பட்டார். கிராமம் முழுவதும் இடம் பெயர்ந்து விட்டது. பண்ணையாரின் குடும்பத்தைத் தவிர வேறு எவரும் அக்கிராமத்தில் இல்லை.

பண்ணையாருக்கு வேறிடம் செல்லவோ இரந்துண்ணவே முடியவில்லை. அதனால் ஊரின் எல்லையில் இருந்த தனது பண்ணை நிலத்தில் உள்ள கிணற்றை ஆழமாக்கினால் நீர் ஊறும் என்று நினைத்து ஆழமாக்கினார். அதற்குள் பெரும் புதையல் கிடைத்தது.

அவரது பாட்டனாரது நிலம் அது. அவர் உயிரோடு இருக்கும் பொழுது அந்த நிலத்தை விற்கக் கூடாது எந்தப் பஞ்சத்தையும் அது தாங்கும் என்று கூறியதன் அர்த்தம் அவருக்கு அப்பொழுதுதான் விளங்கியது.

துன்பத்தைக் கண்டு அஞ்சக் கூடாது முயற்சி இருந்தால் உயர்வடையலாம்.

***பயன்பாடு***

"புத்தியுள்ள மனிதரெல்லாம் வெற்றிகாண்பதில்லை. வெற்றி பெற்ற மனிதரெல்லாம் புத்திசாலி இல்லை".

கவிஞர் கண்ணதாசனின் பிரபலமான ஒரு பாடல் திருக்குறளைப் போல இரண்டு அடியால் உலகத்தை அப்படியே அளந்துள்ளது.

யாழ்ப்பாணத்து மக்களைப் பொறுத்த வரை கல்விதான் மூலதனம் என்று எல்லோரும் சொல்கிறார்கள். கல்வி மூலதனம் தான். அதை மறுக்க முடியாது. கல்வி எதற்கு மூலதனம் என்று சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் கல்வி அறிவுக்குத் தான் மூலதனமே தவிர தொழிலுக்கு அல்ல.

தொழிலுக்கு கல்வி மூலதனம் என்று நினைத்துக் கற்ற பலரை விட, அறிவுக்குக் கல்வி தான் மூலதனம் என நினைத்துக் கற்ற பலர் இன்று ஓகோ என்று இருப்பதை நாம் காண்கிறோம்.

சமூகம் மனிதனை இரண்டு துறைகளில் மதிக்கிறது. ஒன்று கல்வி. மற்றது பணம்.

ஆனால் கல்விமூலமோ தொழில் மூலமோ நாம் பெற்றுக் கொள்வது பணத்தையே.

"பணம் பந்தியிலே குலம் குப்பையிலே" என்றும் ஒரு கவிஞன் பாட்டுப் பாடினான்.

“தேசம் ஞானம் கல்வி ஈசன் பூசையெல்லாம் காசுக்குப் பின்னாலே” என்றும் ஒரு கவிஞன் பாடியுள்ளான்.

பணத்தைத் தேடுவதற்குக் கல்வி தேவையில்லாமல் இருக்கலாம். ஆனால் தேடிய பணத்தை நல்ல முறையில் செலவு செய்யவும் அதைப் பாதுகாக்கவும் கல்வியறிவு தேவை.

பணமுள்ள பலருக்கு அதை நல்ல முறையில் செலவு செய்யத் தெரியவில்லை. நல் வழிகளில் செலவு செய்யத் தெரிந்தவரிடம் பணம் இல்லை.

பணம் தான் வாழ்க்கையல்ல. இன்று யாழ்ப்பாணத்தில் பணக்காரர்கள் தான் கஷ்டப்படுகிறார்கள். பெற்ற பிள்ளைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாடுகளில் உள்ளனர். கேட்டவுடன் தாராளமாகப் பணத்தை அனுப்புகின்றனர். ஆனால் அவர்களால் விரும்பிய படி செலவு செய்ய முடியவில்லை. அயலவர்கள், இனத்தவர்கள், நண்பர்கள் என்றிருப்போர் வயதான இவர்களை எத்தனை நாட்களுக்குத் தான் பராமரிப்பர்.

பருத்திமலையில் ஒரு விவசாயி இருந்தான். அவனிடம் ஏராளமான தோட்ட நிலங்கள் இருந்தன. ஆனால் வருமானம் குறைவு. மிகவும் கஷ்டப்பட்டு உழைத்தாலும் இலாபம் கிடைப்பதில்லை. எனவே அவன் தனது தோட்டக் காணியை விற்று வந்த பணத்தை நகைகளை வாங்கிக் கொண்டு வட்டிக்குக் கொடுத்தான்.

ஒரு நாள் இரவு கள்வர்கள் அவனது வீட்டை உடைத்து அவனையும் மனைவியையும் கட்டிப் போட்டு விட்டு திருடிச் சென்று விட்டனர்.

தற்பொழுது நகை கொடுத்தவனுக்கு திருப்பிக் கொடுக்க வழியில்லாது திண்டாடுகிறான்.

எனவே பணத்தை எவரும் சம்பாதிக்கலாம். அதை செலவு செய்வதற்கும் பாதுகாப்பதற்கும் அறிவு தேவை.

தான் சேமித்த பணத்தின் மூலம் ஒரு பத்துப் பேருக்காவது தொழில் கொடுத்தால் பத்துக் குடும்பங்கள் வாழும்.

தான் உழைத்த பணத்தின் மூலம் பத்துக் குழந்தைகளுக்கு கல்வியறிவு புகட்டினால் நாட்டில் கல்வியறிவு பெருகும். நல்லோர் கூட்டம் உருவாகும்.

தன்னிடமுள்ள பணத்தின் மூலம் பாடசாலை, கோயில், சனசமூக நிலையங்களைக் கட்டினால் நாட்டின் அறிவு பெருகுவதோடு கட்டியவனின் பெயரும் நிலைக்கும்.

பாடசாலையின் வாசலுக்குச் செல்லாத பலர் விஞ்ஞானிகளாகவும் இருக்கின்றனர். தொழில் அதிபர்களாக இருக்கின்றனர். நாட்டின் தலைவர்களாகவும் இருந்து நல்லாட்சி புரிந்துள்ளனர்.

கல்விமூலம் பெற்றுக் கொண்ட அறிவு நல்ல முறையில் பணத்தைத் தேடி அதை நல்ல வழியில் பயன்படுத்த உதவும். அப்படியான பலர் இன்று வாழ்வதால் தான் உலகம் வாழ்கிறது.

பாடுபட்டுத் தேடிய பணத்தை புதைத்து வைக்க வேண்டாம் என்று நமது தமிழ் மூதாட்டியரான ஔவையார் கூறியிருக்கிறார். இன்று பெரும்பான்மையானோர் பாடு பட்டுத் தேடிய பணத்தையும் நகைகளையும் வங்கிகளில் புதைத்து வைத்திருக்கின்றனர். இப்படியாக புதைத்து வைத்த பணம் நாட்டு மக்களின் நலன் கருதி தொழிற்சாலைகளால் பலரது வாழ்வு செழிக்கும். பணக்காரனுக்குப் பணமும் சேரும்.

***பழக்கம்***

“தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்”.
இது வள்ளுவர் வாக்கு.

நல்லவர்கள் தீமை செய்ய மாட்டார்கள். நல்ல இன மரமானது நல்ல சுவையான கனிகளைக் கொடுக்கும். அதே போல் புளிப்புடைய மரங்கள் இனிமையான கனியைத் தரமாட்டாது. கனிகளைக் கொண்டு மரத்தின் தன்மையை உணர்வது போல் பிள்ளைகளைக் கொண்டு பெற்றோரை அறிந்து கொள்ளலாம்.

எனவே பெற்றோர் நல்ல முறையில் வாழ்ந்தால் பிள்ளைகளும் நல்ல முறையில் வாழக் கற்றுக் கொள்வார்கள். புளிச் சுவையை உடைய அம்மரங்களில் நல்ல இன மரத்தின் கிளையை

ஒட்டி நல்ல பயன்களை மக்கள் பெறுகிறார்கள். இதே போல தீயவர்கள் நன்மக்களுடன் சேர்வதால் தமது தீய பழக்கங்களை விட்டு நல்லவர்களாக மாறியுள்ளனர்.

பழைய கதை ஒன்று இப்படிக் கூறுகிறது.

ஓர் ஊரில் நல்லதம்பி என்ற ஏழை விவசாயி ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு வரதன் என்றொரு மகன் இருந்தான். தன் மகன் தன்னைப் போலத் துன்பப்படக் கூடாதென்பதற்காக வரதனை நல்லதம்பி பட்டணத்தில் உள்ள பாடசாலையொன்றில் விட்டுக் கற்பித்தான். வரதனும் நன்றாகப் படித்து நல்ல நிலைக்கு வந்து விட்டான்.

மகனின் நிலையை அறிந்த நல்லதம்பி மிகவும் மகிழ்ச்சியடைந்தார். மகனுக்கு திருமணம் செய்ய விரும்பி மணப் பெண்ணைத் தேடினார்.

நல்லதம்பி மணப் பெண் தேடும் விடயம் அவ்வூர் பண்ணையாருக்குத் தெரிந்தது. ஊரில் நன்கு கற்று பெரிய உத்தியோகம் பார்க்கும் நல்லதம்பியின் மகனைத் தனது மகளுக்குத் திருமணம் செய்ய விரும்பினார் பண்ணையார்.

பண்ணையாரின் விருப்பத்தை அறிந்த நல்லதம்பி தனது மகனுக்குப் பண்ணையாரின் மகளைத் திருமணம் செய்து கொடுத்தான்.

காலம் உரண்டோடியது வரதனுக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அதற்கு கண்ணன் என்று பெயரிட்டனர்.

கண்ணன் வளர்ந்து பெரியவனானான்.

வரதன் தனது மனைவியின் வேண்டுகோளின் படி தனது தந்தையை வெறுத்தான். அவரை அவன் கவனிப்பதே இல்லை. ஒரு பழுதடைந்த ஓட்டில் அவருக்குச் சாப்பாடு கொடுத்து வந்தான். இது கண்ணனுக்கு மிகுந்த மனவருத்தத்தைக் கொடுத்தது. தனது தந்தைக்கு நல்ல புத்தி கற்பிக்க விரும்பினான் கண்ணன். ஒருநாள் தனது பேரனான நல்லதம்பி உணவருந்தும் பழுதடைந்த ஓட்டை எடுத்து மறைத்து வைத்தான்.

சாப்பாட்டு நேரம் நல்லதம்பி தான் உணவருந்தும் ஓட்டைத் தேடினார். அதைக் காணவில்லை. அவருக்குப் பயமாக இருந்தது.

ஓடு காணாமல் போனதால் கோபத்துடன் தகப்பனை ஏசினான் வரதன்.

அப்பொழுது அங்கே உடைத்த ஓட்டுடன் வந்தான் கண்ணன்; ‘‘அப்பா இந்த ஓட்டை நான் தான் எடுத்து வைத்தேன். நீங்கள் ஏன் அவரை ஏசுகிறீர்கள்’’ என்றான்.

‘‘நீ ஏன் அதை எடுத்தாய்?’’ என்று அதட்டினான் வரதன்.

‘‘அப்பா நீங்கள் வயதானால் இந்த ஓட்டில் சாப்பாடு தரலாம் என்பதற்காகத்தான் எடுத்து வைத்தேன்’’ என்றான் கண்ணன்.

தனது தவறை உணர்ந்து கொண்ட வரதன் ,அன்று முதல் தனது தந்தையை அன்போடு பராமரித்தான்.

இது பழைய கதை. படிப்பினையூட்டும் நல்ல கதை. ஆனால் இப்படியான கதைகள் தற்போது கிடைப்பதில்லை. அதனால் இப்படியான பழைய கதைகளை பெற்றோர் தேடி எடுத்து தமது பிள்ளைகளுக்குக் கற்பிக்க வேண்டும்.

அன்று ஆசிரியர்கள் அர்பணிப்புடன் கடமை செய்தனர். அவர்களுக்குத் தம்மிடம் கல்வி கற்கும் மாணவர்களின் பரம்பரையையே தெரியும். ஆனால் இன்று தனது வகுப்பில் கற்கும் மாணவனைக் கூடத் தெரிந்து கொள்ளாத ஆசிரியர்கள் பலர் இருக்கிறார்கள். பாடசாலைக்கு வரு முன் ரியூசன் பாடசாலையால் சென்ற பின் ரியூசன். பின் இரவிரவாகத் தொலைக் காட்சி பார்த்தால் இதனால் மாணவர்களும் ஆசிரியரில் பற்றில்லாமல் கற்கிறார்கள்.

பெற்றோருக்கும் பாடசாலையை விட ரியூட்டறிகள் மீது தான் நம்பிக்கை அதிகம். மாணவர்களுக்கு கல்வியை விட மற்றய விடயங்களில் தான் ஆர்வம் அதிகம். ஆசிரியர்களுக்குக் கடமையை விட வேதனத்தில் தான் அதிக பற்று. இந்நிலையில் எமது சமய நீதிக் கதைகளை பெற்றாரும் ஆசிரியர்களும் மாணவர்களும் படித்துப் பயன் பெறல் வேண்டும். அவற்றை அக்கறையுடன்

படித்தால் பற்றை அறுக்க வேண்டிய விடயங்கள் தெரிய வரும்; பற்று வைக்க வேண்டிய விடயங்கள் தெரியவரும்.

நெருக்கடிகள், பிரச்சினைகள், துன்பங்கள் மிகுந்த இவ் உலக வாழ்வை இன்பப்படுத்துபவை இந்து சமயக் கதைகளே.

‘‘ஐந்தில் வளையாது ஐம்பதில் வளையாது’’

‘‘விளையும் பயிரை முளையில் தெரியும்’’

‘‘தொட்டிலில் பழக்கம் சுடுகாடு மட்டும்’’

இது எமது சமய முது மொழிகள். எனவே பழக்கங்களைச் சிறு வயதிலேயே பழகிக் கொள்ளுங்கள்.

மனிதர்கள் மட்டுமல்ல விலங்குகள் பறவைகள் கூடத் தம்மோடு இருப்பவர்களைப் பார்த்தே வாழக் கற்றுக் கொள்கின்றன. இன்று உளவியலாளர்களும் பொலிசாரும் நாய்களையும் எலிகளையும் பல செயல்களுக்குப் பழக்கி வெற்றியடைந்துள்ளனர். மனிதரால் பழக்கப்பட்ட நாய்கள் மனிதர்களை விட சக்தி மிக்கனவாக இருக்கின்றன. வெடி குண்டுகள், போதைவஸ்துக்கள் போன்றவற்றை அவை இலகுவில் கண்டு பிடித்துள்ளன. இதை விட குற்றவாளிகளின் எச்சங்களை முகர்ந்து பார்த்து குற்றச் செயல்கள் புரிந்தவர்களைக் கண்டு பிடிக்கின்றன.

பழக்கப்பட்ட மிருகங்களால் செய்யக் கூடியவற்றை ஏன் மனிதன் பழகிச் செய்யக் கூடாது. பல பெரியவர்கள் பழக்கங்களைப் பற்றிக் கூறியுள்ளார்கள். ஆறுமுக நாவலர் மனிதர்கள் தினமும் செய்ய வேண்டிய செயல்கள் அனைத்தையும் எழுதியுள்ளார். அவற்றைப் பழகி ஒழுகுவதில் என்ன கஷ்டம் இருக்கிறது.

இந்து மதமே பழக்கத்தைக் கைக் கொள்ளும் படி வற்புறுத்துகிறது. பழக்கம் ஒழுக்கமாகப் பிற்காலத்தில் மாறும். அதனால் தான் பெரியவர்கள் அனைத்திற்கும் விதிமுறைகளை எமக்கு ஆக்கித் தந்துள்ளனர். அவற்றைக் கைக்கொள்வதில் எமக்கு என்ன கஷ்டம் இருக்கிறது.

### *மெய்ஞ்ஞானம்*

உலகத்தை இயக்குவது எது?

விஞ்ஞானிகள் விஞ்ஞானம் என்கிறார்கள்.

ஞானிகள் மெஞ்ஞானம் என்கிறார்கள்.

விஞ்ஞானம் எவ்வளவோ முன்னேறி விட்டது. அதனால் சாதிக்க முடியாதது ஒன்றும் இல்லை என்பது பலரது வாதம்.

எத்தனையோ நோய்களை உலகில் இருந்து விரட்டி விட்டது விஞ்ஞானம்.

எத்தனையோ வசதிகளை உலகிற்கு அளித்துள்ளது விஞ்ஞானம்.

ஆனால் மெய்ஞானம் உலகிற்கு என்னத்தைச் செய்தது என்று கேட்போர் பலர் உள்ளனர்.

எமது ஆன்றோரின் கருத்துப் படி மெய்ஞானத்துள் விஞ்ஞானம் உட்பட சகலதும் அடங்கி விட்டது.

சமீபத்தில் ஒரு பத்திரிகையில் வந்த செய்தி இது.

அமரிக்கர்களைக் கலவரப்படுத்தும் நுளம்பு.

நுளம்புகளை ஒழிப்பதற்காக உலக நாடுகள் பாரிய அளவில் பணத்தைச் செலவு செய்து வருகின்றன. ஆனால் அவற்றை ஒழிக்க முடியவில்லை. ஒரு நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு நுளம்பும் ஒரு காரணமாகும். உலக நாடுகள் பெருந்தொகைப் பணத்தை வருடா வருடம் செலவு செய்தும் எவ்வித பயனையும் பெறவில்லை.

அண்மையில் வெஸ்ட்னநல் என்ஸபலயிட்டீஸ்'' என்ற நுளம்பினால் அமரிக்க மக்கள் பெரும் பீதிக்குள்ளாகியிருக்கின்றனா். காரணம் இந்த நுளம்பு ஒரு பயங்கர நோயைப் பரப்பி வருகிறது. இதன் காரணமாக அமரிக்காவின் வெளியரங்குகளில் நடத்தப்பட விருந்த பல களியாட்ட நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள், கூட்டங்கள் விளையாட்டுப் போட்டிகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டன.

குழந்தைகளை வீட்டுக்குள்ளேயே பூட்டி வைப்பதில் பெற்றோர் ஆர்வம் காட்டினர். மிருகங்களையும் பறவைகளையும் கூட இந்த நுளம்பு விட்டு வைப்பதில்லை.

பொஸ்ரன் நகரில் இறந்து கிடந்த ஒரு குருவியைப் பரிசோதித்த டாக்டர்கள் மேற்படி குருவி ''வெஸ்டனநல்என்ஸ பலயிட்டீஸ்'' என்ற நுளம்புக்கடி காரணமாக இறந்துள்ளது என்று கூறியுள்ளார்.

இந்த நுளம்பு கடிப்பதனால் ஈரல் பாதிக்கப்படுவதுடன் நரம்பு மண்டலமும் பாதிக்கப்படுகிறது. இதனால் அண்மையில் ஏழுபேர் மரணமடைந்துள்ளனர்.

நுளம்புத் தொல்லை நிலவும் ஏழு மாநிலங்களில் அமரிக்க அரசுதடுப்பு நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியுள்ளது. இது தான் அந்தப் பத்திரிகைச் செய்தி.

விஞ்ஞானம் எதைச் சாதித்த போதும் மெஞ்ஞானமின்றி எவையும் நிலைத்திராது.

விஞ்ஞான முறையில் நுளம்புகளை அழித்த போதும் அவை பெருகிக் கொண்டே இருக்கின்றன.

எத்தனையோ ஆயிரம் வருடங்களாகக் கடலில் மீன்கள் பிடிக்கப்பட்ட போதும் இன்று வரை அதன் பெருக்கம் குறையவில்லை.

இந்தியாவில் எலிகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. பத்துக் கோடி மக்களுக்குக் போதுமான உணவை வருடாவருடம் எலிகள் உண்டு வருகின்றன. எத்தனையோ விஞ்ஞானக் கருவிகள் கண்டு பிடிக்கப்பட்ட போதும் எரிமலை, பூமி அதிர்ச்சி என்பவை எப்போது நிகழும் எனக் கண்டு பிடிக்க முடியாதுள்ளது.

நாளை என்ன நடைபெறும் என்பதை விஞ்ஞானம் கற்றவர்களால் கூற முடிவதில்லை.

ஆனால் ஞானிகள் மேற்கூறப்பட்டவற்றிற் கெல்லாம் விடை கூறியுள்ளனர்.

அதை விடச் சிற்றறிவு படைத்த பூச்சி, புழுக்கள், பறவைகள், விலங்குகள் யாவும் இவற்றையெல்லாம் கண்டு பிடித்து எமக்கு அறிவிக்கின்றன.

யப்பான் நாட்டில் எரிமலை, பூமிஅதிர்வு ஏற்படு முன் பூச்சி, புழுக்கள், பறவைகள், விலங்குகள் அப்பிரதேசத்தை விட்டு வெளியேறத் தொடங்கி விடுமாம். அதைப் பார்த்து மக்களும் வெளியேறி விடுவார்கள்.

இன்றும் காகத்தையும், பல்லியையும் பூனையையும் நம்பும் அறிவாளர்கள் இருக்கின்றனர். இனிச் சொல்லுங்கள் பார்க்கலாம். விஞ்ஞானம் மெய்ஞானத்துள் அடங்கிறதா இல்லையா என்று.

### *அறம்*

நிலையானது எது?

ஞானிகள் கடவுள் ஒருவர் தான் நிலையானவர் என்றும் மற்றவையெல்லாம் அழிந்து விடும் போலிகள் என்கிறார்கள்.

உலகவியலாளர்கள் உலகம் நிலையானது; உயிர்களும் நிலையானவை என்கிறார்கள்.

அறம் நிலையானது என்று சமயங்கள் கூறுகின்றன. அதனால் போலும் 'அறம் செய்ய விரும்பு' என்று ஔவையார் கூறியுள்ளார்.

'அறம் செய்' என்றவுடன் பொருளைக் கொடுத்தல்; பொன்னைக் கொடுத்தல்; பணத்தைக் கொடுத்தல் என்று தான் எல்லோரும் நினைக்கிறார்கள். வசதியுள்ளவன், பணக்காரன் பொன்னை, பொருளை, பணத்தைக் கொடுக்கிறான்.

அப்படியாயின் வசதியில்லாதவன் அறம் செய்ய முடியாதா...? என்று நினைக்கலாம்.

‘‘எனக்குக் கொடுக்க வேண்டும் என்று மனம் இருக்கு வசதிதான் இல்லை.’’ என்று பலர் கூறுவதை நாம் கேட்டிருக்கிறோம்.

பணத்தின் மூலம் நாம் எதைச் செய்கிறோம். பொருட்களை வாங்குகிறோம். வேலைகளைச் செய்விக்கிறோம்.

நம் முன்னோர் எதற்கும் பணத்தைப் பாவிக்கவில்லை. சவரத் தொழில், சலவைத் தொழில் போன்றவற்றிற்குக் கூட பொருளைத் தான் கொடுத்தார்

கிராமங்களில் தற்பொழுதும் மரணவீடுகளுக்கு உணவு வகைகளைக் கொடுப்பதும், அரிசி, பருப்பு தேங்காய், காய்கறிவகைகள் கொடுப்பதும் வழக்கில் உள்ளது.

முன்பு எமது கிராமங்களில் கமக்காரர் தோட்டச் செய்கையின் போது கூலி கொடாது தமக்குள் வேலைகளைப் பகிர்ந்து செய்யும் வழக்கம் இருந்தது.

நோயுற்றோருக்குச் செய்யும் உதவிகளும் அவர்களுக்கு சொல்லும் ஆறுதல் வார்ததைகளும் அறத்தின் பாற்பட்டவையே.

சொத்தை இழந்து நிற்கும் ஒருவன் படும் வேதனையை அறிந்து அவனுக்குச் சொல்லும் ஆறுதல் வார்த்தைகளால் அவன் மீண்டும் தொழில் செய்து உயர்வடைய வாய்ப்பேற்படுகிறது. எனக்குத் தெரிந்த ஒருவர் கொழும்பில் இருந்து கப்பலில் பொருள்களை ஏற்றி யாழ்ப்பாணம் கொண்டு வந்து விற்பனை செய்தார். அவரது கப்பல் கடலில் தாண்டு விட்டது. அவர் மனமுடைந்து தற்கொலை செய்யக் கூட முயற்சித்தார். அவருக்கு நான் கூறிய ஆறுதல் வார்த்தைகள் நம்பிக்கையூட்டின. அவர் மீண்டும் கப்பலில் பொருட்களை ஏற்றி வியாபாரம் செய்கிறார். இழந்த பொருட்களை ஈடு செய்தும் விட்டார்.

அதை விட அடுத்தவர் சொத்துக்கு ஆசைப்படாது அவரது சொத்தை அவரிடம் சேர்ப்பதும் அறத்தின் பாற்பட்டதே. ஒருவர் ஒரு பொருளைத் தொலைத்து விட்டார். அப்பொருளை கண்டெடுப்போர் அதை உரியவரிடம் சேர்ப்பதும் அறம் தான்.

அதை விட துன்பப்பட்டவனின் துயரில் பங்கேற்பதும் அறம் தான்.

‘‘மற்றறிவா நல்லினையாம் இளையம் என்னாது
கைத்துண்டாம் போழ்தே கரவாதறஞ்’’ என்கிறது நாலடியார்.

‘‘யாவர்க்கும் மாமிறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாமுண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கும் மாம்பிறர்க்கு இன்னுரை தானே.

உதவி நாடி வரும் எவருக்கும் பொருள் உதவி செய்ய இயலாவிட்டாலும் அவரின் மனம் மகிழும் படி இஞ்சொல் கூறுவது அறம் என்று திருமந்திரம் கூறுகிறது.

கடவுள் எப்படி நிலையானவர் என்கிறோமோ அதே போல் அறமும் நிலையானது.

### *சேவை*

மக்களில் பெரியவர் யார்?

மதிப்புள்ளவர் யார்?

பெருமை உள்ளவர்யார்?

இந்த மூன்று கேள்விகளையும் ஒருவரிடத்தில் கேட்டால் அவர் என்ன பதில் கூறுவார்?

மக்களில் பெரியவர் அரசியல்வாதி, மதிப்புள்ளவர் உயர்ந்த பதவியில் உள்ளவர். பெருமைக்குரியவர் நல்லொழுக்கம் மிகுந்தவர்.

அதை இன்னொருவரிடம் கேட்டால் தனது மனதுக்குத் தோன்றியபடி சொல்லுவார்.

வேறொருவரிடம் இதைக் கேட்டால் அவளும் தனது மனதிற்குத் தோன்றியதைச் சொல்லுவார்.

ஒவ்வொருவரும் தோற்றத்தால் மட்டுமல்ல எண்ணத்தால், சிந்தனையால், கருத்தால் கூட வேறுபட்டிருப்பதை நாம் காண்கிறோம்.

இவற்றிற்கு மாறாகப் பொதுவான கருத்தொன்று உண்டு.

மக்களில் பெரியவர்கள் என்போர் மக்களின் மனதைக் கவர்ந்தவராவர். ஒரு நாட்டைப் பொறுத்த மட்டில் நாடு முழுவதிலும் உள்ள மக்கள் விரும்பும் ஒருவர் பெரியவராக இருப்பார்.

ஒரு கிராமத்தைப் பொறுத்தவரையில் அந்த மக்களுக்கு உதவிகள் ஒத்தாசைகள் புரிபவர் தான் பெரியவராக இருப்பார்.

பதவி, பணம், பட்டங்கள் இன்று வரும் நாளை போய்விடும், பதவி, பணம், பட்டம் என்பவை சேவையின் மூலம் சிறப்படையுமே தவிர அவற்றால் மனிதன் சிறப்படைய முடியாது.

பதவி என்பது ஒருவருக்கு கடவுளால் கொடுக்கப்படுவது. அதிஷ்டத்தால் கிடைப்பது. அதிஷ்டம் என்பது கடவுளின் வரம்.

ஓர் உயர் பதவியைப் பெற்றவர் அப்பதவியின் மூலம் தன்னாலான சேவையைச் செய்தல் வேண்டும்.

பணத்தை உடையவர் அந்தப் பணத்தின் மூலம் பலர் வாழ வழிவகுத்தல் வேண்டும்.

பட்டத்தைப் பெற்றவர்கள் நேர்மையாகவும் நீதியாகவும் மக்களுக்குச் சேவை செய்தல் வேண்டும்.

கோப்பாய் என்ற கிராமத்தில் நகுலேஸ்வரர் என்ற அரச உயர் அதிகாரி ஒருவர் வாழ்ந்து வந்தார். அவரது மனைவியும் அரச திணைக்களம் ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்தார். அவர்களுக்கு ஒரே ஒரு மகன்.

நகுலேஸ்வரர் சட்டப்படி நடப்பவர். யாருக்கும் எந்த உதவியும் செய்ய மாட்டார். இனத்தவர்கள், நண்பர்கள், அயலவர்கள் அவரிடம் உதவி நாடிச் சென்றால் சட்ட நுணுக்கங்களைச் சொல்லி திருப்பி அனுப்புவாரே தவிர உதவி செய்ய மாட்டார்.

1996 ஆம் ஆண்டு காயத்திரி என்ற பெண் கைதடியில் தொழில் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு இரண்டு பிள்ளைகள், ஒன்று பிறந்து முப்பத்தொரு நாட்கள்.

காயத்திரி நகுலேஸ்வரரிடம் சென்று தனது நிலைமையைக் கூறித் தனக்கு இடமாற்றம் தரும்படி கோரினாள்.

“வருட ஆரம்பத்தில் தான் இடமாற்றம் கொடுப்பது வழக்கம். அத்துடன் உமக்கு சேவைக்காலம் போதாது இன்றும் இரண்டு வருடங்கள் அந்தப் பிரதேசத்தில் கடமையாற்ற வேண்டும்” என்றார் அதிகாரி.

“ஐயா கோப்பாயில் இருந்து மூன்றுமைல் தான் நான் தொழில் செய்யும் இடம். தற்பொழுது இராணுவத்தினர் காப்பரன் அமைத்திருப்பதால் பதினைந்து மைல் சுற்றிச் செல்ல வேண்டியுள்ளது. வாகனங்கள் இல்லை சைக்கிளில் தான் செல்ல வேண்டும்”.

“நீர் கைதடியில் ஒரு வீடு எடுத்திரும்”

“அவர் சுன்னாகத்தில் வேலை...”

வேலைக் கென்று வெழுக்கிட்டால் இவற்றையெல்லாம் பார்க்க முடியாது”

காயத்திரி கண்ணீருடன் திரும்பினாள். ஒருவருடம் அவளால் வேலைக்குச் செல்ல முடியவில்லை.

அந்த ஊரில் வாழ்ந்த நாதன் என்பவர் நகரில் உள்ள ஆஸ்பத்திரியில் சிற்றூளியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார்.

அந்தக் கிராம மக்களுக்கு அவர் தான் வைத்தியர், மருத்துவ ஆலோசகர், உதவியாளர்.

நடக்க முடியாதவர்களுக்கு கிளினிக் காட்டைக் கொண்டு சென்று மருந்து வகைகளை வாங்கி வந்து கொடுப்பார்.

ஆஸ்பத்திரியில் தங்கியிருப் போருக்கு காலை உணவு கொண்டு போய்க் கொடுப்பார். வைத்தியர்களிடம் அழைத்துச் செல்வார். எந்த நேரத்திலும் எந்த வேளையிலும் யார் வந்தாலும் உதவி செய்வார். அவர் படித்தது எட்டாம் வகுப்பு மட்டுமே.

நகுலேஸ்வரர் ஓய்வு பெற்று விட்டார். ஒரு நாள் அவரின் வீட்டுக்குள் நாகபாம்பென்று நுழைந்து விட்டது. நகுலேஸ்வரரின் மனைவி அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் சென்று அதைக் கலைத்து விடும்படி கூறினார். ஆனால் எவரும் அங்கு செல்லவில்லை.

சில நாட்களில் நகுலேஸ்வரனின் மனைவி காலமானார். அயலவர்கள் சிலர் ஒப்புக்குச் சென்று வந்தனர். பிரேதப் பெட்டியைத் தூக்கி பிரேத வாகனத்தில் வைக்கக் கூட ஆட்களில்லை.

சில நாட்களின் பின் நாதனின் தகப்பனார் இறந்து போனார். ஊரே அங்கு திரண்டிருந்தது. ஒவ்வொரு வேலையையும் செய்வதற்கு பலர் போட்டி போட்டனர். இவற்றையெல்லாம் ஒரு நாற்காலியில் இருந்து பாாத்துக் கொண்டிருந்தார் நகுலேஸ்வரர்.

பட்டம், பதவி யாவும் சேவையால் தான் பெருமையடைகின்றன. பட்டம் பதவியை விதி முறைக்கமையச் செய்த எவரும் மதிக்கப்பட்டதில்லை. விதி முறைகள் ஓர் ஒழுங்கு முறைக்கே தவிர சட்டமாகச் செயற்படுத்துவதற்கல்ல. சட்டத்தை விட மனதாபிமானம் உயர்ந்தது. நீதி மன்றங்களில் கூட மனிதாபிமானம் கணக்கிலெடுக்கப்படுகிறது.

**நம்பிக்கை**

நம்பிக்கை

வாழ்க்கை நம்பிக்கையில் தான் தங்கியுள்ளது.

மதங்கள் நம்பிக்கை யூட்டுகின்றன.

நாம் கற்ற கல்வி நம்பிக்கையூட்டுகிறது.

எமக்கு முன் வாழ்ந்த பெரியவர்களெல்லாம் நம்பிக்கையூட்டியுள்ளனர்.

மனிதன் தன் வாழ்நாளின் பெரும் பகுதியைத் துன்பத்தில் தான் கழிக்கிறான்.

நோய், பற்றாக்குறை, இடம்பெயர்வு, தொழிலின்மை, மகப்பேறின்மை இப்படி எத்தனையோ பிரச்சினைகள் தினமும் தோன்றி மனிதனை வதைத்தெடுக்கின்றன.

சோதிடம் மனிதனின் நம்பிக்கையின் முழுவடிவம். சோதிடம் பார்க்காத மனிதர்கள் குறைவு. கடவுளை நம்பாத நாஸ்திகனின் மனைவி சோதிடம் பார்ப்பாள், அதை அந்தக் கணவனால் தடுக்க முடியாது. துன்பங்கள் வரும் போது சோதிடர்கள் கூறும் பரிகாரங்களை கோயிலில் சென்று நிறைவேற்றுவதால் அத்துன்பங்கள் யாவும் நீங்கி விடும் என்ற நம்பிக்கை ஒவ்வொருவரினதும் மனதில் உண்டாகிறது.

இந்துமதக் கடவுள்களைக் கூடக் கிரகங்கள் துன்பப்படுத்தியதாக புராணங்கள் கூறுகின்றன.

புராணங்கள், இதிகாசங்கள், தேவார திருவாசங்களெல்லாம் சோதிடக் கலையைப் பற்றியும் கிரகங்களின் தாக்கங்களால் புராண இதிகாச புரிசர்கள் அடைந்த துன்பங்களைப் பற்றியும் கூறுகின்றன.

அவதார புரிசனான இராமன் கூட கிரகசாரத்துக்குட்பட்டு துன்பப்பட்டதாக இராமாயணம் கூறுகிறது.

இந்த நம்பிக்கையின் அடிப்படையில் தான் மக்களால் வாழ முடிகிறது.

ஒரு புதிய தொழிலைத் தொடங்கும் போது நல்ல நேரம் பார்த்து ஆரம்பிக்கச் சொல்வது நல்ல நேரத்தில் தொழிலைத் தொடங்கினால் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஊட்டுவதற்காகவே.

பாமரமக்கள் மட்டுமன்றி படித்தவர்கள் கூட சகுணங்களில் நம்பிக்கை வைத்துள்ளனர். இதுகும் வெற்றியை அடிப்படையாகக் கொண்டதே.

பூனை குறுக்கே செல்லக் கூடாது.

அமங்கலி எதிரே வருவது அமங்கலம்.

கழுதை கத்தினால் நல்ல சகுணம்,

நம்பிக்கையோடு வெளியே புறப்படும் ஒருவன் எதிரே சகுணப் பிழையானவர் வந்தால் திரும்பி வந்து வீட்டில் சில நிமிடங்கள் தங்கி விட்டுச் சென்றால் காரியம் கைகூடும் என்று நம்புகிறான். அதனால் அவன் நம்பிக்கையோடு திரும்பி வந்து காலதாமதமாகச் செல்கிறான். இதன் மூலம் வரும் நன்மை தீமைகளை அவன் பொருட்படுத்துவதில்லை. காரணம் சகுணத்தின் மீதுள்ள நம்பிக்கை.

காரியம் கைகூடினால் கடவுளின் செயல் என்கிறான். தனக்கு அதிஷ்டமிருக்கிறது என்று நம்புகிறான். இல்லாவிட்டால் கிரகங்கள் மீது பழியைப் போடுகிறான். இதனாலும் அவனுக்கு நம்பிக்கை யேற்படுகிறது.

எமக்கு முன் வாழ்ந்த பெரியவர்கள் துன்பங்களில் இருந்து விடுதலை பெறக் கடவுளை நம்புங்கள் என்று கூறிக் கடவுளுக்கு நேர்த்திக்கடன் வைத்து ஆராதனைகள் செய்யுங்கள் என்றும் கூறியுள்ளனர்.

நாம் ஒரு செயலைத் தொடங்கு முன் கடவுளை வணங்கி அவரிடம் அப் பொறுப்பை ஒப்படைக்கிறோம். அதனால் மனப்பாரம் குறைகிறது. பொறுப்பு இல்லாமல் போகிறது. எமது குல தெய்வம் எம்மைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கை எமக்குத் தோன்றுகிறது.

இதனால் தான் எமது மக்கள் செல் அடிக்கின்ற இந்தப் பூமியில் அச்சமின்றி வாழ்கின்றனர்.

ஆகாயவிமானத்தில் பயனிக்கும் ஒருவன் அந்த விமானம் விழும் என்று நினைத்தால் ஏறுவானா? தினமும் விமானங்கள் விழுந்து கொண்டிருக்கின்றன. இருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் விமானங்களில் பயணஞ் செய்கிறார்கள். விழும் என்று நினைத்தால் அவர்கள் பயனஞ் செய்வார்களா? அவர்கள் பிராயாணம் செய்வதற்குக் காரணம் நம்பிக்கை. அந்த நம்பிக்கையைச் சமயங்களே அவர்களுக்கு உண்டாக்குகின்றன.

பகுத்தறிவாளர் இவற்றையெல்லாம் மூட நம்பிக்கை என்று சொல்கிறார்கள். எனினும் அவர்கள் எதிலோ ஒன்றிலே நம்பிக்கை வைத்துத்தான் காரியமாற்றுகிறார்கள்.

அது தன் நம்பிக்கையாக இருக்கலாம். அதுகும் ஒரு வகை நம்பிக்கை தானே. சகுனங்கள், சோதிடம், கடவுள் என்பன தன் நம்பிக்கையையும் கொடுக்கின்றன.

### ***உன்னிடமே உள்ளது***

நிம்மதி மனிதனுக்கு எட்டாத பொருளாகி விட்டது.

வீட்டில் நிம்மதி இல்லை.

சமூகத்தில் நிம்மதி இல்லை.

ஏன் நாட்டில் கூட நிம்மதி இல்லை.

உலகில் நிம்மதியான ஓர் இடம் எங்காவது இருக்கா?

கையில் நெய்யை வைத்துக் கொண்டு வெண்ணெய்க்கு அலைந்த மாதிரி.

உமாபதி சிவாச்சாரியார் கூறியது போல வெள்ளத்துள் நின்று கொண்டு தாகத்தினால் வருந்துவவன் போல நிம்மதியை ஒவ்வொரு உயிரினமும் தேடியலைகிறது. நிம்மதி எங்கே உள்ளது என்று யாரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

நிம்மதி என்பது அவரவர் மனத்திலேயே உள்ளது.

போதுமென்ற மனமிருந்தால் அங்கே நிம்மதி உறைந்திருக்கும்.

அடுத்தவனின் பொருளில் ஆசைப்படாமல் இருப்பன் நெஞ்சில் நிம்மதி நிறைந்திருக்கும்.

புலன்களையும் பொறிகளையும் கட்டுப்படுத்தியவனின் நெஞ்சில் நிம்மதி இருக்கும்.

துன்பங்களைத் தூசாக மதிக்கும் மனிதனின் மனதில் நிம்மதி மலர்ந்திருக்கும்.

வருமானத்தில் மனநிறைவு காணும் உழைப்பாளியின் மனதில் நிம்மதி நிலைத்திருக்கும்.

அன்பான மனைவி; புரிந்துணர்வுடைய உறவினர், நன்மக்கள், இவர்களை உடைய குடும்பத் தலைவனின் மனதில் நிம்மதி இருக்கும்.

கடவுளைப் பூரணமாக நம்பியவனின் உள்ளத்தில் நிம்மதி பெருகியிருக்கும்.

கடமையைச் சரியாகச் செய்யும் ஊழியனின் மனதில் நிம்மதி நிலைத்திருக்கும்.

அச்சமற்றவனின் மனதில் நிம்மதி இருக்கும்.

இப்படி ஒவ்வொருவரது மனதிலும் இருக்க வேண்டிய நிம்மதியை மக்கள் எங்கெல்லாமோ தேடியலைகிறார்கள்.

நிம்மதியின் மூலம் ஒரு மனிதன் சகல வளங்களையும் பெறுகிறான். உறுதியுடையவனாக இருக்கிறான்; நோய் அவனை அணுகுவதில்லை; முதுமை அவனை நெருங்குவதில்லை.

நிம்மதியடைந்த மனிதனுக்கு எந்நாளும் இன்பமாகக் கழியும்.

வேலூரில் நந்தன் என்ற துறவி வாழ்ந்து வந்தார். அவர் வேலூர்க் காட்டின் அருகே ஒரு குடிசை அமைத்து வாழ்ந்து வந்தார்.

கிராமமக்கள் விறகு சேகரிப்பதற்காகவும் வேட்டையாடுவதற்காகவும் அக்காட்டுக்குச் செல்வதுண்டு. அவ்வேளையில் துறவியுடன் தங்கிச் செல்வார்கள்.

தன்னிடம் தங்கும் மக்களிடம் துறவி அன்பாகப் பேசுவார். அவர்களது குடும்ப விசயங்களைக் கேட்பார். அவர்களுக்கு ஆலோசனை கூறுவார். துன்பப்பட்ட மக்களுக்கு அவரின் வார்த்தைகள் இதமளித்தன.

நாளைடைவில் அவ்வூர் மக்கள் எல்லோரும் வந்து அவரைத் தரிசித்துச் சென்றனர். அவரது புகழ் அரசனின் காதுகளுக்கும் எட்டியது.

மக்களின் மனதைக் கவர்ந்த துறவியை அரசன் அரண்மனைக்கு வருமாறு தூது அனுப்பினான்.

துறவி மறுத்து விட்டார்.

இரண்டாம் முறை பொன் பொருட்களுடன் முதல் மந்திரியை அனுப்பினான். துறவி அவற்றைத் திருப்பி அனுப்பியதுடன் அரண்மனைக்குச் செல்ல மறுத்து விட்டார்.

ஒரு நாள் துறவியின் மேல் அதிக பாசமுள்ள முத்தையன் என்ற ஏழைக்குடியானவன் தனது குடிசைக்கு வரும்படி துறவியை இரந்து கேட்டான்.

துறவி சம்மதித்து அங்கே சென்றார்.

துறவி சென்ற விசயம் அரசனின் காதுகளுக்கு எட்டியது. படைவீரர்களை அனுப்பி துறவியைக் கைது செய்து அரண்மனைக்கு கொண்டு வரச் சொன்னான்.

துறவி சிங்காசனத்தில் இருந்த அரசனைப் பார்த்துச் சிரித்தார்.

துறவியின் சிரிப்பு அரசனுக்கு கடுஞ்சினத்தைக் கொடுத்தது. ‘‘இந்தப்பரதேசியை சிரச்சேதம் செய்யுங்கள்’’ என்று உத்தரவிட்டான்.

துறவி மீண்டும் சிரித்தார். பின்; ‘‘அரசே மனதில் நிம்மதி உள்ள ஒரு மனிதனை யாராலும் எதுவும் செய்து விட முடியாது. நிம்மதி உள்ளவனது உள்ளத்தில் ஆசை, அவா, பற்று, உணர்வு, பதவியாசை, புலனுணர்வுகள் போன்றவை இருக்கமாட்டா. இவையுள்ளவன் தான் உயிரின் மேல் ஆசைப்படுவான். ஆனால் ஒன்றை மட்டும் ஞாபகத்தில் வைத்துக் கொள். எந்த விதமான குற்றமும் செய்யாத ஒருவனைத் தண்டனைக்குட்படுத்தினால் உன் பரம்பரைக்கே நாசம் வரும்’’

அரசன் சிறிது நேரம் சிந்தித்தான். பின்; ''முனிவரே எனது கண்களைத் திறந்து பெரும் பழியிலிருந்து எனது வம்சத்தைக் காப்பாற்றினீர்கள்'' என்று கூறி அவரது கால்களைப் பற்றினான்.

துறவி அரசனை ஆசீர்வதித்து விட்டுத் திரும்பினார்.

அரசன் அவரை அரண்மனையில் தங்கியிருக்குமாறு வேண்டினான்.

அவர் மறுத்து விட்டார்; ''எனது குடிசையில் உள்ள நிம்மதி எனக்கு வேறெங்கும் கிடையாது'' என்று கூறிப் புறப்பட்டார்.

அரசன் அவருக்கு ஏராளமான பொருட்களைக் கொடுத்தான். துறவி அவற்றைப் பெற மறுத்து விட்டார். அரசே எனக்குத் தேவையான அத்தனையும் என்னிடம் உள்ளன. இவையெல்லாம் எனக்கு தேவையில்லாதவை. அரண்மனையில் இவற்றைக் காப்பாற்றுவதற்காக ஏராளமான காவற்காரர்கள் இருக்கிறார்கள். இதை எனது குடிசையில் வைத்து விட்டுக் காவல் காக்க என்னால் முடியாது. தேவையில்லாத பொருட்களை வைத்திருந்தால் எனது நிம்மதி பறந்து விடும்'' என்றார்.

***பிறப்பு***

ஓர் ஆன்மாவானது மனிதப் பிறவியின் போது செய்யும் பாவபுண்ணியங்களுக் கேற்ப மறு பிறப்பெடுப்பதாக இந்துமதம் கூறுகிறது.

மறுபிறப்பை மறுக்கும் மதங்கள் உள்ளன. ஆனால் இந்துமதம் மறுபிறப்பு உண்டென்று வலியுறுத்திக் கூறுகிறது.

ஒரு மகானிடம் வெள்ளைக்காரப் பெண்ணொருத்தி மறு பிறப்புப் பற்றிய விளக்கம் கேட்டாள். அந்த மாகான்; ''நீ இன்று நகரத்தில் உள்ள பிரசவ விடுதிக்குச் சென்று அவதானித்து வா'' என்றார்.

அவ் வெள்ளைக்காரப் பெண் நகர ஆஸ்பத்திரிக்குச் சென்று வந்தாள். இருவருக்குமிடையில் உரையாடல் நடைபெற்றது.

''இந்தவாரம் ஆஸ்பத்திரியில் எத்தனை குழந்தைகள் பிறந்தன.?

''நூற்றியம்பது''

எத்தனை குழந்தைகள் சுகமாக வீட்டுக்குச் சென்றன?

''நூற்றியிருபது''

''முப்பது குழந்தைக்கு என்ன நடந்தது''

''ஐந்து குறைப் பிரசவங்கள் குறை மாதத்தில் பிறந்த சிசுக்கள் கண்ணாடிப் பெட்டியில் உள்ளன. இரண்டு பிள்ளைகளுக்கு காலில் வளைவு இருக்கிறது. ஒன்றிற்கு மேல் உதடு இல்லை. இரண்டு பிள்ளைகளுக்கு இதயத்தில் தூவாரம் உள்ளது......'' இப்படிச் சொல்லிக் கொண்டிருந்தாள் வெள்ளைக் காரப் பெண்.

''போதும் போதும்..... இவையெல்லாம் ஏன் நோய்வாய்ப்பட்டன? இவர்கள் ஒரு பாவமும் செய்யவில்லையே.... அப்பயிருக்க அவர்கள் ஏன் நோய் வாய்ப்பட வேண்டும் அதை நீ ஆராய்ந்து பார்த்தாயா, அன்று பிறந்த குழந்தை எப்படிப் பாவத்தைச் செய்ய முடியும் எனவே முற்பிறப்பில் செய்த பாவ புண்ணியங்களுக்கேற்பவே பிறவி கிடைக்கிறது'' என்றார் மகான்.

வெள்ளைக்காரப் பெண் பதிலேதும் சொல்லாமல் சென்றாள்.

கொலை, களவு, கற்பழிப்புப் போன்றவற்றைச் செய்வது தான் பாவம் என்றில்லை. வார்த்தைகள் மூலமும் மனத்தினாலும் மக்கள் தினமும் எத்தனையோ பாவங்களைச் செய்கிறார்கள்.

திருமால் பாற்கடலில் ஐந்து தலை நாகத்தின் மேல் சயனித்திருந்தார். திருமகள் அவரின் அருகில் இருந்தாள். திருமால் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தால் திருமகள் அவரின் தூக்கத்தைக் கலைக்கக் கூடாதென்பதற்காக அவதானமாக இருந்தாள். திடீரென்று திருமால் திடுக்கிட்டு எழும்பினார்.

திருமகள் பரபரப்புடன் எழுந்தார்; ‘‘பக்தன் ஒருவன் எனது ஆழ்ந்த நித்திரையைக் குழப்பி விட்டான்’’ என்று பெருமூச்சு விட்டார்.

‘‘அப்படியான பக்தன் யார் சுவாமி?’’ என்று கேட்டாள் திருமகள்.

‘‘தீவிரபக்தன் ஒருவன் இருக்கிறான் அவன் தினமும் எனது உண்டியலில் போடும் பணத்தின் சத்தம் என்னைக் குழப்புகிறது’’ என்றார் திருமால்.

‘‘அவ்வளவு பெருந்தொகைப் பணம் போடுகிறானா?’’ ஆச்சரியத்துடன் கேட்டாள் திருமகள். திருமால் சிரித்தார். பெருந்தொகை போடுபவனா பக்தன்? ஏறாவூரில் வாழும் நெல்லைநாதச் செட்டியார் வருடத்திற்கு ஒரு கோடிரூபா செலவில் திருப்பணி வேலைகள் செய்கிறார். ஆனால் இரண்டு கோடி ரூபா பெறுமதியான கலப்படம் செய்கிறார். பத்துச்சதமென்றாலும் கடுமையாக உழைத்து மனமுவந்து அளிக்கிறவன் தான் பக்தன். உலகத்தைப்படைத்து அதில் உயிர்களையும் படைத்து காத்து அருளி மறைத்து அழிக்கும் கடவுளால் தனக்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியாதா?’’ என்று கேட்டார் திருமால்.

நல்லவழியில் தேடிய பணத்தைக் கொண்டு தான் தானதருமம் செய்தல் வேண்டும். கோயில்களுக்குத் திருப்பணி வேலைகள் செய்தல் வேண்டும். கலப்பட மூலமோ, அல்லது வட்டிப்பணம் மூலமோ மற்றவர்களின் சொத்தை அபகரித்தோ தான தருமம் செய்யக் கூடாது. அப்படிச் செய்தால் அந்தப் புண்ணிய பலன் உரியவர்களைத் தான் சென்றடையும்.

இன்று பாடசாலைகளில் அலுவலகங்களில் தமது கடமையைச் செய்வோரின் தொகை குறைந்து வருகிறது. நாங்கள் எமது கடமைக்குக் கூலி வாங்குகிறோம் என்ற நினைப்பு பலருக்கு வருவதில்லை. நேர்மையான முறையில் சம்பாதிக்காத எதுவும் நிலைக்காது என்பதை நாம் மனதில் கொள்ளல் வேண்டும். பொருள் வரும் போது மகிழ்ச்சியாக இருக்கும். அது போகும் போது எம்மிடம் உள்ளதையும் கொண்டு சென்று விடும்.

மனிதன் மனம், வாக்கு, காயம் மூன்றாலும் தூயவனாக இருத்தல் வேண்டும். பொருளுக்காகப் பொய்ச் சாட்சி கூறுவது மகா பாவம்.

இன்னொருவரின் பொருளை கவரவேண்டுமென மனதால் நினைப்பது கூடப் பாவம். என்று பெரியவர்கள் கூறுகிறார்கள். களவெடுக்க இயலாதவனே மனதால் கவர நினைக்கிறான். மனிதனை மனம் தான் வழி நடத்துகிறது. மனமானது தனக்குத் தோன்றியபடி மனிதனை ஆட்டிப்படைக்கிறது. மனதை அடக்கியவனே மனிதன். தற்பொழுது ஞானி என்கிறோம். முன்னோர் எல்லோரும் மனதை அடக்கியாண்டமையால் அக்காலச் சமூகம் சமூகம் நன்நெறியில் வாழ்ந்தது.

எனவே மனிதன் பாவம் செய்யாது வாழப்பழகிக் கொள்ள வேண்டும். அப்படி வாழ்ந்தால் உலகம் சொர்க்கமாகி விடும். பின் நாம் சொர்க்கத்தைத் தேடியலையத் தேவையில்லை.

## ***உணவு***

இந்துமதம் உணவைப்பற்றி மிகவும் அதிகமாக வற்புறுத்திக் கூறுகிறது. அளவுக்கதிகமாக உணவை உண்பவனும் திருடனும் ஒன்று. உணவை ஒறுத்தவன் தேவனாகிறான். அளவுக்கதிகமாக உண்பவன் நோயாளியாகிறான். மிருகங்கள் பசிக்காமல் உண்பதில்லை. எமது முனிவர்களும் ரிஷிகளும் உணவை உண்ணாது பல காலம் வாழ்ந்துள்ளனர். இலை குழைகளையும் காய்கனிகளையும் கிழங்குகளையும் பச்சையாக உண்டு வாழ்ந்த பல மகான்கள் பற்றி புராண இதிகாசங்கள் சிறப்பாகக் கூறுகின்றன.

பகவத்கீதையில் கிருஷ்ணன் கூறுகிறான்; ‘‘அர்ச்சுனா அதிகமாக உண்பவனுக்கு யோகமில்லை. ஒன்றும் உண்ணாதவனுக்கும் இல்லை. அளவாக உண்பவனுக்கே யோகமுண்டு’’.

உணவு வகைகளைப் பற்றியும் அவற்றை உண்ணும் முறை பற்றியும் அதிக அக்கறை காட்டுவது இந்து மதம். உணவைக் கட்டுப்பாட்டுடன் உண்பதன் மூலமே இறைவனை அடையலாம் என்பதை வலியுறுத்துவது இந்துமதம்.

தின விரதம் எப்படி பிடித்தல் வேண்டும். வெள்ளிக்கிழமை விரதம் எப்படிப் பிடித்தல் வேண்டும். சோமவாரம், நவராத்திரி, சிவராத்திரி, ஆடிஅமாவாசை, சித்திராபௌணமி போன்ற விரதங்கள் எப்படி அனுஷ்டிக்க வேண்டும் என்று விளக்கமாகக் கூறுவது இந்துமதம். இவற்றை அனுஷ்டிப்பதன் மூலம் என்னென்ன பயன்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் கூறுவது இந்துமதம்.

பிள்ளைப் பேறில்லாத எத்தனையோ அரசர்கள் விரதங்களை அனுஷ்டித்து பிள்ளைகளைப் பெற்றிருக்கிறார்கள். இன்றும் பிள்ளைகள் இல்லாதோர் கந்தசட்டி விரதத்தை அனுஷ்ட்டித்து பிள்ளை பேற்றை அடைந்திருக்கிறார்கள்.

இந்துமத விதிகள் யாவும் சுக வாழ்வை மையமாகக் கொண்டவையே. மனிதனை விட விலங்குகள் உணவில் பெருங் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கின்றன. நோயுற்ற பூனை, நாய் போன்ற மிருகங்கள் உணவை உண்பதில்லை. புற்களை உண்டு வயிற்றில் உள்ளவற்றை வெளியேற்றுகின்றன. பெரும்பாலான நோய்களுக்கு மருந்தாக உணவை ஒழித்தல் அல்லது விதிமுறைகளுக்கமைய உணவை உண்ணல் கிராம வைத்தியமாகும்.

விரதம் என்பது மன ஒழுக்கம். சுவை மனதை அமைதியடைய விடாது. உணர்வுகளை தூண்டும். அதனால் தான் எம் முன்னோர் சுவைகளை குறைப்பதற்காகப் பச்சையாக உண்டனர். உப்பு உணர்வுகளையும் ஆசையையும் தூண்டும். இதனால் தான் விரதமிருப்போன் உணவில் உப்பைச் சேர்ப்பதில்லை. எண்ணெய் வகை உணவின் சுவையை அதிகரிக்கச் செய்வதால் அதிகமாக உண்ண வேண்டிய நிலை ஏற்படும். இதனால் உடலில் கொழுப்பு அதிகரிக்கும்.

சில நோய்களுக்கு சில உணவு வகைகள் உண்ணக் கூடாது என்பதை இந்து மதம் கூறி வைத்துள்ளது. ஒருவன் அரைவயிறு உணவும் கால்வயிறு நீரும் மிகுதியான கால் வயிற்றை வெற்றிடமாகவும் வைத்திருத்தல் வேண்டு மென்று எனது பாட்டனார் அடிக்கடி கூறுவார். என்னென்ன உணவு வகைகளை உண்ண வேண்டும்; என்னென்ன உணவு வகைகளைத் தவிர்த்தல் வேண்டும் என்றும் கூறும் இந்துமதம் சத்துணவைப் பற்றியும் கூறுகிறது. இறைவனுக்கு நிவேதிக்கப்படும் உணவுகள் யாவும் சத்துணவுகளே. கடவுளுக்கு நிவேதிக்கப்படும் உணவு வகைகளையே உண்ண வேண்டும். கடவுளுக்கு அர்ச்சிக்கப்படும் மலர்களையே சூடிக் கொள்ள வேண்டும் என்று இந்து மதம் கூறுகிறது. அபிடேகத்திற்குப் பயன்படுத்தப்படும் நீரில் பல்வேறு வகையான மூலிகைகள் கலக்கப்படுகின்றன. இதன் மூலம் பல நோய்கள் குணமாகின்றன.

ஆரம்ப காலத்தில் கோயில்களே வைத்தியசாலைகளாகவும் பராமரிப்பு நிலையங்களாகவும் கல்விக் கூடங்களாகவும் விளங்கின. கோயில் வீதிகள் குடியிருப்புக்களாகவும் விளையாட்டு மைதானங்களாகவும் திகழ்ந்தன. இந்து மதம் உணவைப்பற்றி மட்டுமல்லாது மனித விழுமியங்கள் அனைத்தையும் மிகமிக அவதானமாகவும் கட்டுப்பாட்டுடனும் கூறியுள்ளது. அத்துடன் ஊன் உண்ணலை முற்றாக தடை செய்த மதம் இந்துமதம். மாமிசத்தின் மூலம் தான் இன்று அநேகமான நோய்கள் உற்பத்தியாகின்றன. சுதேச வைத்திய முறை இந்து சமயத்துள் சங்கமமாகியுள்ளது. ஆதியில் முனிவர்களும், ரிஷிகளும், ஞானிகளும், போதித்த சுதேச வைத்திய உணவு முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் நோயின்றி வாழ்வதோடு இறைவனோடும் இணைய வாய்ப்பேற்படும். மாமிச உணவை உண்டு வந்த மேலை நாட்டினர் தற்பொழுது அதைத் தவிர்த்து வருகிறார்கள்.

### ***கல்வி***

கல்வியின் பயன் பணம் தேடுவது என்று பலர் நினைக்கிறார்கள். படித்துப் பட்டம் பெற்றவன் தான் சம்பாதிக்கத் தேவையில்லை என்று நினைக்கிறான். சீதனமாகப் பெருந் தொகைப் பணத்தையும் காணியையும் பூமியையும் பெற்றுக் கொள்ளலாம் என்று பெற்றவர்கள் நினைக்கிறார்கள்.

ஒருவனைக் கற்பித்தால் அது அவனுக்கு மட்டும் பொருளைத் தேடிக் கொடுக்க மாட்டாது, அன்பளிப்பாக அவனது பெண் சகோதரர்களுக்கும் பெற்றார்க்கும் பொருளைத் தேடிக் கொடுக்கு மென்று பெற்றவர்களும், கற்றவனின் சகோதரர்களும் நினைக்கிறார்கள்.

இந்த நினைவால் கற்றலின் நோக்கம் பாழ்பட்டுப் போகிறது. புதல்வரைப் பெறுதல் என்ற அதிகாரத்தில் வள்ளுவர் கூறுவதைப் பாருங்கள்.

''பெறும் அவற்றுள் யாம் அறிவது இல்லை அறிவு அறிந்த
மட்கட் பேறு அல்ல பிற''

ஒருவன் அறிவுள்ள மக்களைப் பெறுதல் தான் பெரும் பேறு என்கிறார் அத்துடன்

''தம்மின் தம் மக்கள் அறிவு உடைமை மாநிலத்து
மன் உயிர்க்கு எல்லாம் இனிது''

தனது பிள்ளைகள் உயர்ந்த அறிவினைப் பெற்றிருப்பது தன்னை விட மாநிலத்து மக்களுக்கு அதிக பயனைக் கொடுத்தல் வேண்டும் என்கிறார்.

‘‘மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவது தான் கல்வி. அது புத்தகங்களைப் படிப்பதா? இல்லை அல்லது அது பலவிதமானவற்றைக் குறித்த அறிவா? அதுகும் இல்லை. எத்தகைய பயிற்சியின் மூலம் மனவுறுதியின் வேகமும் அதன் வெளிப்படும் தன்மையும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு பயன்தரும் வகையில் அமைகிறதோ, அந்தப் பயிற்சி தான் கல்வியாகும்’’ என்கிறார் விவேகானந்தர்.

கல்வி நடத்தை மாற்றம் என்கின்றனர் உளவியலாளர்கள்.

எந்த ஒரு சமயமும் கல்வியைப் பணம் தேடும் கருவியெனக் கூறவில்லை.

எந்த ஒரு மகானும் கல்வியால் பணம் தேடு என்று சொல்லவில்லை. அப்படியிருக்க நாம் மட்டும் ஏன் கற்ற கல்வியைக் கொண்டு மற்றவர்களை வருத்த வேண்டும்.

சீதனமின்மையால் இன்று கன்னிப் பெண்களாக வாழ்வோர் எத்தனை பேர்.

மேலை நாட்டினர் கூறிய கல்விக் கொள்கைகளை நமது நாடும் பின்பற்றுகிறது. மேலை நாட்டின் கல்விக் கொள்கை பணத்தைத் தேடலே. அதனால் தான் அங்கு மனிதப் பண்புகள் இல்லாமல் இருக்கின்றன. அந்தக் கல்வியால் தான் இன்று எமது நாட்டிலும் பண்புகளைக் காண முடிவதில்லை.

ஐம்பது வருடங்களுக்கு முன்பு இந்துசமயக் கல்வி புகட்டப்பட்டது. இந்து சமயம் மனித வாழ்வை நான்காக வகுத்து அவற்றின் கடமைகளை விளக்கமாகக் கூறுகிறது. பிரமச்சாரி ஒருவன் குருவின் வீட்டில் தங்கியிருந்து சகல கல்விகளையும் கற்றான்.

கிரகஷ்தன் தானும் வாழ்ந்து மற்றயோரையும் வாழ வைத்து தனது பிள்ளைகளுக்கு கல்வியூட்டினான்.

வானப்பிரதிஷ்டன் காட்டுக்குச் சென்று தவம் செய்தான். மேலதிகமாகக் கற்றான். சன்னியாசம் மேற் கொண்டவனும் கற்றலையே முக்கியமாகக் கொண்டான். முனிவர்கள் குருவாக இருந்ததை நாம் இதிகாச புராணங்களில் காண்கிறோம்.

இன்றைய கல்வி எந்த விஞ்ஞானப் புதுமையைச் செய்துள்ளது. இதிகாச புராணங்களில் சொல்லப்படாதவை ஏதாவது இப்பொழுது நடை பெறுகிறதா. அதை விட மருத்துவத்துறை அந்நாளில் பூரண வளர்ச்சி கண்டிருந்தது.

பச்சிலைகளும் வேர்களும் மனிதனின் எல்லா நோய்களையும் குணமாக்கின. நாகரீகமோகத்தால் அவற்றை விட்டு விட்டு மேலைத்தேச மருந்துகளை பாவிப்பதால் இன்று அம் மருந்துகளாலேயே பல புதிய நோய்கள் உற்பத்தியாகியுள்ளன.

இன்றைய மருத்துவம் என்ன சொல்கிறது. நாற்பது வயதிற்குப் பின்பு உணவில் சுவையைக் குறை. தேகப் பயிற்சி செய். அதை விட கடைசியாகக் கூறுவது; ‘‘நாம் எல்லாம் செய்து விட்டோம் இனிமேலே உள்ளவன் தான் காப்பாற்ற வேண்டும்’’.

இப்படி ஒரு இந்து மருத்துவன் கூற மாட்டான். நோயாளியை சுகமடையச் செய்யும்படி தான் வணங்கும் கடவுளுக்குக் கூறுவான். இப்படிக் கூறியவர்களைப் பற்றி நாம் இதிகாச புராணங்களில் காண்கிறோம்.

பண்டைய காலத்தில் கோயில்களே வைத்தியசாலைகளாகத் திகழ்ந்தன. அபிசேகத்திற்கு மூலிகைகள் கலந்த நீரே பாவிக்கப்பட்டது. ஓம குண்டத்தில் மூலிகைகள் எரிக்கப்பட்டன. இவற்றின் புகையும் கற்பூரப் புகையும் பல நோய்களைக் குணமாக்கின.

வீதியைச் சுற்றி வலம் வருதல், அட்டாங்க நமஸ்காரம் செய்தல், பஞ்சாங்க நமஸ்காரம் செய்தல், சரிகைத் தொண்டுகள் செய்தல் யாவும் உடல் நலத்திற்கான தேகப்பயிற்சிகளே.

கோயில் கிரிகைகள், கட்டிட அமைப்புக்கள், வணங்கும் முறைகள் யாவும் ஒரு கட்டமைப்புக்குள் மனிதனை வாழ வைக்க வேண்டு மென்ற நோக்குடன் உருவாக்கப்பட்டவை.

இந்துக் கல்வியின் நோக்கம் மனிதனைப் பண்புடையவனாக்குவது. பிறர் மீது அன்பு செலுத்தச் செய்வது. பிறர்க்கு உதவி செய்வது சுருங்கச் சொன்னால் மனிதனை தேவனாக மாற்றுவது. ஐம்பது வருடங்களுக்கு முன்பு நாட்டில் ஒழுக்கம் குறையவில்லை. மொழியை அது ஆங்கிலமாக இருந்தாலென்ன தமிழாக இருந்தாலென்ன இலக்கண சுத்தத்துடன் பேசவும் எழுதவும் முடிந்தது. இன்றைய கல்வியாளர்களில் பெரும்பான்மையானோர்க்கு தமிழையே இலக்கண சுத்தத்துடன் எழுதத்

தெரியாது. எனது மாமியார் ஆயிரத்துத் தொழாயிரத்து இருபதாம் ஆண்டு ஐந்தாம் வகுப்புப் படித்தவர். ஆங்கிலத்தில் நன்றாக உரையாடுவார். எழுதுவார் தமிழ் இலக்கணம் இலக்கியம் நன்கு கற்றவர். நான் உயர்தரப்பரீட்சைக்கு தமிழ் இலக்கணம் அவரிடம் தான் கற்றேன். இந்த நிலை இன்று இல்லை. படித்தவர்கள் கூட மதிப்பான தமது தொழில்களைக் கைவிட்டு விட்டு பணத்திற்காக வெளிநாடுகளுக்குச் சென்று ஏதேதோ செய்கிறார்கள். இது கல்வியின் நோக்கமல்ல.

***காதல்***

காதலனுக்கு காதலி எப்போதும் தேவதையாகத் தான் தோன்றுவாள். அந்தத் தேவதை உள்ளத்தில் வாழ்ந்தால் காலமெல்லாம் தேவதையாகவே தோன்றுவாள். உடலில் வாழ்ந்தால் ஓரிரு நாட்களில் அலங்கோலமாகி விடுவாள்.

காதல் என்பது என்ன?

அன்பு என்று பெரியவர்கள் சொல்கிறார்கள்.

‘‘அன்பே சிவம்’’ என்கிறார் திருமூலர்.

ஒரு கணவன் மனைவி மீது செலுத்தும் அன்பானது இறைவன் மீது செலுத்தப்படுவது என்கிறது கேணோ உபநிடதம்.

‘‘காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி’’ என்கிறார் சம்பந்தர்.

எந்த உயிர்களிடத்தும் செலுத்தும் அன்பும் இறைவனைச் சென்றடையும் என்று இந்துசமயம் கூறுகிறது. அதனால் தான் கொன்று தின்னாமையை வலியுறுத்துகிறது.

கடவுளை காதலனாக நினைத்துருகிப் பாடும் சம்பரதாயத்தையுடையது வைணவ மதம். பல ஆழ்வார்களது பிரபந்தங்கள் காதல் சுவை மிக்கவை.

இந்துத் தெய்வங்கள் பல காதல் வாழ்க்கை வாழ்ந்தவர்கள். சிவன் உமையம்மை மீது காதல் கொண்ட வரலாற்றையும் முருகன், வள்ளி, தெய்வானை மீது கொண்ட காதல் தன்மையையும் படித்தார்கள் இந்துக்களாகிய நாம். அத்துடன் சிவன் சுந்தரருக்காகக் தூது சென்றமையும் நாம் அறிவோம்.

காதலைப்பற்றி இதிகாசங்களும் புராணங்களும் மிகவும் நுட்பமாக எடுத்துக் கூறுகின்றன. காதலால் தான் படைத்தல் தொழில் நடை பெறுகிறது. உயிர்களிடத்தில் காதல் உணர்வில்லாது போனால் உலகம் அழிந்து விடும். காதல் இல்லாத வாழ்வு உப்பில்லாத உணவைப் போன்றது.

திருக்கோவையாரில் காதலின் மகத்துவம் உபதேசிக்கப்படுகிறது. இந்துமத வரலாற்றை எடுத்தால் கடவுள் மாரே கால் கொண்ட வரலாற்றை நாம் கண்டு கொள்ள முடியும்.

கோயில் சுவர்கள், சிற்பங்கள், சித்திரங்கள், கோபுரங்கள், தேர்கள் போன்றவற்றைப் பாருங்கள். அவற்றில் எமது கடவுளின் காதல் லீலைகள் மிகவும் அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன.

சிவனும் உமையும் களிறும் பிடியும் காதல் செய்யும் ஓவியத்தைக் கண்டு மயங்கித் தாமும் களிறும் பிடியுமாக மாறிக் காதல் செய்தமையால் வேழ முகத்தவன் பிறந்ததாக விநாயக புராணம் கூறுகிறது.

காதலைப் பக்தியாக கொள்வது இந்து சமயம். பதி என்றால் கடவுள், கணவன் என்று சொல்லப்படுகிறது. பதிபக்தி என்றால் கணவன் மீது மனைவி கொண்ட காதலைக் குறிக்கும். தமிழில் சபையில் பேசக் கூடாத சொற்களை எப்படிக் கூற வேண்டு மென்று நல்நூலார் கூறியுள்ளார். சமயமும் அதே போலக் காதலை மறைத்துக் கூறுகிறது.

காதலை அன்பு, பக்தி என்று எமது மதம் கூறுவதை ஏற்றால் எல்லையில்லாத இன்பம் கிடைக்கும்.

எனவே இன்றைய இளைஞர்கள் காதல் கொள்ளக் கூடாதா என்று கேட்கலாம். அத்துடன் பெற்றோர் பலர் காதல் திருமணத்தை அங்கீகரிப்பதில்லை என்ற குற்றச் சாட்டும் உண்டு.

காதல் புனிதமானது. மனிதனைப் பூரணப்படுத்துவது, அப்படியாயின் அதற்கேன் தடை.

தடையை யாரும் விதிக்கவில்லை. அதற்கான தகுதியைப் பெற்ற பின்பு காதல் கொள்ளுங்கள். காதல் என்பது திருமணத்திற்கு முன்பு ஒரு பெண்ணை விரும்புவதும், திருமணமான பின்பு தன் மனைவியை உயிருக்குயிராய் நேசிப்பதும் காதல் தான்.

காதல் என்பதை அறியாத பலர் திருமணத்திற்கு முன்பு ஒரு பெண்ணின் மீது செலுத்தப்படும் அன்பே காதல் என நினைக்கிறார்கள்.

காதல் என்பது பாசத்தின் முதிர்ச்சி என்கிறார் கவிஞர் கண்ணதாசன்.

அளவுக்கதிகமான பாசம்; சொற்களால் வர்ணிக்க முடியாத உறவு; இலக்கணம் கூற முடியாத பற்று; எதையும் எவ்வேளையிலும் செய்து கொடுக்கத் துடிக்கும் மனம்; சுயநலம் கருதாத தன்மை. இது தான் காதல்.

இந்த வகையில் இறைவன் மீது நாயன்மார்கள் கொண்ட அன்பு காதல்.

பிள்ளைகள் மீது பெற்றார் வைத்த அன்பு காதல்.

ஒரு பெண் மீது நலன் கருதாது வைத்த அன்பு காதல்.

காதலுக்காக அழிந்த சாம்ராட்சியங்கள் எத்தனை என்று வரலாறு எமக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

காதலுக்காக வாழ்ந்த மாந்தரின் வாழ்க்கையை நாம் அறிந்து வைத்துள்ளோம். அவர்கள் அழியாத வரலாற்றுப் புரிசர்களாக மக்களின் மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

மகுடிக்குக் கட்டுப்பட்ட பாம்பாக அன்பான காலிக்கு (மனைவிக்கு) அடங்காத காதலன் (கணவன்) இருக்க மாட்டான். காட்டாற்று வெள்ளம் போல் தறி கெட்டு ஓடும் உணர்வுகளுக்கு கருணையான அவளது விழிகள் அணையாக அமையும் காட்டுத்தீ போல் கொழுந்து விட்டெரியும் ஒருவனது கோபத்திற்கு அன்பானவரின் புன்சிரிப்பு பெருமழையாய் அத்தீயை அணைக்கும்.

கிணற்று நீரை இறைத்தால் எங்கும் பரந்து செல்லுமே தவிர பயிர்களுக்கு பயன் தரமாட்டாது. பயிர்களுக்கு பயன்தர வேண்டுமாயின் வாய்க்கால் அமைத்தல் வேண்டும். அந்த பயன் தரும் வாய்க்காலாக அமைத்து காலமெல்லாம் மக்கள் இனத்தவர், பெற்றோர்க்கு உதவுவளாக இருப்பாள் அன்பான மனைவி.

## ***குற்றங்கள்***

மனிதன் எப்பொழுதும் தவறுகள் செய்பவனாகவே இருக்கிறான். தவறுகள் செய்யாமல் உலகில் வாழ முடியாது.

மகாபாரதக் கதாநாயகர்கள் யாபேரும் தவறுகள் செய்தவர்கள்.

தருமன் சூதாடினான்.

அரிச்சுனன் பலமுறை பல தவறுகள் செய்துள்ளான்.

சகாதேவன் முக்காலமும் உணர்ந்தவன். எனினும் நச்சுப் பொய்கையில் நீரை அருந்த வேண்டாம். என யக்சன் கூறிய போதும் எதிர்காலத்தை உணராது நீரை அருந்தினான்.

இவர்கள் பல தவறுகள் செய்த போதும் தாம் செய்ய தவறுகளை உணர்ந்து திருந்தியமையால் இன்று மக்களால் போற்றப்படுகிறார்கள்.

துரியோதனன் ஆயிரமாயிரம் தவறுகள் செய்த போதும் அவன் அவற்றை தவறு என்று ஏற்றுக் கொள்ளவும் இல்லை. திருந்தவும் இல்லை.

சூதாடி நாடுநகரிழந்த தருமன் இறுதியாகப் பாஞ்சாலியையும் பணயம் வைத்துச் சூதாடிப் அவளையும் இழந்து விடுகிறான். அடிமைப்பட்டவர்களைக் கொண்டு தனது வேலைகளைச் செய்விப்பது தான் தர்மம். அதை விடுத்து அடிமைப்பட்ட பெண்ணை சபையின் நடுவே துகிலுரிந்தது எந்த

வகையில் நியாயமானது. அதை விடச் சபையில் இருந்த பெரியவர்கள் எவராவது பாஞ்சாலி கதறிக் கேட்டும் உதவிக்குப் போகவில்லை. இது ஏன்? மிகவும் பலசாலிகளான அவளது துணைவர்கள் ஐவரும் பேசாதிருக்கும் போது நாம் ஏன் பேசுவான் என்று நினைத்தார்களா?. அல்லது தர்மம் வெல்லும் என்று அமைதியாக இருந்தார்களா?

தீவினைகள் உச்சக் கட்டத்தை அடையும் போது நான் அவதாரமெடுத்து மக்களைக் காப்பேன். என்று கண்ணபிரான் கூறி, அதன்படி நடந்தும் காட்டியுள்ளார். இப்பொழுது தீவினை உச்சக்கட்டத்தில் உள்ளது. ஒரு பெண்ணை நூற்றுக்கணக்கான அன்னியர் ஆடவர்களின் முன் துகிலுரிவது எவ்வளவு கொடுமை. அந்தக் கொடுமையை நீக்க கட்டாயம் கண்ணன் வருவான். என்ற நம்பிக்கை தருமனின் மனதில் உறுதியாக இருந்தமையால் தான் கொதித்தெழுந்த தம்பியாரை அடக்கி வைத்திருந்தான். சபையில் இருந்த பெரியோர் தம்முடைய இயலாமையை உணர்ந்து கண்ணனிடம் மனமுருகிச் சரணடைந்தனர். இதை மற்றையோர் பாஞ்சாலி துகிலுறுவதைக் காணச் சகிக்காமையினாலேயே பெரியவர்கள் கண்களை மூடிக் கொண்டதாக நினைத்தனர்.

பாஞ்சாலியைத் துகிலுரிய முடியாதென்பதை உணர்ந்த பின்பும், பாஞ்சாலிக்கு தெய்வ அனுக்கிரகம் உண்டென்று தெரிந்த பின்பும் துரியோதனன் திருந்தவில்லை.

கண்ணன் பாண்டவர்களுக்காகத் தூது சென்று மூன்று நாடுகளைக் கேட்டான். துரியோதனன் அதை மறுத்த போது மூன்று கிராமங்களைக் கேட்டான். அதையும் அவன் மறுத்த போது மூன்று வீடுகளைக் கேட்டான். அதுவும் கொடுக்கப் படாததால் பாரதப் போர் மூண்டது. கௌரவர்கள் சகலவற்றையும் இழந்ததோடு மாண்டு போயினார்.

இதே போல் இராவணனுக்கு பெரியவர்கள் பலர் அவன் செய்வது தவறு என்று சுட்டிக் காட்டிய போதும் தான் தவறு செய்வதை அவன் ஒத்துக் கொள்ளவில்லை. அதனால் அவனும் அழிந்தான்.

சாதாரணமானத் தவறுகள் பெருங்குற்றமாகக் கருதப்படாவிட்டாலும் அவை பெரிய குற்றங்களைச் செய்ய வழிவகுக்கும். எனவே மனமறிந்து தவறுகள் செய்யாமல் இருக்கப் பழகிக் கொள்ளல் வேண்டும். அதை விட இன்னொருவர் எமது குற்றம் குறைகளைக் கூறும் போது அவற்றை அமைதியாகக் கேட்டறிந்து அவற்றைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். பொதுவாகக் குற்றங்களைச் செய்வோர் அவற்றை ஒப்புக் கொள்வதில்லை. அத்துடன் தம்மைச் சார்ந்தவர்கள், வேண்டியவர்கள் செய்யும் தவறுகளை அவர்கள் ஏற்றுக் கொள்வதும் இல்லை. இது சம்பந்தப்பட்டவர்களை மேலும் மேலும் தவறுகள் செய்யத் தூண்டும். அதனால் அவர்கள் சமூகத்தில் குற்றவாளிகளாக மாறிவிடுவார்கள்.

தவறுகள் மன்னிக்கப்பட வேண்டியவையே தவிரத் தண்டிக்கப்பட வேண்டியவை அல்ல என்பதைத் தண்டிப்போர் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

தவறுகள் செய்வது குற்றமல்ல. தவறென்று தெரிந்து செய்வது தான் குற்றமானது. செய்யும் தவறுகளை உணர்ந்து திருந்தினால் பாண்டவரைப் போல மேன்மை அடையலாம். தவறுகளைச் சரியென்று சொல்லி திரும்பத் திரும்பச் செய்வது குலத்திற்கே நாசம் என்பதைத் துரியோதனனின் அழிவிலிருந்து தெரிந்து கொள்ளல் வேண்டும்.

***நினைத்துப் பார்***

நண்பனே!

சிறிது சிந்தித்துப் பார். பதினைந்து மாதங்களுக்கு முன் நீ எப்படியிருந்தாய்.

பதினைந்து வருடங்களுக்கு முன் எப்படி வாழ்ந்தாய்.

பதினைந்து வயதில் எப்படி இருந்தாய்.

அதற்கு முன்னைய நிலையைப் பற்றி நான் உன்னோடு பேசப் போவதில்லை. ஏனென்றால் அது உனது அறியாப்பருவம்.

பதினைந்து வயதில் நீயும் நானும் வயல் வெளிகளில் அலைந்து திரிந்தோம். தென்னை மரங்களில் ஏறி களவாக இளநீர் பறித்துக் குடித்தோம். மரவள்ளிக் கிழங்கை களவெடுத்துச் சுட்டுத் தின்றோம். வயல் கிணறுகளில் குளித்தோம்.

பதினைந்து வருடங்களுக்கு முன் நாமிருவரும் சேர முடியாத நிலை. குடும்பப் பொறுப்பு. உனது வீடு மண்கொட்டில், ஆறு பிள்ளைகள் கஞ்சிக்குக் கூட வழியில்லாத நிலைமை. பிள்ளைகள் பாடசாலைக்குப் பதிலாக வயல்வெளிகளுக்குச் சென்றனர்.

குடியிருந்த நிலத்தை வாங்க முடியாததால் காணிக்காரன் உன்னை வீட்டால் துரத்தி விட்டான். அம்மன் கோயில் அரச மரநிழலில் இந்தாய்.

உனது மகளின் அழகில் சொக்கிப் போன திருமணமான நிலச் சுவாந்தன் ஒருவன் உங்கள் குடும்பத்தைத் தனது காணியில் குடியமர்த்தினான். அத்துடன் உனது மூத்த மகனையும் வெளிநாட்டுக்கும் அனுப்பினான். பின் உனது மூத்தமகள் வெளிநாட்டுக்குச் சென்று திருமணம் செய்தாள்.

பதினைந்து தினங்களுக்கு முன் பத்து ஏக்கர் காணியைப் பத்துக் கோடி ரூபாவுக்கு விலை பேசியுள்ளாய்.

இதை யெல்லாம் உன்னால் நம்ப முடிகிறதா...? இது எப்படி நடந்தது. சிந்தித்துப் பார்த்தாயா?

எது எது எப்பெப்ப நடக்க வேண்டுமோ அதது அப்பப்ப நடக்கும் என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். பணம் வந்து விட்டதென்று நீ கர்வமடைந்திருக்கிறாய். நீ முன்பு உப்பிற்கும் புளிக்கும் அலைந்த காலத்தை நினைத்துப் பார். அந்த நேரம் கஞ்சிக்கு வழியில்லாமல் உனது பிள்ளைகள் பசியால் துடித்த போது ஒரு பிடி அரிசி தந்தவர்களை நினைத்துப் பார்.

அவர்கள் அன்று உனக்கு உதவி செய்திரா விட்டால் இன்று பத்துக் கோடி ரூபாவுக்கு உன்னால் காணி வாங்க முடியுமா?

மனிதரில் பலர் முன்னேறுவதற்குக் காரணமாக இருந்தவர்களை மறந்து விடுகின்றனர். உதவி செய்தவனை மறந்தால் அவன் நல் வாழ்வு வாழமாட்டான்.

எனக்கு நண்பர்கள் பலர். இன்னொரு நண்பருக்கு நான்கு பிள்ளைகள். மூவர் வைத்தியர்கள். நாலாவது மகன் பாடசாலை நாட்களிலே குடிகாரன்.

எனது நண்பர் மூவரைப் பற்றியும் தான் உயர்வாகக் கதைப்பார்.

ஊரில் பலர் பெண் கேட்ட, மறுத்த அவர் பெரிய பெரிய இடங்களில் பெண் எடுத்தார்.

மூத்தவனின் மனைவி பெரிய குடும்பத்தவள். பல கோடி ரூபா சொத்துள்ளவள். ஆனால் மனநோயாளி. தற்பொழுது அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள். இரண்டு மனநோயாளிகள்.

இரண்டாவது மகனின் மனைவியும் பெரும் பணக்காரி. விபத்தொன்றில் ஒரு காலை இழந்து விட்டாள்.

மூன்றாவது மகனின் மனைவி ஆடம்பரப்பிரியை. அதனால் சொத்துக்கள் கரைந்து விட்டன. எனது நண்பரைப் பராமரிக்க யாரும் இல்லை. மூன்று பிள்ளைகளும் வெளிநாட்டில் இருக்கின்றனர். மூவரின் வீடுகளுக்கும் சென்றார்.

அவர்கள் இவரைத் தனியாக ஒரு வீடு எடுத்திருக்கும் படி கூறினர். மூன்று நாடுகளிலும் அதே நிலை. ஆறாறு மாதங்கள் ஒவ்வொரு பிள்ளைகள் வாழும் நாட்டிலும் தனியாகத் தங்கினார். பின் ஊருக்கு வந்தார்.

குடிகார மகனின் வீட்டுக்கு வந்தார். மருமகள் அவரை அன்போடு உபசரித்தாள். வசதியாக வாழும் அவள் அவரைப் பூவைப் போலப் பேணிக் காத்தாள்.

வாழ்க்கை இப்படியாக வரும் என யாரும் கணிக்க முடியாது. நாம் எப்படி வாழ்கிறோமோ அப்படியே வாழ்க்கையும் அமைந்து விடுகிறது.

பிள்ளைகள் பெரும் பெரும் உத்தியோகத்தில் இருந்தாலும் நாம் பிள்ளைகளை வளர்த்த முறையின் படி தான் வாழ்க்கை அமைகிறது.

வசதியாக வாழும் பிள்ளைகளால் பேரின்பம் வரும் என்று நினைக்கிறோம். வசதியான பிள்ளைகள் பெற்றாரால் துன்பம் வரும் என்றும் நினைக்கிறார்கள்.

எனது நண்பர் ஒரு நாயை வளர்த்தார். அதற்குப் பச்சையாக இறைச்சி வகைகளைக் கொடுத்து வந்தார். அது சமைத்த இறைச்சியைத் தின்ன மறுத்தது.

இன்னொரு நண்பர் புலால் உணவு கொடுக்காமல் நாயை வளர்த்து வந்தார். அந் நாய் புலால் உணவை உண்பதில்லை.

வெளிநாட்டு நண்பர் ஒருவர் பைக்கற்றில் அடைக்கப்பட்ட உணவு வகைகளைக் கொடுத்து நாயை வளர்த்து வந்தார். அந்நாய் வேறு உணவுகளை உண்ண மறுத்தது.

பழக்கம் தான் யாவற்றிற்கும் காரணம். நாம் பிள்ளைகளை வளர்க்கும் போது அவற்றிற்கு நல்லவற்றைச் சொல்லி வளர்க்க வேண்டும். எமது வளர்ப்பிற்கேற்பத்தான் அவர்கள் வளர்வார்கள். அவர்கள் வளர்த்த பின் கெட்டவர்களாகி விட்டார்களே என்று யாரும் சொல்லக் கூடாது.

அரசனும் ஆண்டியாவான்; ஆண்டியும் அரசனாவான். உலகம் வட்ட வடிவமானது; சுழன்று கொண்டே இருப்பது ஒரு பகுதிகளில் இருள்; இன்னொரு பகுதியில் வெளிச்சம்.

இந்தியாவில் ஒரு மாநிலத்தில் வெப்பத்தால் பலர் இறக்கின்றனர். இன்னொரு மாநிலத்தில் குளிரால் இறக்கின்றனர். இன்னொரு மாநிலத்தில் வெள்ளப் பெருக்கால் இறக்கின்றனர். இங்கும் கோப்பாயில் பெய்யும் மழை ஒரு மைல் அருகில் இருக்கும் நீர்வேலியில் பெய்வதில்லை.

உலகம் இன்பமானது; நரக லோகமும் இங்குள்ளது; சொர்க்கமும் இங்கே தான் உள்ளது. நீ வாழும் வாழ்க்கையின் மூலம் அவற்றை அனுபவிக்கலாம்.

மரணமடைந்த பின் உயிர் மறுபிறப்பெடுக்கிறது. என்று இந்து மதம் கூறுகிறது. மறுபிறப்பைப் பற்றி நீ ஏன் சிந்திக்க வேண்டும். நீ அறியாததைச் சிந்திக்காதே. அறிந்ததைப் பற்றி நன்கு சிந்தி அறியாதவை யெல்லாம் உனக்குப் புலனாகும்.

உனக்கு ஒன்று சொல்கிறேன். பூமியில் மனிதன் படைக்கப்பட்ட நாள் முதல் இன்று வரை அழியாமல் வாழ்பவர்கள் பலர் இருக்கிறார்கள். திருவள்ளுவர், ஔவையார், கம்பர், பாரதியார்..., அரிச்சந்திரன், மார்க்கண்டேயர் இப்படி எத்தனையாயிரம் பேர் எம் உள்ளத்தில் வாழ்கிறார்கள். இவர்களில் ஒரு வரைப் போல வாழ் என்று தான் இந்து மதம் கூறுகிறது.

பத்துக் கோடி ரூபாவுக்கு காணி வாங்குபவனின் பெயரும், பத்துப் பிள்ளைகளைப் பெற்று உயர் நிலையில் வாழ்ந்தவனின் பெயரும் நிலைப்பதில்லை. பசியாலும் பட்டினியாலும் வருந்திய போதும் நல்லவற்றைச் செய்த பலரின் பெயர்கள் காலங் காலமாக நிலைத்திருக்கின்றன. இன்னும் இரண்டாயிரம் வருடங்கள் சென்றாலும் நிலைத்திருக்கும்.

எனவே அவற்றை நினைத்துப் பார். நிம்மதி கிடைக்கும். நிம்மதியால் இன்பம் கிடைக்கும். நினைவு தான் வாழ்வு. எனவே நல்லவற்றை நினை.

நேற்றுச் சந்தித்த ஒருவர் சொன்னார் பத்து வருடங்களுக்கு முன் உனது கூரை வேயப்படாமையால் மழை பெய்த போது வீட்டுள் மழை நீர் வெள்ளமாக நின்றதாம். அதற்கிரங்கிய அவர் உனக்கு இருநூறு ரூபா தந்தாராம். இன்று வரை நீ அதைக் கொடுக்கவில்லை. தந்தவர் இப்பொழுதும் வறுமையில் தான் இருக்கிறார். ஆனால் அவர் உன்னிடம் அதைக் கேட்க விரும்பவில்லை. இப்பொழுது சொல்லு நீ பணக்காரனா? இன்று ஆகாய விமானத்தில் நீ பயனிக்கலாம். ஆனால் அன்று நீ நடக்கக் கூட முடியாத நிலையில் இருந்ததை நினைத்துப் பார்க்க வேண்டும்.

அதை விட இன்னொருவரிடம் நீ உனது மனைவியின் மூக்குத்தியை ஈடு வைத்துப் பத்து ரூபாய் வாங்கினாய். சில காலம் செல்ல அவர் அவ் மூக்குத்தியை உன்னிடம் தந்து விட்டார். நீ இன்று வரை அந்தப் பத்து ரூபாவைக் கொடுக்கவில்லை. நாம் ஏழைகளாகலாம்; பணக்காரராகலாம் அது பெரிதல்ல. எனது பேரனார் சொல்வார்; “பஞ்சம் போகும்; பஞ்சத்தால் வந்த வடுப் போகாது” என்று.

எனவே நினைத்துப்பார். நினைத்துப் பார்த்தாயேயானால் உனது நிலை புரியும்.